27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27 | பாலம் 03 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 01, 2017

# அமெரிக்காவின் 45ஆவது அதிபராக டொனால்ட் ட்ரம் பதவியேற்றார்

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற டொனால்ட் ட்ரம், அமெரிக்காவின் 45ஆவது அதிபராக பதவியேற்றார். இதற்கு முன்னதாகத் துணை அதிபராக மைக் பென்ஸ் (Mike Pence) பதவியேற்றுக்கொண்டார். ட்ரம் சம்பிரதாய நிகழ்வாக ஜனவரி 19, 2017 இரவு வெள்ளை மாளிகை அமைந்துள்ள தெருவில் உள்ள 'Blair House' இல் தங்கினார். அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்கும் அனைவரும், இங்கு ஒருநாள் இரவு தங்குவது



வழக்கம். ஜனவரி 20, 2017 காலை 8:30 மணிக்கு புனித ஜோன் எபிஸ்கோயல் (St. John's Episcoeal) தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பிரார்த்தனையில் டொனால்ட் ட்ரம், அவரது குடும்பத்தினர் மற்றும் அமைச்சரவையில் இடம்பெறுவோர் பங்கேற்றனர்.

இதன்பின்னர் வெள்ளை மாளிகையில் ட்ரம், அவரது மனைவி மற்றும் அமைச்சரவையில் இடம்பெறுவோருக்கு, அதிபர் பதவியிலிருந்து விடைபெறும் பராக் ஒபாமா, அவரது மனைவி மிச்செல் சம்பிரதாய முறையில் தேநீர் விருந்து அளித்தனர். பின்னர் பதவியேற்பு விழா நடைபெறும் வோஷிங்டன் டி. சி. இன் கப்பிற்றல் ஹில் பகுதிக்கு, ட்ரம் மற்றும் ஒபாமா ஆகியோர் பாதுகாப்புப் புடைசூழ காரில் பயணித்தனர். கப்பிற்றல் ஹில் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். முன்னாள் அதிபர்களான ஜோர்ஜ் புஷ், பில் கிளின்ரன், ஹிலாரி கிளின்ரனும் பதவியேற்பு விழாவில் பங்கேற்றிருந்தனர்.

ஜனவரி 20, 2017 காலை 11:45 மணியளவில் பதவியேற்பு விழா தொடங்கியது. ஆரம்ப கட்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு துணை அதிபராக மைக் பென்ஸ் பதவியேற்றுக்கொண்டார். இதை யடுத்து அமெரிக்கத் தலைமை நீதிபதி John G. Roberts, ட்ரம்புக்கு அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அப்போது அரசு சார்பில் பீரங்கி குண்டுகள் முழங்க மரி யாதை கொடுக்கப்பட்டது. மக்கள் ஆரவாரம் செய்தனர். இதையடுத்து அவர் நன்றியுரையாற்றினார். நியூயோர்க்கைச் சேர்ந்த தொழிலதிபரான டொனால்ட் ட்ரம், கடந்த நொவம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் யாரும் எதிர்பாராத வகையில், அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரும் ஜனநாயகக் கட்சி வேட்பாளருமான ஹிலரி கிளின்ரனை வென்று அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பதவிக்காலம் முடிவடைந்த அதிபர் ஒபாமா அவரது மனைவி மிச்செல் ஒபாமா ஆகியோரும் பங்கேற்றனர். நிகழ்ச்சி முடிவடைந்த பின்னர் இராணுவ ஹெலிகொப்டர்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

IP GOLDHOUSE 905-554-5890

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721  Fax: 647-351-3099
mortgage@nesan.ca  www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.


TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154


FREE! Home Appraisal
Ragu Rajaguru
Mortgage Agent - LIC # M15002022
416-712-2006

DENTAL OFFICE
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca


CARACO
TRIDEL BUILT FOR LIFE
1110 KING WEST
Via Bloor
WOODHAVEN
Tridel Via Bloor Condos
37 Story Condo Development
Located between two subway stations
Close to shopping/restaurants/DVP
Brand New House Starting: $289,900
புதிய வீடுகளின் விலைகள் $289,900 லிருந்து ஆரம்பம்.
3 Bed 2 Wash
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். பதிவுகளுக்கு அழையுங்கள்
S.Kajaruban
Sales Representative
647-338-5252(KAJA)
www.facebook.com/condohouse.ca
skajaruban@gmail.com
HOMELIFE
HomeLife/GTA Realty Inc.*
5215 Finch Ave East, #203 Toronto ON. M1S 0C2
* Independently Owned & Operated


Selling or Buying
26 Room Motel + 4 BR Apartment
MOTEL
Near Hwy 401, East of GTA, $1.3 M
Investment/ Development Opportunity
INVESTMENT
4.29 Acres, Rental Income $4200+/M
$550,000
FULLY RENTED
4 Units Apt + Commercial
$329,000
All Brick 50' Lots
from $411,900. Only one hour from Ajax, Occupancy Nov 2017.
Thas ThiruNavukkarasu
Sales Representative Dip-in-Eng.(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract


Call Pat ... for all your Real Estate needs
for Rental & Leasing
வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க...
Pat Murugesu
Sales Representative
Cell: 416-271-7452
pat.murugesu@gmail.com
www.hlgtarealty.com
HomeLife/GTA
Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
Independently owned operated
5215 Finch Ave. East, #203 Toronto ON M1S 0C2

# அமெரிக்காவின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மூலம், ஒபாமா, மனைவி மிச்சேலுடன், மேரிலாண்ட் பகுதிக்குச் சென்றார். அவர்களை அதிபர் ட்ரம் மற்றும் அவரது மனைவியான முதல் பெண்மணி மெலினா ட்ரம் ஆகியோர் கைகுலுக்கி வழியனுப்பி வைத்தனர். ட்ரம் இன் மனைவி ஒபாமா மனைவிக்கு பரிசு ஒன்றையும் கொடுத்தார்.



அதிகாரிகள் மற்றும் தனது ஆதரவாளர்களுடன் மேரிலாண்ட் பகுதியில் கலந்துரையாடிய ஒபாமா தனது மனைவியுடன் கலிபோர்னியாவுக்கு விடுமுறையை கழிக்கச் சென்றார். பின்னர் ஒபாமா, மனைவி மிச்சேல் இருவரும் வோஷிங்டன் டி.சி. திரும்புகிறார்கள். ஒபாமாவின் இளைய மகள் ஷாஷா பள்ளிப் படிப்பை படித்து முடிக்கும்வரை வோஷிங்டனிலேயே தங்கியிருக்க ஒபாமா குடும்பம் முடிவு செய்துஉள்ளது.

## வேலை வாய்ப்பில் அமெரிக்கர்களுக்கே முன்னுரிமை!

வேலைவாய்ப்பில் அமெரிக்கர்களுக்கே முன்னுரிமை என்று அமெரிக்க அதிபராகப் பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம் முதல் உரையிலேயே அழுத்தமாகத் தெரிவித்துள்ளார். அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததன் பின்னர் அதிபராகத் தனது முதல் உரையை ஆற்றினார் டொனால்ட் ட்ரம். அப்போது எதிர்பார்த்தபடியே அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது குறித்துப் பேசினார். அவரது தேர்தல் பிரசாரத்திலும் இதுதான் முக்கிய கருப் பொருளாக இருந்தது. ட்ரம் உரையிலிருந்து:




* இது மக்களின் வெற்றி. உங்களின் வலி எனது வலி, அரசின் வெற்றி உங்கள் வெற்றி.
* நமக்கு வருங்காலங்களில் சவால்கள் காத்திருக்கின்றன.
* கடினமான சூழலைத் தாண்டியும் நாம் வெற்றி பெறுவோம்.
* "அமெரிக்கா முதலில்" என்பதே எனது கோஷம்.
* வெளியுறவு, வேலை வாய்ப்பில் அமெரிக்கர்கள் நலனுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
* அமெரிக்கர்களின் வேலைவாய்ப்புப் பாதுகாக்கப்படும்.
* இரு விதிமுறைகளைப் பின்பற்ற உள்ளேன். அமெரிக்கப் பொருட்களையே வாங்குவது, அமெரிக்கர்களையே வேலைக்கு அமர்த்துவது என்பதுதான் அந்த விதிமுறை.
* அமெரிக்க ஊழியர்களைக் கொண்டே அமெரிக்கா மீள்கட்டுமானம் செய்யப்படும்.
* இந்த நாள் முதல் அமெரிக்காவே எல்லாவற்றிலும் முதன்மைப்படுத்தப்படும்.
* அமெரிக்காவின் பழைய பெருமைகளை மீட்டெடுப்பேன்.
* அமெரிக்கர்களின் வாழ்க்கை நடைமுறையை பிறர் மீது சுமத்த மாட்டோம். ஆனால், அமெரிக்கர்களைப் பார்த்துப் பிறரைப் பின்பற்ற வைப்போம்.
* பழைய கூட்டணிகளைப் புதுப்பிப்போம். புதிய கூட்டணியை உருவாக்குவோம். நாகரிகமான சமூகத்தை ஒன்றிணைத்துத் தீவிர இஸ்லாமிய

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



# தைத்திருநாளன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ‘மார்க்கம் - முல்லைத்தீவு’ ஒப்பந்தம் கைச்சாத்தாகியது!

**வீரகேசரி மூர்த்தி**

மார்க்கம் மாநகர சபைக்கும் முல்லைத் தீவுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரட்டை நகர உடன் படிக்கை தைத்திருநாளான தை 14ஆம் திகதி சனிக்கிழமை இரவு பெருந்திரளாகக் குழுமியிருந்த மக்களின் பலத்த கரவொலிக்கு மத்தியில் கைச்சாத் திடப்பட்டது. மார்க்கம் மாநகரசபை முதல்வர் வணக்கத்துக்குரிய பிராங்க் ஸ்காபிற்றி அவர்களும் வடமாகாண முதல்வர் திரு. விக்னேஸ்வரன் அவர்களும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இவ்வைபவத்தில் ஒன்ராறியோ மாகாணத்துக்கான இலங்கைத் தூதுவர் ஜனாப் யூ.எல்.முஹமத் ஜவ்ஹாரும் கலந்து கொண்டார். மார்க்கம் மேயர் “மாலை வணக்கம்! Happy தைப்பொங்கல்” எனக் கூறித் தனது உரையினை ஆரம்பித்துத் தொடர்ந்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். “வட அமெரிக்காவில் முதன் முதலாக எமது மார்க்கம் மாநகர சபைதான் பொங்கல் தினத்தை கொண்டாட ஆரம்பித்தது. அதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் முதலாவது தமிழ் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. லோகன் கணபதி ஆவார். அதன் பின்னரே கனடாவிலுள்ள ஏனைய மாகாணங்களும் பொங்கல் தினத் தைக்கொண்டாட ஆரம்பித்தன. அத்துடன் மேயர் தொடர்ந்து உரையாற்றியபோது “எமது பிரதம நிர்வாக அதிகாரி திரு. அன்டி ரெயிலர், மாநகரக் கலாச்சாரக்





நாம் இங்குள்ள வீதிக்கு “வன்னி வீதி” என்ற தமிழ் பெயரையும் சூட்டியுள்ளோம்” எனக் கூறியதும் அனைவரும் எழுந்து நின்று கரவொலி செய்து பாராட்டினர்.

குழு உறுப்பினர்களான திருமதி. நிர்மலா ஆம்ஸ்ரோங், அமன்டா குளுச்சி ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தது பாராட்டுக் குரியதாகும். இன்று நாம் முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தில் வாழும் 90 வீதமான தமிழ் மக்களின் கலாச்சாரத்தினைத் தழுவி அவர்களது பொருளாதார, கல்வி வசதிகளுக்கு உதவும் வகையில் இந்த உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளோம்.

இந்த உடன்படிக்கையானது மார்க்கம் மாநகரில் வாழும் மக்களையும் முல்லைத் தீவில் வாழும் மக்களையும் ஒன்றிணைக்கும் உடன்படிக்கை ஆகும். அத்துடன் பொருளாதார, கலாச்சார உறவுகளையும் ஏற்படுத்த வல்லது. அது மாத்திரமன்றி நாமனைவரும் எமது உத்திகளையும் பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்கும். இந்த உடன்படிக்கைக்கு வழி வகுத்தமைக்காக திரு.லோகன் கணபதிக்கும், வடமாகாண முதல்வர் திரு.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அனுபவம்மிக்கவரான திரு. விக்னேஸ்வரன் அர்ப்பணிப்புடன் தொண்டாற்றி வருகின்றார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்களை உருவாக்குவது மகத்தான சேவையாகும்.

உலக சமாதானத்துக்கு ஊறு விளைவிக்கும் செயல்களை எதிர்த்துச் செயலாற்ற

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)


அம்மா
நகை அடைவு மாடம்

AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே

உங்கள் பழைய நகைகளை
உயர் பெறுமதிக்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்

அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை


மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்
மோட்கேஜ் கிளினிக்
திங்கள் - வெள்ளி
Call for an appointment
416-613-2788
416-816-9011
பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட
நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
கொன்சுமர் ப்ரொபோசல், பாங்ரப்சி நிலையில் மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
லைன் ஒப் கிரெடிட் எடுக்க
ரீபைனான்ஸ் செய்ய
2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
வோக் இன் சனி 9-5 மணிவரை
உங்கள் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்
ஜெ (Jey) இராசதுரை
MBA, BBA (Hon), AMP
Team Leader/Mortgage Agent/Real Estate Broker
FSCO Lic # M09001428
Cell : 416-624-4843
WIN UP TO $100,000
Everyone Who Funds A Mortgage With US Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp
MORTGAGE ALLIANCE
1504 Markham Road, Toronto ON M1B 2V9 (Markham & HWY 401)
RIGHT AT HOME
#1 Brokerage in Toronto
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4
Brokerage office : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

# இலங்கை அரசியலில் 2017 ஆம் ஆண்டு எவ்வாறு நகரப் போகின்றது?

- விகிர்தன் -

இலங்கையில் 2017ஆம் ஆண்டில் எவ்வாறான முன்னேற்றங்கள் ஏற்படும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக வுள்ளது. புதிய அரசாங்கம் ஆட்சி யமைத்து இரு வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இவ்வருடம் முக்கியமான அபி விருத்திக்கான ஆண்டாக இருக்கும் என அரசாங்கமும் தெரிவித்து வருகின்றது.

கடந்த 2016ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வரும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. எனவே 2017இல் தீர்வு கிடைக்கும் என்று அவர் மீண்டும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2017இல் இந்த நல்லாட்சி அரசாங்கம் கவிழ்க்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி சூளுரைத்துள்ளார். அவருக்கு ஆதரவான கூட்டு எதிர்கட்சியை சார்ந்தவர்களும் இதனை சிங்கள மக்கள் மத்தியில் கூறி வருகின்றனர். பேசுவது மட்டுமல்லாமல் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வேலைத் திட்டங்களை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்ற அமைச்சர் களாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை அரசாங்கத்திற்கு எதிராக உடைத்தெடுக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இவ்வாறான நிலையில் மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசாங்கம் மஹிந்த தரப்பினரின் எதிர்ப்பு மற்றும் சதித்திட்டங்களுக்கு முகம் கொடுப்பதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் புதிய அரசியல் யாப்பின் உருவாக்கம் நிறைவடைய வேண்டும் அதனையொட்டியே தமிழர் பிரச்சினைக்கான தீர்வினை எதிர்பார்க்க முடியும். ஆனால், புதிய அரசியலமைப்புக் குறித்து மிக மோசமான பிரச்சாரங்களை மஹிந்த தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். நாட்டைப் பிளவு படுத்தும் வகையில் புதிய அரசியல் யாப்பு உருவாகவுள்ளதாகவும் அதனை சிங்கள மக்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும் என்றும் அவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர்.

இதற்கெல்லாம் பதில் சொல்லும் வேலைகளையும் நல்லாட்சி அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தனது ஆட்சிக் காலத்தில் வடக்கு கிழக்கு இணைப்பிற்கோ சமஷ்டி முறைக்கோ இடமளிக்கப் போவதில்லை என்று அண்மையில் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன தெரிவித்திருக்கின்றார். நிகழ்வு ஒன்றில், மக்கள் மத்தியில் உரையாற்றியபோது அவர் இவ்வாறான கருத்தை தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் இது தொடர்பில் எழுப்புகின்ற கேள்விகளுக்கும் அவ்வாறே அவர் பதிலளிக்கின்றார்.

சமஷ்டி என்பது பிரிவினையல்ல என அரசாங்கத்திலிருக்கும் மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன போன்ற அமைச்சர்கள் கூறி வருகின்ற போதும் சமஷ்டி என்பது நாட்டைப் பிரிப்பதுதான் என மஹிந்த தரப்பினர் மேற்கொள்கின்ற பிரச்சாரமே உரத்துக் கேட்கின்றது.

இவ்வாறு, சமஷ்டி பிரிவினை என்று மஹிந்த தரப்பினர் கூற, அவ்வாறில்லை என்று அரசாங்கத்தில் சிலர் விளக்கமளிக்க, சமஷ்டி வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி கூற, வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவை எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். வடக்கு கிழக்கு இணையாத தீர்வைக் கடைசிவரை ஏற்க மாட்டோம் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுகின்றார்.

ஆனால், உத்தேசத் தீர்வு வரைவு ஒன்றுள்ளதாகவும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தன் மற்றும், சுமந்திரன்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

## எமது எண்ணம்!

**“தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்”**

**- தந்தை செல்வா**

2017 இல் தை மாதத்தில் உலகளாவிய ரீதியிலும், இலங்கையிலிருந்தும் வட, கிழக்கு மாகாண உயர்மட்ட பிரதிநிதிகள் வட-மாகாண முதலமைச்சர் உட்பட பலர் கனடாவில் குறிப்பாக ரொறன்ரோவில் சமூகமளித்திருந்தார்கள். வந்திருந்தவர்கள் இரு குழுக்களாகச் செயல்பட்டார்கள் என்பது எமக்குத் தெரியவந்தது.

இவர்களை முதல்வர் சி.விக்கினேஸ்வரன் தலைமையில் ஒரு குழுவும், வடமாகாண அமைச்சர்கள் தலைமையில் இன்னொரு குழுவுமாக ரொறொன்ரோவில் இயங்கும் இரு அமைப்புகளும் அவர்கள் சார்பு அமைப்புகளும் சேர்ந்து இங்கு அழைந்திருந்தார்கள். இலங்கையிலிருந்து இற்கு வந்து இங்குள்ள நிலைமைகளை நோக்குவதன் மூலம் இங்குள்ள மக்கள், அரசு சார்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அது சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் வட, கிழக்கு தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். ஊடக வியலாளர்களின் சந்திப்பில் முதல்வரின் பதிவும், செயலும் அவரின் மேன்மையை தெரியப்படுத்தியிருந்தது.

பேச்சு வார்த்தையைப் பற்றிய பதில், தமிழ் மக்களின் எண்ணத்திற்கு தீனி போட்டதாக தோன்றவில்லை. வெளிநாட்டிலிருக்கும் எமது மக்களினதும், இந்நாட்டரசுகளின் தொடர்ச்சியான இலங்கை மீதான அரசில் ஏற்படுத்தப்படும் இறுக்கப்பாடே ஏதாவது சிறு மாற்றத்தையே தரலாம் என்பதனை அறியக் கூடியதாக இருந்தது. இம்மாநாடு, இரட்டை நகர ஒப்பந்தத்தில் கைச்சாத் திடுதல் போன்றவை குறிப்பிட்ட காலமாக திட்டமிட்டதாக கூறப்பட்ட போதும், அழைக்கப்பட்ட இரு குழுக்களினதும் அல்லது இதனை ஒழுங்கு செய்த இரு அமைப்புகளினதும் செயல்பாடுகள் கனேடிய தமிழ் மக்களுக்கு விசனத்தைத்தான் ஏற்படுத்தியிருந்தது.

எமக்கிடையில் ஏற்பட்டு இருக்கும் முரண்பாடுகளை இலங்கையிலிருந்து வந்தவர்கள் மூலம் உலகத்திற்கே நாங்கள் தெரிவித்து விட்டோம். தனித்தனியாக வந்தவர்களுடன் அளவளாவியபோதுதான் அங்குமிங்கும் செயல்படும் அரசியல்வாதிகளின் உள்ளக் கிடக்கைகளை அறியக்கூடியதாக இருந்தது.

இதுவரைகாலமும் நோக்கம் ஒன்று, பாதைகள் தான் வேறாக இருந்திருக்கலாம் என நினைத்திருந்தோம். ஆனால் இப்பொழுது நோக்கம் ஒன்று தானா என்பதிலே எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஒரு அமைப்பின் நிகழ்ச்சியில் மற்ற அமைப்பு தவிர்க்கப்பட்டது அல்லது சமூக மளிக்காமல் தவிர்த்தது காணக் கூடியதாக இருந்தது. இது இங்குள்ள தமிழ்மக்களின் தலைமை எனக் கூறுபவர்களின் எண்ணத்தை மீளாய்விற்கு உட்படுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எமது நோக்கம் என்ன என்பதில் நாம் தெளிவில்லையா? அல்லது எமக்கு வேறு ஒரு திட்டம் உள்ளதா? எதிரிகள் தமிழனுக்கு தேவையில்லை. ஆழமான வேர்கள் தோன்றாமல் இருக்கும்வரை தமிழன் உதிரியாகவே வாழச் சிறந்தவனாகலாம். ஆனாலும் தனிமரம் தோப்பாகாது என்பதே எமது எண்ணமாகும்.

**“தமிழரை ஒன்றிணைக்க கடவுளாலும் முடியாது” - சி.வி. விக்கினேஸ்வரன்**


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

“ VERY CLEAN LAUNDRY” Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்காவின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தீவிர வாதத்தை உலகிலிருந்தே மொத்தமாக அகற்றுவோம்.

* அமெரிக்கர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். அமெரிக்காவின் எல்லைகள் பலப்படுத்தப்படும்.
* கடவுளாலும், திறமையான இராணுவத்தினராலும் அமெரிக்கர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.
* கறுப்பினத்தவரோ, வெள்ளையரோ அனைவர் உடலில் ஓடுவதும் அமெரிக்க இரத்தமே.
* அமெரிக்காவில் பிறக்கும் எல்லா இனத்தினரும் அமெரிக்கத் தேசபக்தர்களே.
* அரசியல்வாதிகள் செல்வந்தர்களாகி விட்டனர். ஆனால் அமெரிக்கர்களோ வேலை வாய்ப்பை இழந்துவிட்டனர்.
* அமெரிக்காவின் வேலை வாய்ப்பும், தொழில்கூடங்களும் மூடப்பட்டுவிட்டன. இப்பிரச்சினைகளில் இருந்து அமெரிக்காவை மீட்கக் கடவுள் ஆசீர்வதிப்பார்.
* அமெரிக்கா மீண்டும் வெற்றியடையும். முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வெற்றியடையும்.

அமெரிக்காவில் ஒபாமா ஆட்சியிலும் கறுப்பினத்தவர்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் நடைபெற்றிருந்த நிலையில், கறுப்பினத்தவர்கள் பாதுகாப்புப் பற்றி ட்ரம் பேசியுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

## இந்து, முஸ்லீம் உட்பட பல சமய மதகுருமார்களுடன் டொனால்ட் ட்ரம் பிரார்த்தனை



ட்ரம் குடும்பத்தார் மற்றும் துணை ஜனாதிபதி Mike Pence மற்றும் அவரது மனைவியும் ஜனவரி 21, 2017 அங்குள்ள Washington National Cathedral தேவாலயத்திற்குச் சென்றனர். அங்கு ஓர் உணர்ச்சிபூர்வமான சம்பவம் நடந்துள்ளது. தேவலாயத்தில் 20 வயது Marlana Van-Hoose என்ற பெண் "How Great Thou Art" என்ற பாடலைப் பாடினார். அப்போது ட்ரம் பாட்டுப் பாடிய பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் இருந்த மிலானியா ட்ரம் தன்னை அறியாமல் கண்கலங்கினார். அவர் உடனடியா கண்ணில் தூசி பட்டதுபோல் விரலைக்கொண்டு கண்ணீரைத் துடைப்பது அந்தத் தேவாலயத்தில் குழுமி இருந்தவர்களால் அவதானிக்கப்பட்டது.

அவர் பாடல் பாடிய பெண் கண் தெரியாதவர், மேலும் அவருக்கு வாதம் தொடர்பான நோய் இருக்கிறது. இத்தகைய பிரச்சனைகளிலும் ஒரு நீண்ட பாடலை மிக அழகாகப் பாடுகிறாரே என்று நினைத்தே கண்கலங்கினார்.

தேவாலயத்தில் பல்வேறு கிறிஸ்தவ மதங்களின் பைபிள்களில் இருந்தும் குர்ரானில் இருந்தும் பாக்கள் வாசிக்கப்பட்டன. இந்நிகழ்வில் இந்துமதம் (சிவாவிஷ்ணு ஆலயம், Lanham, Maryland) உட்பட பல்வேறு மதங்களின் பன்னிரெண்டு மத குருமார்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

## முதல் வாரத்தில் டொனால்ட் ட்ரம் பல நிர்வாக ஆணைகளில் கையெழுத்திட்டார்

டொனால்ட் ட்ரம் அமெரிக்க அதிபராகப் பதவியேற்று ஒருவாரத்தில் பல நிர்வாக ஆணைகளில் (**executive orders**) கையெழுத்திட்டார். அவற்றில் சில:

### பசுபிக் கூட்டுறவு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், புரூணை, சிலி, ஜப்பான், மலேசியா, மெக்சிக்கோ, நியூசிலாந்து, பேரு மற்றும் வியட்நாம் ஆகிய பசுபிக் சமுத்திரத்தைச் சூழவுள்ள 12 நாடுகளுக்கு இடையே மேற்கொள்ள கடந்த 2016 பெப்ரவரி 04இல் திட்டமிட்ட கூட்டுறவு வர்த்தக ஒப்பந்தமான TPP எனப்படும் 'Trans Pacfic Partnership' ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கும் நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம் 2017 ஜனவரி 23 இல் கையெழுத்திட்டார்.

டொனால்ட் ட்ரம் தேர்தலின்போதே இவ்வா றான வர்த்தக உடன்படிக்கைகள் அமெரிக்க தொழிலாளர்களுக்கு உதவுவது இல்லை என்றே கூறிவந்தார். இந்த உடன்படிக்கை இன்னமும் அமலாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான உடன்படிக்கைகள் கடந்த 30 வருடங்களாக அமெரிக்க தொழிலாளர்களின் வேலை இன்மையை கூட்டியதோடு, தொழிலாளர்களின் சம்பளத்தையும் குறைக் கவே உதவின என இந்த உடன்படிக் கையில் இருந்து அமெரிக்கா விலக எடுத்த முடிவை வரவேற்று **Vermont** செனட்டரான ஜனநாயகக்கட்சியை சேர்ந்த Bernie Sanders தெரிவித்துள்ளார்.

அதேநேரம் Arizona செனட்டரான குடியரசுக்கட்சியைச் சேர்ந்த John McCain அமெரிக்க உற்பத்திகளின் ஏற்றுமதி வாய்ப்பை இந்த உடன்படிக்கையில் இருந்து அமெரிக்கா விலகுவதால் இழந்துவிடும் எனக்கூறி அமெரிக்கா விலக எடுத்த முடிவை எதிர்த்து விமர்சித்துள்ளார்.

### அரச ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதும் சம்பள உயர்வும்

டொனால்ட் ட்ரம் தனது இன்னொரு தேர்தல் வாக்குறுதியான அமெரிக்க வரியிறுப்பாளர் களுக்குப் பயனுள்ள (effective) மற்றும் திறமையான, தரமான (**efficient**) அரசாங்கத்தை உருவாக்குவேன் என்பதற்கு இணங்க இனிமேல் மேலதிக அரச உத்தியோகத்தர்களை புதிதாக வேலைக்கு எடுக்க முடியாது (**freeze federal hiring**) எனவும், அரசு உத்தியோகத்தர்களுக்குத் தானாகவே சம்பள உயர்வு (**automatic pay raises**) வழங்கப்படமாட்டாது எனவும் கூறும் நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம் 2017 ஜனவரி 23இல் கையெழுத் திட்டார். இந்த வேலைக்கு புதியவர்களை எடுக்க முடியாது என்ற நிபந்தனை நாட்டின் தேசிய பாதுகாப்புத் தேவைக்காக வேலைக்கு அமர்த்துதலை தடுக்கமாட்டாது.

### அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கும் பணஉதவி

ஒபாமா 2009 இல் அதிபர் பதவி ஏற்றவுடன் கையெழுத்திட்ட நிர்வாக ஆணையான வெளிநாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கருத்தடை மற்றும் கருச்சிதைவு போன்றவற்றிற்கு உதவ பண உதவி வழங்குவதை உடனடியாக நிறுத்தும் நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம் 2017 ஜனவரி 23இல் கையெழுத்திட்டார்.

### *Keystone Xl* எண்ணைக் குழாய்த் திட்டம்

கனடா, அமெரிக்காவிற்கு இடையேயான Keystone Xl எண்ணைக் குழாய்த்திட்டத்தை மேற்கொண்டு தொடர அனுமதிக்கும் நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம் 2017 ஜனவரி 24இல் கையெழுத்திட்டார். $8 மில்லியன் பெறுமதியான இத்திட்டத்தை தொடர அனுமதி அளித்ததன் மூலம் கனடாவின் பொருளாதாரம் வளர்ச்சியுறும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். சுற்றுப்புறச் சூழல் மாசடையும் என்ற காரணத்தை காட்டியே ஒபாமா அரசு இதுவரை காலமும் இந்த திட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை.

இத்திட்டத்தை டொனால்ட் ட்ரம் அனுமதி அளித்ததை வரவேற்றுப் பேசிய கனேடியப் பிரதமர் இத்திட்டத்தின் மூலம் நாளாந்தம் 800,000 பரல் மசகு எண்ணை சுத்திகரிப்பிற்காக அல்பேட்டா மாகாணத்தில் இருந்து Texas மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்றார்.

தனது லிபரல் அரசு பல வருடங்களாக இத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருவதா கக் கூறிய ஜஸ்ரின் ரூடோ இத்திட்டம் தாங்கள் கடைப்பிடிக்கும் கனடாவின் காலநிலை மாற்றத்திற்கான திட்டங்களுக்கு அமைய செயல்பட்டால் கனடா காலநிலை மாற்றத்திற்கு அமைய எடுத்த இலக்கை அடைவதுடன் பொருளாதாரத்திலும் வளம் பெறும் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் அல்பேட்டா முதல்வர் Rachel Notley இனுடைய எண்ணை வளம் நிறைந்த மணலில் இருந்து வெளியேறும் மாசுக்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற்கமையவே (hard cap on oilsand emissions) எந்த எண்ணைக் குழாய்த்திட்டமும் அமல்படுத்தப்படும் என்றார்.

### அமெரிக்க மெக்சிக்கோ எல்லையில் மதில் கட்டுதல்

அமெரிக்க மெக்சிக்கோ எல்லையில் மதில் கட்டத்தொடங்க அனுமதி அளிக்கும் நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம் 2017 ஜனவரி 25இல் கையொப்பமிட்டார். இந்த மதில் கட்டுவதற்கான செலவுகளை முதலில் அமெரிக்கா செலவு செய்தாலும் அவற்றை எவ்வாறேனும் மெக்சிக்கோவிடமிருந்து மீளப் பெறப்படும் என்று அமெரிக்க அதிபர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் மெக்சிக்கோவிற்குமான எல்லை 3200 கி.மீ. இதில் ஏற்கெனவே 2006ஆம் ஆண்டில் 1049 கி.மீ. நீளமான உயர்ந்த பாதுகாப்பான வேலி கட்டப் பட்டுள்ளது. இந்த வேலிக்கு $7 பில்லியனை செலவிட்டது. இயற்கையான மலைத்தொடர் மற்றும் ஆறுகளைத் தவிர்த்து மீதமுள்ள எல்லையில் மதில் கட்ட $8 பில்லியன் செலவாகுமென அரச அதிகாரிகளால் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் ஊடகவியலாளர்களின் கணக்கின்படி இந்த மதில் கட்ட தற்போது $15 தொடக்கம் $20 பில்லியன் வரை செலவாகும்.

கனடா அமெரிக்க எல்லைபற்றிக் கேட்ட போது டொனால்ட் ட்ரம் அங்கு மதில் கட்ட வேண்டிய அவசியமில்லை அதற்கு எந்தவித தேவையும் இல்லை என்றார்.

### அமெரிக்க மத்திய அரசின் பண உதவி நிறுத்தம்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

MORTGAGE PROBLEM?... Too Much Debt?... privacy guaranteed...
$50,000...$100,000...$500,000...$750,000... $1.75 Million... funds for
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
- Refinance & pay off loans, credit cards, 2nd mortgage...
- Consolidate 1st and 2nd mortgages...
- Purchase properties - Residential & Commercial...
- Construction Financing...
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages






# காணாமல் போனவர்கள் உயிருடன் இல்லை என்று பிரதமர் கூறியுள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

- ஆதித்தன் -

காணாமல் போனவர்களை கண்டறியுமாறும், சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாகவும் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. வவுனியாவில் உடலை வருத்தும் உண்ணாவிரதப் போராட்டம் - கைதிகள் மீண்டும் சிறைகளில் போராட்டம் - இவற்றிற்கு ஆதரவு தெரிவித்துத் தமிழ் பிரதேசங்களில் ஆங்காங்கே கவனயீர்ப்புப் போராட்டம் எனப் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

ஆனால், எவ்வித தீர்வோ, திருப்பமோ, மாற்றமோ இன்றி அரசாங்கத் தரப்பின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தமிழ் அரசியல்வாதிகளும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளனர். ஏற்கனவே சில வாக்குறுதிகளை அரசாங்கத்தை நம்பி அவர்கள் வழங்கிய போதும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்ப்பிற்கும் வெறுப்பிற்கும் தமிழ் அரசியல்வாதிகளும் முகம் கொடுக்கவேண்டிய நிலை எற்பட்டது. தற்போது நடைபெறும் போராட்டங்களுக்கும் எவ்விதமான கருத்துக்களையும் கூடக் கூற முடியாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் உள்ளனர்.

வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, நாடாளுமன்றத்தில் இது குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 'போராடும் மக்களின் கண்ணீர் உங்களை சும்மா விடாது' என்று கூறினார். இவ்வாறு கூறுவதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையினையும் முன்னெடுக்க முடியாத நிலையில்தான் கூட்டமைப்பினர் உள்ளனர்.

ஆனால், நாட்டின் பிரதமரான ரணில் விக்ரமசிங்க தெளிவாகவும், முடிவாகவும் நாடாளுமன்றத்தில் தனது கருத்தை அண்மையில் தெரிவித்துள்ளார்.




காணாமல் போனோரில் பலர் உயிருடன் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். காணாமல் போனவர்கள் தொடர்பில் எந்தவொரு தகவலையும் இலங்கையில் தேட முடியாதென பொலிஸார் அறிவித்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். கடந்த 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க காணாமல் போனோர் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

காணாமல் போனோர் தொடர்பில் தமக்குத் தெரிந்த தகவல்களை வழங்குவதாகப் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். காணாமல் போனோர் தொடர்பில் எந்தவொரு தகவல்களையும் இங்கு தேடிக்கொள்ள முடியாமல் இருக்கின்றதென பொலிஸார் அறிவித்துள்ளனர். இங்குள்ளவர்கள் தொடர்பான தகவல்களை தேடிக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் வெளிநாடு சென்றுள்ளார்களா என்பதற்குரிய எந்தவொரு ஆதாரமும் சட்டரீதியாகக் கிடையாது. சட்டவிரோதமாக அல்லது வேறு வழியாக அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றார்களா என்றும் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனோரில் சிலர் உயிருடன் இல்லை. எனவே, அவ்வாறானவர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராய்ந்து கொள்கை ரீதியான முடிவொன்றை எடுக்க வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னரும் இவ்வாறான கருத்தைப் பிரதமர் ரணில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கின்றார். ஆனால், தற்போது நாடாளுமன்றில் அவர் இதனை தெரிவித்திருப்பதை நாட்டின் பிரதமரது உத்தியோகபூர்வமான பதிலாகவே பார்க்கலாம். இதற்கான ஒரு முடிவை உறுதியாகக் கூறுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே கேட்டிருக்க வேண்டும். பின்னர் அதனைஉண்ணாவிரதம் போன்ற உடலை வருத்தும் போராட்டங்களில் ஈடுபடும் உறவினரிடம் கூறி அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் சிந்திக்க வேண்டும். அவ்வாறெதுவும் நடைபெறவில்லை.

முன்னதாக, வட மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் யாழ். ஊடக மையத்தில் வைத்து தெரிவித்த கருத்தை யும் இங்கு குறிப்பிடலாம். காணாமல் போனவர்கள் உயிருடன் இல்லை என்று பிரதமர் ரணில் கூறுகின்றார் இதனை நாடாளுமன்றில் அவர் கூற முடியுமா? என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால், கடந்த 25ம் திகதி நாடாளுமன்றத்திலேயே இதனை பிரதமர் ரணில் தெரிவித்துவிட்ட நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

பிரதமர் ரணில் தெரிவித்த கருத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக, அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்னவும் சில தினங்களுக்கு முன்னர் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோரை தேடுவது சிக்கலான விடயம் என்றும் அனைவரும் இறந்துவிட்டதாக மரண சான்றிதழ் வழங்கவும் முடியாதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"காணாமல் போனோரை தேடிப் பார்க்கலாம். அதற்காக வித்தியாசமாக எதனையும் செய்ய முடியாது. காணாமல் போனோர் குறித்த பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் தேட முடியுமானவற்றை மாத்திரமே தேடலாம்.

காணாமல் போதல் என்பது கடந்த 1971ஆம் ஆண்டிலிருந்து பதிவாகியுள்ளது. அதன்பின்னர் 1988 ஆண்டும் ஒரு புரட்சி ஏற்பட்டது. இக்கால கட்டங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் இன்னும் சான்றிதழ் வழங்கப்படவில்லை. காணாமல் போனவர்கள் தொடர்பாக மரண சான்றிதழ் கோரப்படுகிறது. ஆனால் அவ்வாறு வழங்கமுடியாது. காரணம் இலங்கையில் அதற்கான நடைமுறை இல்லை. ஆகவே, இதற்கு எவ்வாறான நடைமுறைகளை பின்பற்றலாம் என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்" என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதமர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் வரை தெரிவிக்கும் இவ்வாறான கருத்துக்களை வைத்து நோக்குவோமானால், அரசாங்கம் இவ் விடயத்தில் கைவிரித்து விட்டதென்றே எண்ணத் தோன்றுகின்றது.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் காணாமல் போனோருக்கான ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் அந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்கு அடுத்த கட்டமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. காணாமல் போனோருக்கான அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து தற்போதைய அரசாங்கம் கூறியது. கடந்த வருடம் காணாமல் போனோர் தொடர்பாக செயல்படும் அலுவலகத்தை அமைக்கும் சட்டத்திற்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட விதம் காரணமாக அரசியல் சாசனம் மீறப்படுவதாகக் கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டுக்களை சுமத்தின. அதற்கு அனுமதி வழங்கப்பட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படுமென்றும் கூட்டு எதிர்கட்சியினர் தெரிவித்தனர்.

இதேவேளை, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் இயங்கும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறானதொரு அலுவலகம் செயற்படுவதாக தெரியவில்லை. இந்த நிலையில்தான் வவுனியாவில் உண்ணா விரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு நாட்களாக நடைபெற்ற போராட்டம் 26ம் திகதி முடிவிற்கு வந்தது. இவ் உண்ணா விரதப் போராட்டத்தை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நீராகாரம் வழங்கி முடித்து வைத்தார். அவர் உண்ணாவிரதம் இருந்தவர்களுடனும் ஏனையவர்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது காணாமல் போனவர்களின் உறவினர்கள், அருட்தந்தையர்கள் உள்ளிட்ட 16 பேர் கொண்ட குழுவினருடன் எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பு அலரி மாளிகையில் காலை 11மணிக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், நீதித் துறை அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பேச்சுக்களை நடத்தி இது

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Sell your home

# faster

and more **money**

# 10 நாட்கள் மட்டுமே

எங்கு வேண்டுமானானாலும் வீடுகள்
வாங்க விற்க



Platinum Club Award

KZG 647-200-5833

RE/MAX Above the Crowd!®

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

## Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# Get 90's

& ABOVE IN MATH IN

2nd SEMESTER

## Starts from

3rd week of January 2017

# G12 Calculus

The most important course for Engineering field

# G11 Function

# G10 & G9

"Teaching Experience in Math for more than 23 years" - Limited Students

MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

- A private math institute -

416-666-5515

Markham & Steeles

# நாமும் நமது இல்லமும் - 480

## 50 வருடங்கள் வாழ்ந்த வீட்டை விற்கும் 108 வயது மூதாதை


**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969




ரொறொன்ரோவின் மேற்குப் பகுதியில் இருக்கும் ஒரு வீடு விற்பனைக்காகச் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வீடு விற்பனைக்கு வந்தது புதிதுமல்ல, புதினமு மல்ல! இந்த வீட்டிற்கும், இதில் வாழ்ந்தவர்களின் வாழ்க்கை எம்மவருக்குத் தெரியப் படுத்தப்போகும் கதைகளும் அனுபவங்களும் பற்பல. கனடாவுக்கு நம்மில் அனேகர் 83 இற்கு பின்பாகவே குடியேறினோம். எமது கனேடியக் கதை தொடங்கும் காலம் இது.

கனடாவுக்குக் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே சீனமக்கள் குடியேறத் தொடங்கிவிட்டார்கள் என்பது அனேகரிற்கு தெரிந்த விடயமாக இருக்கலாம். 1965 ஆம் ஆண்டில் இரண்டு சேர்ந்த வீடுகளில் (Semi Detached) ஒன்றை ஒரு சீன இன தம்பதியினர் தமதாக்கிக் கொண்டனர். அப்பொழுது அதன் விலை $10,000. கணவன் 1971 இல் காலமாகிவிட்டார். 108 வயதில் இன்று இருக்கும் மூதாதையான பெண் 52 வருடங்களுக்குப் பிற்பாடு சந்தைக்குத் தனது வீட்டை விற்பதற்குக் கொண்டு வந்துள்ளார். இந்த வீட்டிற்கான திருத்த வேலைக்குக் குறைந்தது $200,000 தேவைப் படலாம் என ஆதன முகவர் கூறியுள்ளர்.

இன்றுவரை ஆங்கிலத்தில் புலமைபெறாத இந்த மூதாட்டியின் வாழ்விலிருந்து நாம் அறியவேண்டிய விடயங்கள் முக்கியமானவை. இவர் தெற்கு சீனாவின் ஒரு கிராமத்தில் 108 வருடங்களிற்கு முன்பாக 1908 ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் 18 வயதாக உள்ளபோது தனது கிராமத்தில் 23 வயது வாலிபர் ஒருவரை திருமணம் புரிந்தார். அவ்வாலிபர் ஏற்கனவே கனடா விற்கு சீனாவிலிருந்து வந்து குடியேறி யிருந்தார். தனது நாட்டிற்குப் பெண்தேடிச் சென்றிருந்த போதே இத்திருமணம் நடந்தது. அன்றைய காலத்தில் கனடாவை 'Gold Mountain' என சீனர்கள் அழைப்பது வழக்கமாகக் காணப்பட்டது. அத்துடன் சீனாவிலிருந்து கனடாவுக்கு வருபவர்கள் $500 ஐ தலை வரியாகச் (Head tax) செலுத்த வேண்டியிருந்தது. இவர் கனடாவுக்கு வந்த பின்பு, தனது மனைவியை அழைப்பதே அவரின் திட்டமாகும். நம்மவர்கள் 1990களில் செய்தது போன்ற நிலை. காலங்கள் வேறு ஆனால் நிலைமை ஒரே மாதிரி. மேற்குறிப்பிட்ட கணவன் கனடாவுக்கு வந்த பின்பு தனது மனைவியை கனடாவுக்கு கூட்டி வருவதில் சிக்கல் ஏற்பட்டு விட்டது.

அன்றைய கனேடிய அரசு சீன மக்களுக்கு எதிராகப் புதிய சட்ட நடைமுறையைக் கொண்டு வந்தது. அதாவது 1923இல் கொண்டு வரப்பட்ட, Chinese Immigration Act, சீனர்கள் கனடாவுக்கு வருவதனை கிட்டத்தட்ட முற்றாகவே தடை செய்திருந்தது. இதனால் அவரின் மனைவி கனடாவுக்கு வருவது தடைப்பட்டு விட்டது. கணவன் கால இடைவெளியில் சீனாவுக்குப் போய் வந்துகொண்டு இருந்தார். அவர் கனடாவில் சலவைத்தொழில் மூலம் உழைக்கும் பணத்தைத் தனது மனைவியின் வாழ்வுக்காக அனுப்பிக்கொண்டு இருந்தார்.

கணவன், சீனாவுக்குத் திரும்பிய காலத்தில் இரு பிள்ளைகள் இவர்களுக்குப் பிறந்தார்கள். இரண்டாவது உலகப்போரின் பின்னர் 1947 இல் கனேடிய சீன இனத்தவர்கள் மீதான தடைச் சட்டத்தை மீளப்பெற்றது. இதன்பின்னர் தாயும் இருபிள்ளைகளும் 1950 இல் கனடாவின் ரொறொன்ரோவில் குடியேறினர். ஏறக்குறைய 25 ஆண்டுகளின் பின்னர் இக்குடும்பம் ஒன்றாகக் கனடாவில் வாழத் தொடங்கியது. இந்நிலைமை எம்மவர்கள் பலருக்கு ஐரோப்பிய நாடுகளில் இன்னும் நிகழ்கின்றது.

இக்காலத்தில் அனேகமான சீனர்கள் '**China town**' என அழைக்கப்படும் (Dundas/Spedina) பகுதியிலேயே குடியேறி இருந்தார்கள். இவர்களும் அங்கேயே குடியேறினார்கள். இப்பகுதியில் Polish, Ukraniniaw மொழி பேசும் குடிவரவாளர்கள் வாழ்ந்து வந்தார்கள். சீன இனத்தவர்கள் சிறிதுசிறிதாக இங்கு குடியேறத் தொடங்கினார்கள்.

70ஆவது வயதிலும் தனது கணவன் செலுத்திய $500 Head Tax சீட்டை வைத்திருந்ததுடன், மத்திய அரசிற்கு எதிராகப் போராடியும் வந்துள்ளார். யூன் 2006 இல் அன்றைய கனேடியப் பிரதமர் சீனக்கனடியர்களிடம் இந்த வரியை அவர்கள் மீது திணித்ததற்காக மன்னிப்புக் கோரியது யாவரும் அறிந்ததே.

நீண்டகாலமாக அம்மூதாட்டி வாழ்ந்த வீடு, $200,000 மேலாக செலவு செய்ய வேண்டிய நிலைப்பாட்டிலிருந்த போதும் $875,000 விற்கப்பட்டது. ஏறக்குறைய 50 வருடங்களில் $10,000 இற்குரிய வீடு 87.5 மடங்காக விற்கப்பட்டுள்ளது.

கனேடிய, உலக அரசியல் எவ்வாறு மாறலாம் என்பது ஒன்று. மற்றையது ஆதன வியாபாரம் என்பது நீண்டகால முதலீடு ஆகும். 2000 இல் $100,000 இற்கு முதலீடு செய்தால் 2050 இல் என்ன விலையாக இருக்கும்?


20/20 CASH RU$$H

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுகுமாக எமது நிறுவனத்தின் புதியமுறையிலான அதிஷ்டம் பார்த்தல்.

ஒவ்வெரு மாதத்தின் 1ஆம் திகதியும் 15ஆம் திகதியும் அதிஷ்டம் பார்க்கப்பட்டு வெற்றிபெறும் அதிஷ்ட்டசாலிக்கு அவர் விரும்பும் தங்கநகை பரிசாகக் கொடுக்கப்படும். இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். உடனடியாக எமது நிறுவனத்திற்கு வந்து உங்கள் பெயர்களைப் பதிவு செய்யுங்கள்.


✓ Western Union - Money Transfer
- Payout
- Bill Payments

✓ Buying Used Gold - Top Dollar
✓ Cheque Cashing
✓ Small Loans
✓ Pawning

தெடர்புகளுக்கு:
Tel: 416.291.CASH(2274)
Fax: 416.291.2276

email: 2020CashRusshCorp@gmail.com
4049 Sheppard Ave. East.
Scarborough, ON. M1S 1S8

# சத்குரு - கேள்வி -பதில்



சத்குரு வாசுதேவ்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

**கேள்வி: யோகா என்பது கலையா? விஞ்ஞானமா?**

சத்குரு: துவக்கத்தில் அது ஒரு திறன். தொடர்ந்த பயிற்சி மூலம் அந்தத் திறன் கைவரப் பெற்றதும் அது ஒரு விஞ்ஞான-மாகிறது. அந்த விஞ்ஞானத்தின் நுட்பங்களைப் புரிந்து, மிகத் தேர்ச்சி பெற்றதும் ஒரு கட்டத்தில் அது கலையாகிறது. கலை என்ற வார்த்தையில்கூட யோகா முழுமையாக அடங்கி விடாது.



ஆழமாகப் போகப்போக, அது ஒருவித சாதுர்யமான தந்திரமாவதை வேண்டுமானால், கலை என்று சொல்லலாம்.

**கேள்வி: சத்குரு யோகாவின் மூலம் ஒருவர் தன் விதியைத் தானே தீர்மானிக்க முடியும் என்று சொல்கிறீர்கள். ஆனால் முந்தைய கர்ம வினைகளிலிருந்து யாரும் தப்ப முடியாது என்றுதானே ஆன்மீக குருமார்கள் சொல்லி வந்திருக்கின்றனர்... இது முரண்பாடாக இருக்கிறதே?**

சத்குரு: பிராரப்தம் என்பது ஒரு பிறவிக்காக ஒதுக்கப்பட்ட கர்ம வினைகள் என்பது உண்மைதான். அவற்றின் விளைவுகள் உங்கள் வாழ்க்கையை மாற்ற வல்லவை என்பதும் உண்மைதான். ஆனால் யோகாவின் சில கருவிகளால் அதை சொற்ப காலத்துக்குள்ளாகவே மாற்றிவிட முடியும். வாழ்க்கையின் மிச்சக் காலத்தை நம் விருப்பப்படி அமைத்துக்கொள்ள முடியும்.

ஏதோ ஒரு வேலையை ஒருவித வேகத்தில் செய்து பழக்கப்பட்டிருக்கிறீர்கள். அதை மிகத் துரிதமாக செய்து முடிக்க, புதிதாக இயந்திரங்கள் கண்டுபிடிக்கப் படுவதில்லையா? அதுபோல்தான் இதுவும். ஆன்மீகப் பாதையில் உரிய கருவிகளைப் பயன்படுத்தத் துவங்கியதும், வேலைகள் துரிதமாக நடப்பதைப் பலர் கண்கூடாகக் கவனித்து உணர்ந்திருக்கிறார்கள்.

**கேள்வி: "நாத்திகவாதிகளுக்கு யோகா வேலை செய்யுமா? அவர்கள் ஞானம் பெற முடியுமா?"**

சத்குரு: நாத்திகவாதிகள் முக்தி பெற முடியுமா? சாத்தியமே இல்லை. அப்படியானால், ஆத்திகவாதிகள்? அவர்களுக்கும் அது சாத்தியமில்லை. ஆத்திகமும், நாத்திகமும் இரு வேறு நம்பிக்கைகள். ஆத்திகவாதிகளும், நாத்திகவாதிகளும் கடவுளை நம்புபவர்கள், நம்பாதவர்கள் என்று இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். மற்றபடி அடிப்படையில் அவர்களின் குணத்தில் என்ன வித்தியாசம்? ஒன்றும் இல்லை.

ஞானம் பெற வேண்டுமானால், முதலில் உங்களுக்குத் தெரியாததைத் தெரியாது என்று ஒப்புக் கொள்ளும் தெளிவு வேண்டும். ஆத்திகவாதிகளுக்கு கடவுள் இருக்கிறாரா என்று நிச்சயமாகத் தெரியாது. நாத்திகவாதிகளுக்குக் கடவுள் இல்லவே இல்லையா என்பதும் நிச்சயமாகத் தெரியாது. இப்படித் தெரியாததை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் தெரிந்ததாக நம்பிக் கொண்டிருப்பதை விடத் தெரியாது என்று மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டால் தானே தெரிந்து கொள்வதற்கான உண்மையான முயற்சி பிறக்கும்? ஞானக் கதவு திறப்பதற்கான சாத்தியம் கிடைக்கும்?

நீங்கள் வெளியில் காணும் பொருட்கள் பற்றிய அறிவை ஆழப்படுத்திக் கொள்ள முறையாக அணுகும்போது அதை இயற்பியல் என்று விஞ்ஞானமாகக் காண்கிறீர்கள். உங்களுக்கு உள்ளே இருக்கும் இயக்கத்தை முறையாக அணுகும் வழிமுறைகளை யோகா என்றும் ஆன்மீக விஞ்ஞானம் என்றும் நாங்கள் சொல்கிறோம்.

**கேள்வி: எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யோகாவால் தீர்வு உண்டா?**

சத்குரு: எய்ட்ஸ் என்பதே ஒரு நோய் அல்ல. ஹெச்.ஐ.வி. கிருமியானது, உங்கள் உடலில் இயல்பாக வழங்கப்பட்டிருக்கும் எதிர்ப்புச் சக்தியை மொத்தமாகத் தூங்க வைத்துவிடும். மூச்சை உள்ளே இழுத்தால் ஒரு நோய் நுழையும். தண்ணீரை அருந்தினால், இன்னொரு நோய் கிளம்பும். இப்படி வெளியிலிருந்து மற்ற நோய்கள் தாக்கும் போதெல்லாம், அவற்றைத் தடுத்து நிறுத்தும் சக்தியில்லாது போய் விடும் கொடுமை அது.

வெளியிலிருந்து வரும் கிருமியைச் சமாளிக்க, மருந்துகள் உதவும். ஆனால் செயலற்றுப் போய்விட்ட உடலின் எதிர்ப்பு சக்தியைத் தட்டி எழுப்ப, யோகாவால் முடியும். உங்கள் உடலே உங்களுக்கு எதிரியாகிவிட்டதே. அந்த நிலையை மாற்ற யோகாவின் சில பயிற்சிகளால் முடியும்

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'ஏன் சில கோயில்களில் மட்டும் கூட்டம் அலை மோதுகிறது? வேறு சில கோயில்களில் தீபம் ஏற்றக்கூட ஆளில்லை?'

'நீங்கள் கடவுளைத் தெரிந்துகொள்ள கோயிலுக்குப் போவதில்லை. உங்கள் பேராசைக்குத் துணை வருவார் என்று நம்பித்தான் அங்கே போகிறீர்கள். அதனால் கடவுள் என்ற சரக்கை எந்தக் கோயில் சிறப்பாக விற்பனை செய்கிறது என்பதைப் பொறுத்து அந்தக் கோயிலுக்குக் கூட்டம் சேர்கிறது.

'இந்தக் கோயிலுக்குப் போ, பத்து ரூபாய் போடு. இருபது ரூபாயாகத் திரும்பி வரும். அந்தக் கடவுளிடம் இலாபத்தில் பத்து சதவிகிதம் தருவதாக வேண்டிக்கொள். கொள்ளை இலாபம் உனக்கு நிற்கும்' என்ற சிபாரிசு செய்யப்படும் கோயிலுக்குத்தானே மணிக் கணக்கில் கியூவில் போய் நிற்பீர்கள்!

அப்படியெல்லாம் விலைக்கு வாங்கிவிடக்கூடியவரா கடவுள்? அப்படியானால் இருபது சதவிகிதம் தருவதற்கு வேறு ஒருவன் தயாராகி விட்டால், கடவுள் உங்களைத் கவிழ்த்து விடுவாரே? சரி, உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத்தான் கோயிலுக்குப் போகிறீர்கள். பரவாயில்லை. ஆனால், அதில் நேர்மையாகவாவது இருங்களேன்! கடவுளிடமே ஏன் பேரம் பேசுகிறீர்கள்?'




**4 day Inner Engineering Program**

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – March 23 - 26, 2017*

*TIMINGS:* Thursday March 23 : 6:30pm – 9:45pm
Friday March 24 : 6:30pm – 9:45pm
Saturday March 25 : 8:30am – 7:00pm
**Sunday March 26 :** 7:30am – 7:00pm

*VENUE -* ***TORONTO***
Noor Cultural Centre
123 Wynford Dr., North York (Toronto), ON M3C 1K1

***MISSISSAUGA***
Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org /Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# கனடாவில் முதியோருக்கான பத்து சலுகைகள்!

## கனடிய தகவல் தொடர் 261


**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999




கனடாவில் முதியோரின் வசந்தமான வாழ்வுக்காக பலவிதமான வசதிகள் கனேடிய அரசுகளினால் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிரதானமான பத்து வசதிகளைப் பின்வரும் தலைப்புகளில் சுருக்கமாக குறிப்பிடலாம்.

### 1.முதியவர்களுக்கான வருமானம் (Income to Seniors)

கனடாவில் 65 வயதினை அடைந்த முதியவர்கள், தொழில் செய்ய வேண்டிய நிலைமைக்குட்படாது, பின்வரும் வழிகளில் தங்கள் அன்றாட வாழ்வுக்குரிய வருமானத்தினை பெற்றுக்கொண்டு வாழலாம். (ஆனால் சுப்பர் விசாவில் வந்து கனடாவிலிருக்கும் முதியவர்கள், எதுவிதமான அரச உதவிகளையும் அனுபவிக்க முடியாது. அதேபோல் குடும்ப ஸ்பொன்ஸரில் வந்தவர்களும் முதல் பத்து வருடங்களுக்கு அரசினால் வழங்கப்படும் உதவிகளைப் பெற முடியாது)

A. **CPP Payment** - தொடர்ச்சியாக கனடாவில் தொழில் புரிந்து பெறப்பட்ட வருமானத்தின் சிறுபகுதி, சேமிப்பு முதலீட்டு திட்டத்தில் இடப்பட்டு அது 65 வயதுக்குப் பின்பு பகுதி பகுதியாகப் பிரித்து மாதா மாதம் வழங்கப்படும்.

B. **Old Age Security Plan** - தொடர்ச்சியாக பத்து வருடங்கள் கனடாவில் வாழ்ந்து தொழில் செய்யாதவராக இருந்தாலும் இத்திட்டத்திலிருந்து வருமானம் பெறலாம். இந்தக் கொடுப்பனவு போதாது இருந்தால் **Guaranteed income supplement & age allowance** திட்டங்களிலிருந்து மேலதிகமாகப் பணம் வழங்கப்படும்.

- Federal annuity program (Government employees pension plan)
- ODSP - Ontario Disability Support Payment
- RRSP & RPP (Registered Pension Plan)

### 2.முதியவர்களின் சௌகரியங்களுக்கு ஏற்றமாதிரி இருப்பிடம் & வாகனப் புனரமைப்பு வசதிகள் (Home & Vehicle Modification Program)

முதியவர்கள் குடியிருக்கும் மனை, மற்றும் உபயோகிக்கும் வாகனம் ஆகியவற்றில் அவர்களின் சௌகரியங்களுக்கு ஏற்றமாதிரி மாற்றங்கள், புனரமைப்புகள் செய்து கொள்ள வேண்டிய நிலைமை இருக்கும். ஆனால் அதனை செய்வதற்கு போதியளவு நிதி வசதிகள் இருக்கமாட்டாது. இப்படிப் பட்ட நிலையில் இருக்கும் முதியவர்கள், மற்றும் உடல் இயங்கமுடியாத வலுவளர் குன்றியவர்களுக்கு பின்வரும் கனேடிய தேசிய நன்கொடை நிறுவனம் அவர்களின் நிலைமைகளை மதிப் பீடு செய்து நிதித் தேவையின் ஒரு பகுதியினை கைகொடுத்து உதவி செய்கின்றது.

March of Dimes Canada Head Office
10 Overlea Blvd.
Toronto, ON M4H 1A4
Phone - 1-800-263-3463

### 3.முதியோர்களின் சௌகரியங்களுக்கு ஏற்ற மாதிரி வீடுகள் புனரமைப்பதில் வரிச் சலுகை. (Home Renovation Tax Credit for Seniors)

வீடுகளில் வாழும் முதியவர்களின் சௌகரியங்களுக்கு ஏற்றமாதிரி வீடுகளைப் புனரமைப்பு செய்ய வேண்டி வரலாம். இதற்காக செலவிடும் பணத்தில் 15 வீதத்தினை ஒரு செலவாகக்காட்டி வருமான வரியினை குறைத்துக் கொள்ளும் வாய்ப்பு ஒரு வரையறைக்குள் உண்டு. முதியவருக்காக மேற் கொண்ட செலவுகளை அவரின் வீட்டு உரிமையாளராகவுள்ள குடும்பத்தவரே வரியில் இருந்து மீளப்பெறலாம்.

- Walk in bathtubs
- Wheel in showers
- Widening passage doors
- Lowering existing counters, cupboards
- Grab bars around toilet
- Tub & shower
- Wheelchair ramp
- Stair wheelchair lifts & elevators
- Handrails in corridors
- Non slip flooring in the bathroom

மேற்குறிப்பிட்ட புனரமைப்புகளுக்கு மட்டுமே வரி சலுகை கிடைக்கும்.

### 4. வருமானம் குறைந்த முதியவர்களுக்கு வீட்டு வரியில் சலுகை. தண்ணீர் கட்டணம் மீள வழங்குதல். (Property taxes & water relief program for low income seniors)

- 64 வயதினை கடந்தவர்.
- சொந்தமாக குடியிருப்பு மனையில் வாழ்பவர்.
- குடும்பத் தேறிய வருமானம் என்பது

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


# INCOME PROTECTION INSURANCE
# வருமான பாதுகாப்பு காப்புறுதி

- நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்போம்.
- We can protect you and your family!
- நீங்கள் சுகவீனமுற்றதனாலோ அல்லது காயமடைந்ததனாலோ வேலை செய்ய முடியாவிட்டால் இந்தக் காப்புறுதி உங்கள் வருமானத்தை ஈடு செய்யும்.
- If you are unable to work due to injury or illness replace your income with disability insurance
- இந்தக் காப்புறுதி ஆயுள்காப்புறுதியைப் போலவே மிகவும் முக்கியமானது.
- It's just as important as Life Insurance

- 100% return of premium those who are under 40 years old(some conditions apply)
- We can cover up to $10,000 per month.
- We are specializing in coverage for truck drivers, Real Estate agents, Mortgage professionals, self-employed and construction workers.
- Also we can cover your fixed business expenses if you are unable to work.
- Included travel insurance for the family. 5 Million Per person / 60 days per trip. Unlimited trips per year
- Extended Medical $100,000



**Nimal Subramaniam**
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UCI | LaCapitale | iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# தைத்திருநாளன்று...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

வும், மனித இனத்தையும், அவர்களது உரிமைகளையும் பாதுகாத்து அமைதியாக வாழ்வதற்கு உதவவும் நாம் தயாராக உள்ளோம். மார்க்கம் மாநகரில் வாழும் மக்களில் 70 வீதமானோர் மார்க்கம் மாநகருக்கு வெளியே பிறந்தவர்கள். அவர்களுள் அதிகமானோர் வர்த்தக முதலீட்டாளர்களும், டாக்டர்களும் ஆவர்.

அவர்கள் இங்கு மகிழ்ச்சியாக வாழ்வதோடு மார்க்கம் மாநகரின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவி செய்து சந்தோஷமாக வாழ்கின்றனர். அத்தோடு சந்தோஷமாக வாழ்வதற்கான நகராகவும் மார்க்கம் மாநகரை மாற்றி உள்ளனர். இவர்கள் ஸ்ரோவில் வைத்தியசாலைக்கும் நிதியுதவி செய்து அதன் வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்து வருகின்றனர். கடந்த பத்தாண்டு காலமாக அந்நிய நாட்டினர் எமது மார்க்கம் மாநகரில் வர்த்தக முதலீடுகளைச் செய்துள்ளனர். நாங்களும் சென்னைக்குப் பயணம் செய்து அங்கு பொங்கல் விழாவினைக் கொண்டாடினோம். அதேபோன்று ஆண்டுதோறும் மார்க்கம் மாநகர சபையிலும் பொங்கல் விழாவினைக் கொண்டாடி வருகின்றோம். அதனால் இங்கு வாழும் சகல இனத்தவர் களும் தங்களது வேறுபாடுகளை மறந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர்" என்றார்.

வடமாகாண முதல்வர் திரு.விக்னேஸ்வரன் உரையாற்றிய போது "மார்க்கம் மாநகரில் வாழும் தமிழ் மக்களைச் சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மார்க்கம் மாநகர சபைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்குமான இரட்டை நகர ஒப்பந்தம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இங்குள்ள மாநகரசபை மேயருடனும், உறுப்பினர் திரு.லோகன் கணபதியுடனும் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் மூலம் இது சாத்தியமாகியது. அதற்காக நான்



அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இங்குள்ள உயர் தொழில்நுட்ப தொழிற்சாலைகளின் கிளைகளை அங்கு நிறுவி அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இதனால் முல்லைத் தீவிலுள்ள துணுக்காய், புதுக்குடியிருப்பு, மணலாறு ஆகிய கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் பயனடைவார்கள். இலங்கையில் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினை அடுத்து எமது மக்கள் அந்நிய நாடான கனடாவுக்கு வந்தனர். கனடா நாடும் அவர்களை வரவேற்று அனுசரணை வழங்கியது. மார்க்கம் மாநகரில் அதிகளவிலான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். கனடாவுக்கு வந்தாலும் அவர்கள் தமது மொழி, கலாச்சாரம் ஆகியவற்றினை மறவாது தொடர்ந்து கடைப்பிடித்து வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. இங்கு ஒரு தமிழ் பிள்ளை ஆங்கிலத்திலும், தமிழிலும் கனடா தேசிய கீதத்தைப் பாடியது மிக அருமையாக இருந்தது" என்றார்.

திரு. விக்னேஸ்வரனுடன் வந்திருந்த திட்டமிடல் அதிகாரியான திரு.நிமலன் கார்த்திகேயன் நன்றி உரை வழங்கிய போது "அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்கள். இங்குள்ள தமிழ் மக்களும் முல்லைத்தீவு மக்களும் இணைந்து செயற்பட இந்த இரட்டை நகர ஒப்பந்தம் வழி வகுத்துள்ளது. இச்சந்திப்பிற்கு வழி வகுத்த மார்க்கம் மாநகர சபை உறுப்பினரான திரு.லோகன் கணபதிக்கும், மேயர் வண. பிராங்க் ஸ்காபிற்றி, பிரதம நிர்வாகியான திரு. அன்டி ரெயிலர் ஆகியோருக்கும் மற்றும் மார்க்கம், பிரம்ரன், மிஸிசாகா, டுர்றம், ஒட்டாவா வாழ் தமிழ் மக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் வடமாகாண முதல்வர் திரு.விக்னேஸ்வரனின் ஒன்பது நாள் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ததோடு சகல வசதிகளையும் செய்து தந்த ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கு ஒப்ப நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றினால் எமது இனத்துக்கு விமோசனத்தை ஏற்படுத்த முடியும்.

வட மாகாணத்தைச் சேர்ந்த பலரும் திரு. விக்னேஸ்வரனுக்கு உதவி செய்துள்ளனர். அத்துடன் நாம் இலங்கைப் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்றார். இரட்டைநகர ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் இந்தியாவில் இருந்து வெளிவரும் "கணையாழி" சஞ்சிகையின் கனடா தமிழ் மரபுத் திங்கள் சிறப்பிதழின் வெளியீட்டு விழா நடைபெற்றது. கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் அதனை வெளியிட்டு வைத்தார். அதன் பதிப்பாளர் திரு.ம. இராசேந்திரனும் வருகை தந்திருந்தார்.

# தமிழ்சமுதாயத்தில் பால்யவயதில் பாலியல் துன்புறுத்தல்



- லலிதா புரூடி -

இதென்னடா இது! எம் தமிழ் சமுதாயத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லையே என நீங்கள் சொல்வது எனக்கு கேட்கிறது. 'A.N.B.U - Abuse Never Becomes Us' எனும் இலாபநோக்கமற்ற நிறுவனத்தினர் 2017 ஜனவரி 20ஆம் திகதி York பல்கலைக்கழக மண்டபத்தில் தமிழ் சமுதாயத்தில் பால்யவயது பாலியல் துன்புறுத்தலைப் பற்றிய நிகழ்வினை நடத்தினர். வெகுசிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமார் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட இளம் யுவதிகள், சில வாலிபர்களுடன் எண்பத்திமூன்று வயதான நானும் கலந்து கொண்டது எனக்கு மனநிறைவு தருகிறது. காலங்காலமாக சகல சமுதாயங்களிலும் உறவினராலும் பிறரினாலும் பால்யவயது பாலியல் துன்புறுத்தல் நடைபெற்று வருகிறது. ஆனால் தமிழ் சமுதாயம் 'எமது சமுதாயத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லையே' என்று மறுதலிப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி, இப்போது 'அன்பு' நிறுவனம் இவ்வாறு சரித்திரம் படைத்திருப் பதை நாம் பாராட்ட வேண்டும்.

அன்பு நிறுவனம் பாலியல் துன்புறுத்தலை வருமுன் தடுக்க, அதை அறவே அழித்தொழிக்க, அதைப்பற்றிய விழிப்புணர்வை உருவாக்க, பாதிக்கப்பட்டோரைக் குணமாக்க பலதரப்பட்ட வகைகளில் செயல் படுகிறது. அன்பு வெளியிட உத்தேசித்திருக்கும் தொடர் - காணொளி இறுவட்டுக்களில் முதலாவதில் ஆங்கிலத்திலும் தமிழிலும், 'இது நடக்கின்றது' - 'It Happens', என்ற ஒரேயொரு வசனத்தை, ஒரு ஐந்து வயது சிறுமி, சிறுமியின் தாய், ஒரு மூதாட்டியுடன் வேறு சிலரும் சொல்வது சகலரின் விழிப் புணர்வையும் தூண்டும் என்பது நிச்சயம்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் இரு பிரபல மனோதத்துவ நிபுணர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பால்யவயது பாலியல் துன்புறுத்தலை பெற்றோர், பாதுகாவலர் எவ்வாறு அடையாளம் கண்டு தெரிந்து கொள்வது, வருமுன் தடுப்பது, பாதிப்பிலிருந்து குணப்படுத்து பற்றி விரிவான விளக்கங்களை அளித்தது பயனுள்ளதாக இருந்தது. இத்துடன் சபையோரை ஈர்த்த கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. The Vagina Monologues என்ற ஆங்கிலக் கவிதையின் சில பகுதிகளையும் அதன் மொழி பெயர்ப்பையும் மிகவும் உணர்வு பூர்வமாக ஒரு யுவதி சொன்னது மனதைத் தொட்டது. கிற்றார் வாசித்தபடி பாடல் ஒன்றை ஒரு யுவதி அழகாகப் பாடினார். இலண்டனில் இருந்து வந்திருக்கும் யுவதி அன்பு நிறுவனத்தை இலண்டனில் வெளியிடு வதைப் பற்றியும் கூறினார். நான் இதுவரை தமிழ் நிகழ்வுகளுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் இதுபோன்ற நிகழ்வு இதுவரை நடந்ததில்லை என்றே நினைக்கிறேன். எம் வாழ்வில் எமது சிந்தனை, சொல், செயல் மூன்றையும் மாற்றி புதிய வாழ்வினை அமைக்க முயற்சிப்போம்.

*Email - abuseneverbecomesus@gmail.com*
*www.anbu.ca*

லலிதா புரூடி - **Lalitha Indranee Brodie**
**lalitha.brodie7@hotmail.com**
**bi-lingualblog:**
***www.lalithabrodie.weebly.com***
***Tel.: 905.270.1214***

# யாவரும்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

இப்படியான, எல்லாம் முடிவிலிப் பருமனான, ஒருமம் ஒன்றுடன்தான் எங்களது பேரண்டம் தோன்றியிருக்க வேண்டும் என்பதை விஞ்ஞானிகளின் கணித முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. பேரண்டத்தின் ஆரம்பம் பிக்பாங் என்கிறார்கள். பேரண்டம் ஒருமம் ஒன்றில் இருந்துதான் வந்ததும் என்கிறார்கள். அதனால் சில விஞ்ஞானிகள் பிக்பாங்கை பெருவெடிப்பாகப் பார்க்காமல், ஒருமமாகப் பார்க்கின்றார்கள்.

Big bang: The singularity at the beginning of the universe எனத் தனது பிரபலமான புத்தகமான A Brief History of Time என்ற நூலின் முதற் பதிப்பில் Stephen Hawking (ஸ்ரீபன் கவ்கிங்) என்பவர் 183ஆம் பக்கத்தில் குறிப்பிட்டு உள்ளார். பொதுவாகவே ஒருமம் என்கிற பதம் விளங்கிக் கொள்வதில்லை. அப்படி விளங்கிக் கொண்டாலும். அதன் இயல்புகள் என்னவென்று புரிவதில்லை. இயற்பியலில் இன்னமும் புதிராக இருக்கும் அப்பகுதியை விட்டுவிட்டு எங்களின் நோக்கத்திற் கானப் பயணத்தைத் தொடர்வோம்.

# தமிழக மாணவர்களின் தை புரட்சி! எப்படி நிகழ்ந்தது? இனி இந்த மாணவர்கள் கூட்டம் என்னவாகும்?

**-சிவதாணு -**

இன்னும் ஆச்சரியம் தீரவில்லை. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுக்க தமிழக மாணவர்களின் ஜல்லிக்கட்டுக்கான அறப் போராட்டத்தை வியந்து வியந்து பேசுகிறார்கள் எழுதி மாய்கிறார்கள். பொங்கல் அன்று அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இளைஞர்கள் முன் கையெடுத்து நடத்திய போராட்டம், தெறித்து விழுந்த தீப்பொறியாகி, தமிழகத் தையே உலுக்கி எடுத்துவிட்டது. இந்திய சுதந்திர போருக்குப் பிறகு இந்திய வரலாற்றில் பொதுமக்களின் முழுமையான பங்கேற்புடன் நடந்த போராட்டம் இதுதான். இந்தி எதிர்ப்பு போருக்குப் பிறகு தமிழ் இளைஞர்களால் வழிநடத்தப்பட்ட மிகப் பெரிய சரித்திர நிகழ்வு இது. சென்ற மாதம் 17ஆம் திகதி தொடங்கி 23ஆம் திகதி வரை தமிழகத்தில் போராட்டக் களமாக மாறாத ஒரு இடம்கூட இல்லை!

தமிழக தமிழர்கள் சினிமாகாரர்கள் பின்னால் அலைகிறார்கள். தமிழ் இளைஞர்களிடம் அரசியல் விழிப்புணர்வு இல்லை என்று கவலைப்பட்டவர்கள், இப்போது, “இந்த மாணவர்கள் அரசி யலுக்கு வரவேண்டும் இவர்களது எழுச்சி எதிர்கால தமிழகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துகிறது’ என்று மகிழ்கிறார்கள். தமிழ் இளைஞர்களின் அமைதியான, அவ்வளவு ஒழுக்கமான அறப் போராட்டத்தைப் பார்த்து, “சென்னைப் பசங்களை நம்பிக் காதலிக்கலாம்” என்று வடஇந்திய கல்லூரி மாணவிகள் வாட்ஸ் அப்பில் செய்தி பகிர்ந்ததாகவும் ஒரு தகவல்.



எல்லாவற்றையும்விட ஆச்சரியம், தலைவன் என்று எவர் ஒருவரும் இல்லை. ஒருங்கிணைப்பாளர் இல்லை. கட்டுப்படுத்துபவர்கள், வழி நடத்துபவர்கள் இல்லை. ஆனால், சிறு அசம்பாவிதம் இல்லாமல், சொல்லி வைத்தது போல் எல்லா ஊர்களிலும் ஒரேபோல், அவ்வளவு ஒழுங்குடன் நடந்தது ஜல்லிக்கட்டுக்கான இளைஞர்களின் அறப்போராட்டம். இந்தப் புதிய அறப் போராளிகள் தமிழ்நாட்டு அரசியல் கட்சி தலைவர்களையும் அரசி யல்வாதிகளையும் நிராகரித்ததும் அனைவரையும் அதிர்ச்சியத்தில் ஆழ்த்தியது.

எப்படி நிகழ்ந்தது இந்த தன்னெழுச்சி? அவ்வளவு அமைதியாக நடந்த போராட்டம் திருஷ்டிப் பொட்டுபோல் ஏன் அவ்வளவு வன்முறையாகி முடிந்தது?

எப்படி தொடங்கியது? “சுதந்திரப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் இருந்து பல போராட்டங்களைப் பார்த்திருக்கிறேன். ஊர்வலம் போவது, கடைகளை அடைக்கச் சொல்வது, சாலைமறியல் செய்வது, பேருந்துகளை எரிப்பது இத்தியாதி இத்தியாதி போரட்ட வடிவங்களையே கண்டுவந்த எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும் விதத்தில் இருந்தது இந்த இளைஞர்களின் போராட்ட வடிவம். குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்துகொண்டு, தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் கோஷங்களை எழுப்பிக்கொண்டு, அவ்வளவு ஒழுங்குடன் ஒரு அறப்போராட்டத்தை நடத்தினர். எந்த ஒரு கட்சி அடையாளமும் இல்லை. தலைமை என்று ஏதும் இல்லை. இன்னும் எத்தனையோ விதமான இல்லைகள். ஆனாலும் எப்படி இந்தப் போராட்டம் அவ்வளவு கட்டுக்கோப்புடன் நடந்தது? எப்படி இத்தனை ஆயிரம் பேரை குறிப்பிட்ட இடத்தில் கூட்ட முடிந்தது? இந்த இளைஞர்களைப் பார்த்து பிரமிக்கிறேன்” என்கிறார், நெல்லை போராட்டக் களத்தில் நம்முடன் பேசிய மூத்த தமிழறிஞர் வெள் உவன்.

உச்ச நீதிமன்ற தடை காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடைபெறாத நிலையில் இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு கண்டிப்பாக நடைபெறும் என நம்பி இருந்தவர்களுக்கு கடைசி நேரத்தில் நீதிமன்றம், மத்திய மாநில அரசுகள் கைவிரித்ததால் ஏமாற்றமே மிஞ்சியது. இதையடுத்து அரசியல், சாதி, மதங்களைக் கடந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள், தன்னார்வலர்கள் மாநிலம் முழுவதும் போராட்டத்தில் குதித்தனர். தமிழகம் முழுவதும் பரவிய போராட்டம் பொங்கல் முடியும் தருவாயில் தணிந்திருந்த நிலையில், ஜல்லிக்கட்டுக்கு உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூரில் போராடியவர்கள் மட்டும் 16ஆம் திகதி இரவாகியும் கலைந்து செல்லாமல் இருந்தனர். அங்கிருந்தவர்களை இரவோடு இரவாக காவல்துறை கைது செய்ய, அதனால் அடுத்த நாள்

தொடர்ச்சி 25ஆம் பக்கம்)



## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## [பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை]



- கனி -
416.261.1348
ptons@hotmail.ca

சென்ற தடவையில் ஜோர்ஜ் லெமற்ற (Georges Lemaitre) என்பவரை அறிமுகப் படுத்தி, பிக்பாங் என்பதில் இருந்துதான் எங்களது பேரண்டம் தோன்றியது என்பதை அறிந்தோம். 13700 மில்லியன் வருடங்களின் முன்னர் பிக்பாங் என்ற பெருநிகழ்வொன்று ஏற்பட்டுள்ளது. அப்போதே பிக்பாங் ஒருமமும் தோன்றி விட்டது என்பதை விஞ்ஞானிகள் கூறிக் கொள்ளும் விதத்தில் ஏற்றுக் கொள்வோம். இனி அதன் வழியிலே மேலே செல்வோம்.

### பிக்பாங் ஒருமம்

**Singularity** என்கிற ஒருமம் என்பதற்கு விஞ்ஞானிகள் கொடுக்கும் விளக்கம் சுவாரசியமானது. அதனையும் விளங்கிக் கொள்வோம். அதற்காக, முப்பரிமாண வெளி, நாற்பரிமாண வெளி என்பவை பற்றித் தெரிந்து கொள்வோம்.

### முப்பரிமாண வெளியும் நாற்பரிமாண வெளியும்

நியூட்டனின் காலத்தில் இருந்து எங்களது பேரண்டம் நிலையான ஒரு பெருவெளியினைக் கொண்டது எனக் கருதப்பட்டது. இந்த வெளியானது ஏராளமான புள்ளிகளால் ஆனது (அல்லது புள்ளிகளைக் கொண்டது). இந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றினது நிலையையும் மூன்று சிறப்பான கணியங்களால் குறிப்பிட்டுக் காட்டலாம். எப்படியெனில் ஏதாவதொரு இடத்தில் இருந்து (அதாவது ஏதாவது ஒரு புள்ளியில் இருந்து) முப்பரிமாண வெளியின் புள்ளிகள் ஒவ்வொன்றினையும் நீளப்பக்கமாக எவ்வளவு தூரத்தில் உள்ளது (இதனை நீளம் என்பார்கள்.), அகலப்பக்கமாக எவ்வளவு தூரத்தில் உள்ளது (இதனை அகலம் என்பார்கள்), உயரப் பக்கமாக எவ்வளவு தூரத்தில் உள்ளது (இதனை உயரம் என்பார்கள்) எனக் கூற முடியும். ஆக, நியூட்டன் காட்டிய முப்பரிமாணவெளியில் உள்ள புள்ளிகளை, (நீளம், அகலம், உயரம்) என்ற மூன்று நிலைப்பாடுகளில் குறித்துக் காட்ட முடியும். இதனால் இதனை முப்பரிமாணவெளி என்கிறோம்.

முப்பரிமாண வெளியில் பேரண்டத்துள் என்ன நிகழினும் ஒரு புள்ளியின் நிலை எப்போதும் ஒரே இடத்தில்தான் இருக்கும். இந்த முப்பரிமாண வெளியிற்கே எங்களின் கண்களும் உணர்வுகளும் பழக்கப்பட்டு விட்டன. இந்த நீள, அகல, உயரச் சமாச் சாரங்களுக்கு அப்பால், இவற்றுடன் கலக்காமல், நேரம் எப்பொழுதும் தன் கணக்கில் ஓடிக்கொண்டு இருக்கிறது. இது தான் நியூட்டன் எங்களுக்குக் காட்டித்தந்த பிரபஞ்சம்.



அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புக் கொள்கை நாங்கள் காணுகின்ற கருதுகின்ற நியூட்டனின் முப்பரிமாண வெளியும், நேரமும் தனித்தனியானவை இல்லை ஒன்றாக இணைந்து இருக்கிறது என்கின்றது. அதனால் உண்மையில் வெளியின் முப்பரிமாணமும் நேரமும் இணைந்த நாற்பரிமாண வெளியினால் ஆனதுதான் எங்கள் பேரண்டம் என்கிறது இந்த நாற்பரிமாணம். இதை பொதுவாக விளங்கிக் கொள்வது கடினம். ஒருமத்தை எங்களது மனக் கண்களிற் கொண்டு வருவதற்கு இந்த நாற்பரிமாணவெளி பற்றிய விளக்கம் அவசியமாகின்றது.

பொதுவில், நாங்கள் பார்ப்பது, அறிந்து கொள்வதெல்லாம் மிகப் பிரமாண்டமான வெளியின் ஒரு சிறு பகுதியே என்பதால் தான் முப்பரிமாண வெளியின் மாயத் தோற்றத்தையே காண்கிறோம். நாற்பரிமாண வெளியின் தன்மையும் இயல்புகளும் எங்கள் கண்களில், உணர்வுகளில் தென்படுவதில்லை. நாங்கள் கருதுகிற உறுதியான முப்பரிமாண வெளியுடன் நேரத்தை இணைத்துவிட முப்பரிமாண வெளி இயல்பில் முற்றிலும் மாறிவிடுகின்றது. ஒவ்வொரு புள்ளிகளுடனும் நேரமும் இணைந்திருப்பதால் அதனை இப்போது வெளி என்று அழைப்பதில்லை நிகழ்வு என்றே அழைக்கிறோம். அத்துடன் நேரத்துடன் இணைந்ததால், நாற்பரிமாண வெளியாகி உறுதியானதாக இல்லாமல், இறப்பர்போல் வளையக் கூடிய தன்மையையும் பெற்றுவிடுகின்றது. அதாவது முப்பரி மாணவெளி நாற்பரிமாணவெளியாக அமைகையில் அதன் இயல்புகள் முற்றாகவே மாறிவிடுகின்றன முக்கியமாக, நாற்பரிமாணவெளி, முப்பரிமாணவெளியைப் போல் உறுதியானதாக இராமல், இறப்பர் போன்று வளையும் தன்மையைப் பெற்று விடுகின்றது.

இப்படி வளையக் கூடியதான நாற்பரிமாணவெளியின் புள்ளியில் (அதாவது நிகழ்வில்) சக்தி, அல்லது ஏதாவது சடம் (பொருள்) இருந்தால் அவ்விடத்தில் அது வளைவுறும். அதாவது சக்தி, திணிவு என்பவற்றின் செல்வாக்கினால் வெளிநேரப் பரிமாணம் வளைந்துவிடும். வெளி-நேரப் பரிமாணத்தின் புள்ளியில் (நிகழ்வில்) திணிவோ அல்லது சக்தியோ தேங்கும் போது அப்புள்ளி வளைந்து விடுகின்றது. இழுக்கப்பட்ட இறப்பர்த் தாளில் பொருள் ஒன்றை வைக்கையில் இறப்பர்த் தாள் எவ்விதம் வளைவுறுகின்றதோ அவ்விதம் நாற்பரிமாணத்தில் பொருட்கள் வைக்கப் படும் போது, பொருட்களைச் சுற்றி நாற் பரிமாணம் வளைந்து விடுகின்றது என ஒப்புவமையாகக் கூறுவார்கள்.

நாற்பரிமாணப் புள்ளியில் (நிகழ்வில்) சேர்ந்து விட்ட திணிவின் பருமனுக்கு அல்லது சக்தியடர்த்தியின் அளவுக்கு ஏற்ப வளைவு பெரியதாகவோ அல்லது சின்னதாகவோ வளைவு (அல்லது பள்ளம்) இருக்கும். பெரிய திணிவெனில் வளைவு பெரியதாக இருக்கும். இவ்வளை வில் ஒரு பொருளை வைத்தால் என்ன நடக்கும்? வளைவின் காரணமாக, வளை வின் அளவிற்கு ஒப்ப அப்பொருள் அவ்வளைவை ஏற்படுத்திய ள்ள பொருளினை நோக்கி இயங்குமல்லவா. இப்படி யான இந்த வளைவின் இயல்பினைத்தான் அயன்ஸ்ரைன் ஈர்ப்பாகக் காட்டியிருந்தார். சரி, இப்படி நாற்பரிமாணவெளி வளை யுமெனில் எவ்வளவுக்கு வளையும்? தாங் கிக்கொள்ள முடியாத அளவு பாரம் சேருகையில் வெளிநேரப் பரிமாணத்தில் ஓட்டையோ அல்லது உடைவோ ஏற்படாதா? இயல்பாகவே கேள்விகள் எழும். சிந்தனை யின் போக்குச் சரியானதுதான். பென்னாம் பெரிய (முடிவிலிப்) பாரம் அல்லது சக்தி சேர்ந்துவிட்டால், அப்புள்ளியின் வெளிநேரம் பரிமாணத்தின் வளைவும் பென்னாம் பெரியதாக (முடிவிலியாக) இருக்கும். (இந்த வளைவு என்பது எங்களின் விளக் கத்திற்காகவே. உண்மையில் பொருட்கள், அல்லது சக்தியானது, தன்னைச் சூழ உள்ள நாற்பரிமாண வெளியை இழுத்துத் தன்னுடன் சுருட்டி வைத்துக்கொள்ளும் தன்மையைக் கொண்டது எனப் பொதுச் சார்புக் கொள்ளை கூறுகிறது. இதனை விளங்கிக் கொள்வதற்கே, விஞ்ஞானிகள் வளைகிறது என்கிறார்கள்.)

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படியான பெரும் வனைவுகளான பல புள்ளிகள் எங்களது பேரண்டத்துள் உள்ளன என்கிறார்கள் விஞ்ஞானிகள். எடுத்துக் காட்டாக கலக்சிகளின் மையப் புள்ளிகளைக் குறிப்பிடுகிறார்கள். இப்படியான, மிகமிகப் பாரமான, முடிவிலி வளைவில் வளைந்த புள்ளிகளைத்தான் ஒருமங்கள் என்கிறார்கள். எங்களது பேரண்டத்துள் கருந்துளைகள் உள்ளன. இக்கருந்துளைகளின் மையங்கள் வெளி-நேரப் பரிமாணத்தின் வளைவானது முடிவிலியாக இருக்கும் புள்ளியாக இருப்பதால் கருந்துளைகளின் மையங்களில் ஒருமங்கள் உள்ளன என்கிறார்கள்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

*Also other Acute & Chronic Problems*

HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

# இனி இல்லை மனஅழுத்தம்!

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)



C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm


## No More Stress

இன்றைய பரபரப்பான உலகில் சிறியவர் முதல் பெரியவர்வரை அடிக்கடி கூறுவது 'ஸ்ரெஸ்' (Stress) ஆக இருக்கின்றது என்பது தான். இத்தகைய அவசரமும் பதட்டமும் அதிகரிக்கும்போது பலருக்கு அது மன அழுத்தத்தில் வந்து முடிகிறது. ஒரு குறிப்பிட்ட அளவிலான மன அழுத்தம் நேர்மறை மன அழுத்தம் எனப்படும். ஏனெனில் அது நமது செயல்திறனை அதிகரிக்க உதவுகிறது. அளவு மீறினால் அமிர்தமும் நஞ்சு ஆகும்போது மன அழுத்தத்தைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? அதிகமான மன அழுத்தம் (Over stress) எதிர்மறையாக மாறி மன சோர்வையும், மன உளைச்சலையும் உண்டாக்கி விடுகிறது. இதனால் ஏற்படும் பக்க விளைவுகள் ஏராளம்.

### மன அழுத்தத்தால் ஏற்படும் தீமைகள்

மனஅழுத்தம் நம் உடலிலும் மனப்போக்கிலும் பல மாறுதல்களை ஏற்படுத்துகிறது. இதனால் நாளடைவில் பலவிதமான நோய்களை உருவாக்குகின்றது. எனவே இதனை முன்கூட்டியே உணர்ந்து அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கையாளும் போது பலவிதமான நோய்களிலிருந்து நம்மை நாமே பாதுகாக்கலாம்.

நாளடைவில் மன அழுத்தம் அதிகமாகும் போது நமது உடலில் நோய் எதிர்ப்புசக்தி குறைந்து விடுகிறது. மேலும் உடலில் எதிர்ப்புச்சக்தி குறைவதன் காரணமாக பலவித நோய்களுக்கு ஆளாக வேண்டி ஏற்படுகிறது.

மன அழுத்தம் அதிகமாகும்போது நமது சிந்தனை, பிறரிடம் பழகும் விதம், பேசும் முறை எல்லாமே மாறி விடுகிறது. வேலை செய்யும் இடத்திலும், வீட்டிலும் சண்டை சச்சரவு ஏற்பட்டு நிம்மதி குறைவும் ஏற்படலாம். அத்துடன் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றிக்கு இதுவும் ஒரு காரணமாகலாம். மேலும் மலச்சிக்கல், செரியாமை, வயிற்றுப் பொருமல் போன்ற நோய்கள் தானாகவே வந்து சேரும்.

### மன அழுத்தத்தின் அறிகுறிகள்

1. கோபம், பதட்டம், படபடப்பு
2. வேகமாக மூச்சுவிடுதல், இதயத்துடிப்பு அதிகரித்தல்.
3. அதிகமான வியர்வை, குறிப்பாக உள் - ளங்கை, உள்ளங்கால் ஏற்படுதல்.
4. தலைவலி, மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு, முதுகுவலி, கழுத்து, இடுப்புப் பகுதியில் தசைப்பிடிப்பு உண்டாதல்.
5. மிகவும் சின்னப் பிரச்சினைகளைக்கூட கையாள்வது கடினமாக இருக்கும்.
6. அற்ப விடயங்களானாலும் கோபப்படுதல், கவலைப்படுதல், கூச்சல்போடுதல்.
7. எதற்கும் பிறரிடம் குற்றம் கண்டுபிடித்தல். தனது தவறுகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை. தனது வாழ்வைத் தொலைத்து விட்டது போன்ற உணர்வு.
8. கழுத்தின் பின்புறம் மற்றும் தோள்பட்டை என்பன இறுக்கமடையும். இதனால் மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் குறை வடைவதால் மறதி, சுயநினைவை அடிக்கடி இழப்பது, மயக்கம் போன்றவை ஏற்படும்.
9. எதிலும் அக்கறையின்றி, வாழ்வதில் விருப்பம் குன்றி இருப்பதுடன் தற்கொலை செய்யக் கூடிய நிலைக்கும் சில சமயங்களில் தள்ளப்படலாம்.

### மன அழுத்தம் வராமல் தடுக்க



1. இதற்குரிய சிகிச்சைமுறைகளில் முதலில் சிறிது நேரம் தியானம் (Meditaion) செய்வ தன் மூலம் மனதிற்கு அமைதி கிடைக்கும். பதட்டம் குறையும். மாலை நேரங்களில் வழிபாட்டுத்தலங்களுக்குச் சென்று வழிபடு வதும், தமக்கு வேண்டியவர்களுடன் சேர்ந்து மனம் விட்டுப்பேசி மனச் சுமையைத் தீர்ப்பதன் மூலமும் மன அழுத்தத்தைக் குறைக்கலாம்.
2. உணவுமுறையில் சில மாற்றங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏலக்காய், கொத்தமல்லி, கறிவேப்பிலை, புதினா என்பவற்றை அதிகம் சேர்க்க வேண்டும்.
3. பித்தத்தை அதிகரிக்கும் உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
4. தேங்காய், பாதாம், நெய், பால் இவற்றை அளவோடு உட்கொண்டால் செரிமான சக்தி அதிகமாகி மன அழுத்ததைக் குறைக்கும்.
5. கீரைவகைகள், பழங்கள் என்பவற்றை உணவில் சேர்க்க வேண்டும்.
6. எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகளை முற்றிலும் தவிர்ப்பது சிறந்தது.
7. தினமும் குறைந்தது 6 மணிநேரமாவது தூங்க வேண்டும்.
8. தினமும் உடற்பயிற்சி செய்யும்போது முக்கியமாக யோகாசனப் பயிற்சி செய்வது முழுமையான பலனைக் கொடுக்கும்.

### யோகாசனங்கள்

1. சர்வாங்காசனம் 2. சிரசாசனம்

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்...)


CICS Centre for Immigrant & Community Services

**புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம் வழங்கும் சேவைகள்**

**பெண் குடிவரவாளர்களுக்கு இலவச குழந்தை வளர்ப்புப் பட்டறை**

1 ஆவது கூட்டம்: குழந்தைகளுடன் உறவை ஏற்படுத்துதல்: அரவணைப்பும் மற்றும் சேர்ந்திருத்தல்
2 ஆவது கூட்டம்: வளரும் குழந்தைகளுக்கான சத்துஉணவு
3 ஆவது கூட்டம்: ஒன்ராறியோ பாடசாலை அமைப்பு முறை
4 ஆவது கூட்டம்: பள்ளி அறிக்கை அட்டையை புரிந்துகொள்ளுதல்

காலம்: செவ்வாய்க்கிழமை, தை 17, 31 மாசி 7, 14 2017
நேரம்: 2:30 to 4:30pm
மொழி: ஆங்கிலம்
இடம்: புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
7220 Kennedy Road, Unit-5, Markham, ON L3R 7P2
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-479-7926/ 905-305-4124/ 905-415-9763
(19 மாதங்கள் முதல் 12 வயதுக்கு உள்பட்ட குழந்தை பராமரிப்பு பங்கேற்கும் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படும்)

**பெண்களுக்கான தொண்டர் பயிற்சித்திட்டத்தில் பங்குபற்றுவதால்**

- ✓ உங்கள் ஆங்கில திறனை அதிகரித்துக்கொள்ள
- ✓ புதிய பெண் குடிவரவாளர்களுக்கு வழிகாட்டியாக அத்துடன் தொண்டர் சேவை புரிய
- ✓ கனேடிய வேலை அனுபவம் பெற
- ✓ சுயவிபரக் கொத்தை வளப்படுத்த
- ✓ பயிற்சி சான்றிதழை பெற்றுக்கொள்ள

மொழி: ஆங்கிலம்
நேரம்: 12:30-2:30pm ஜனவரி 20, 2017 to பெப்ரவரி 24, 2017 (வெள்ளிக்கிழமைகளில்)
இடம்: புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
7220 Kennedy Road, Unit-5, Markham, ON L3R 7P2
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-305-4124 or 905-415-9763

- ✓ YRT பஸ் ரிக்கெற் தகுதியுள்ள பங்கேற்பாளர்களுக்கு கிடைக்கும்
- ✓ 19 மாதங்கள் வயது முதல் 12 ஆண்டு வரை உள்பட்ட குழந்தை பராமரிப்பு பங்கேற்கும் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படும்

**பெண்களுக்கு இலவச யோகா வகுப்புகள்**

வாருங்கள் வந்து யோகாவின் நன்மைகளை பகிர்ந்துகொண்டு பயனடையுங்கள்!
மொழி: ஆங்கிலம்
நேரம்: ஒவ்வொரு செவ்வாய் கிழமையும், பெப்ரவரி 28, 2017 வரை (10:00am - 11:00pm)
ஒவ்வொரு புதன் கிழமையும், ஜனவரி 18, 2017 முதல், பெப்ரவரி 15, 2017 வரை (2:30pm - 3:30pm)
இடம்: புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
7220 Kennedy Road, Unit-5, Markham, ON L3R 7P2
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-479-7926 Ext. 3201 / 3202 or 905-415-9763

**தயவுசெய்து உங்கள் நிரந்திர குடிவரவாளர் அட்டையை இந்த கூட்டங்களுக்கு கொண்டு வரவும்**

Immigration, Refugees and Citizenship Canada
Immigration, Réfugiés et Citoyenneté Canada

# இலங்கை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆகியோருக்குத் தெரியும் எனவும் கூறப்படுகின்றது. இதனை உறுதிப் படுத்துவதாக அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் வெளியிடப்பட்ட கருத்து அமைந்துள்ளது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்படும் - வடக்கு கிழக்கு இணைப்புச் சாத்தியமில்லை - தீர்விற்கு பெயரில்லை என்று அவர் கூறியுள்ளார். உண்மையில் இவ்வாறானதொரு தீர்வுத் திட்டமே உத்தேசமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது. வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெறும்வரை சாத்தியமாகா-தென சுமந்திரன் தெரிவித்துள்ளார். அரசாங்கம் வடக்குக் கிழக்கை இணைக்க விரும்பவில்லை என்பதற்கு அப்பால், முஸ்லிம்களின் விவகாரமும் இதில் தடை-யாகவே உள்ளது என்பதும் உண்மையே.

ஆனால், அதிகாரங்களை மீளப் பறித்தெடுக்க முடியாத வகையிலான சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு, எந்தவொரு சமூகத்தையும் பாதிக்காத முழுமையான அதிகாரப் பகிர்வாக அமையும் வகையி-லேயே தீர்வுத் திட்டம் உருவாக்கப்படுகின்றதென அவர் தெரிவித்துள்ளார். சுமந்திரன் தெரிவித்துள்ள இந்த விடயம் சம்பந்தருக்குத் தெரியாமலிருக்கப் போவதில்லை. இவ்வாறான தீர்வுத் திட்டம் ஒன்று வருமானால் கூட அதற்கு வேறு வியாக்கியானங்களை முன்னிறுத்தி அரசாங்கத்தை குழப்பத்திலாழ்த்தும் செயற்பாடுகளை மஹிந்த தரப்பினர் முன்னெடுப்பர் என்பதும் உறுதி.

இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிரான கருத்துக்களையே மஹிந்த அணியினர் கூறி வருகின்றனர். குறிப்பாக ஹம்பாந்தோட்டையில் சீனாவிற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணியை வழங்குதற்கு அரசாங்கம் தயாராகியுள்ள நிலையில் நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதாக மஹிந்த ராஜபக்ஸவும் அவரது ஆதரவாளர்களும் கூக்குரலிட்டு வருகின்றனர். தனது காலத்தில் சீனாவுடன் அதிக நெருக்கத்தைப் பேணி வந்த மஹிந்த தற்போது சீனாவிற்கு எதிரானவர் போல் காட்டிக் கொள்கின்றார்.

நீண்ட முயற்சி, கலந்துரையாடல்களுக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெற்றுக்கொள்ள வழியேற்பட்டுள்ள நிலையில் அதற்கும் எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டின் இறைமையைப் பாதிக்கும் பல்வேறு நிபந்தனைகளுக்கு இணங்கியே இந்த வரிச்சலுகையை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளதென மஹிந்த தெரிவிக்கின்றார். இந்த வரிச்சலுகை நிறுத்தப்பட்டதால் நாட்டிற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் அவர் கூறுகின்றார். நாட்டின் இறைமையை பாதிக்கும் வகையில் எதனையும் செய்யக் கூடாது என்பதாலும், நாட்டின் வளங்களை வெளியாருக்கு தாரைவார்க்க முடியாது என்கின்ற கொள்கை காரணமாகவும் தான் இந்த வரிச்சலுகையை மீளப்பெற முயலவில்லை என்றும் மஹிந்த தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக் கைகளும் நாட்டிற்கு பாதிப்பானது என்று தொடர்ந்து கூறிவரும் எதிரணியினர் ஆங்காங்கே நடைபெறும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களையும் பின்னணியிலிருந்து தூண்டிவிடும் வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். இந்த அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கை களையும் குழப்பியடித்து ஒரு கட்டத்தில்

ஆட்சிப் பொறுப்பை கைப்பற்ற மஹிந்த ராஜபக்ஸ முயன்று வருகின்றார்.

எனினும் 2020 வரை இந்த அரசாங்கத்தை அசைக்க முடியாது என்றே பொதுவான நோக்கு நிலையிலிருந்து கூறப்படுகின்றது. மேற்கு நாடுகளின் பலத்த ஆதரவு இந்த அரசாங்கத்திற்குள்ள நிலையில், நிலைமைகளை சர்வதேச சமூகமும் அவதானித்த வண்ணமேயுள்ளது. முன்னர் தடை செய்யப்பட்டிருந்த ஜி. எஸ். பி வரிச்சலுகையை தற்போது மீள வழங்க முன்வந்துள்ளமை மட்டுமன்றி இன்னும் பல உதவிகளையும் செய்து இந்த அரசாங்கத்தை பலப்படுத்த சர்வதேச நாடுகள் மேலும் பல உதவிகளை வழங்கும்.

இதேவேளையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை கையாளும் வகையிலான எச்சரிக்கைகளைக் கூட மறை-முகமாக சர்வதேச நாடுகள் வழங்கலாம். அண்மையில் சிங்களப் பத்திரிகையொன்று இரு முக்கிய நாடுகளை தங்கள் தூதரகத்தினூடாக மஹிந்த ராஜபக்ஸவுடன் தொடர்பு கொண்டு உரையாடியதாகவும். செயற்பாட்டு அரசியலிலிருந்து மஹிந்தவை ஒதுங்கி இருக்குமாறு கோரியதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது. இது உண்மையா பொய்யா என்பதை விடவும் இவ்வாறெல்லாம் நடைபெற சாத்தியமில்லா மலில்லை என்றே கூற வேண்டும்.

போர்க்குற்றம் தொடர்பில் மஹிந்தவை மைத்திரிபால சிறிசேனவே காப்பற்றினார் எனத் தற்போது அமைச்சர்கள் பலரும் கூறி வருகின்றனர். மஹிந்த மீண்டும் ஜனாதிபதியாக வென்றிருந்தால் போர்க் குற்றம் தொடர்பிலான அழுத்தம் அவருக்கு அதிகரித்திருக்கும். தற்போது ஐ.நாவும், சர்வதேச நாடுகளும் இவ்விடயத்தில் ஒரு மென்போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் போர்க் குற்றம் தொடர்பில் வேறுவிதமான பொறி-முறைகளை அமைத்துத் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிவரும் என்று சில நாடுகள் மறைமுகமாக மஹிந்தவிற்கு எச்சரிக்கை விடுத்தாலும் அது நடைபெறக்கூடியதே.

இந்த நிலையில் மஹிந்தவின் ஆட்சிக் கவிழ்ப்பு ஆசை இலகுவாக நிறைவேறப் போவதில்லை. எனினும், நல்லாட்சி அரசாங்கத்திற்கு தலையிடி கொடுக்கும் வேலை-களை அவர் செய்து கொண்டுதானிருப்பார். அதனால், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் புதிய அரசியல் யாப்பு உருவாக்கம், தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் போன்ற முக்கியமான கருமங்களில் தடையும் தாமதங்களும் தொடரவே செய்யும்.

# அமெரிக்காவின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவையான குடிவரவுப் பத்திரங்கள் இல்லா மல் அமெரிக்காவுக்கு வரும் அக-திகளை குடியமர்த்தும் நகரங்களான லொஸ் ஏஞ்சல்ஸ், சான்பிரான்சிஸ்கோ போன்ற அகதிகளின் சரணாலய நகரங்களுக்கான (Sanctuary Cities) அமெரிக்க மத்திய அரசின் உதவியை நிறுத்தும் நிர்வாக ஆணையில் டொனால்ட் ட்ரம் 2017 ஜனவரி 25இல் கையெழுத்திட்டார். இந்நகரங்களில் பெரும்பாலானவை ஜன-நாயகக்கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன.

### வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் *(NAFTA)*

வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அடுத்த 30 நாட்களுக்குள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்றும் தகுந்த நேரத்தில் அதை புனரமைப்பு செய்வது பற்றி தீர்மானிக்கப்படும் என டொனால் ட்ரம் தெரிவித்தார்.

TPP போல் அல்லாது NAFTA ஒப்பந்தம் ஏற்கனவே நடைமுறையில் இருப்பதால் அதில் திருத்தம் கொண்டுவர அவ்வொப்பந் தத் தில் கையெழுத்திட்ட நாடுகள் உடன் பட வேண்டும்.

கனடாவுடன் NAFTA உடன்படிக்கையின் கீழ் அமெரிக்காவின் 35 மாநிலங்கள் பல ஏற்றுமதி இறக்குமதிளை செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. இவ்உடன்படிக்கையில்



இருந்து அமெரிக்கா விலகினால் 30 ஆயிரம் அமெரிக்கத் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என அமெரிக்க வாகன உற்பத்தியாளர்களின் அமைப்பு ஒன்று தெரிவிக்கிறது. NAFTA ஒப்பந்தத்தை அமெரிக்கா புனரமைப்பு செய்யும்போது கனடாவிற்கு பாதிப்பு ஏற்படமாட்டாது என டொனால் ட்ரம் இற்கு பொருளாதார விடயங்களில் ஆலோசனை வழங்கும் Stephen Schwaryzman ஊடகவியலாளர் களுக்குத் தெரிவித்தார்.

# காணாமல்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக எழுத்து மூலம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உறுதி மொழி வழங்கியுள்ளார். எனினும், காணாமல் போனவர்களை கண்டறிவதற்கான பொறிமுறை எதுவும் அமைக்கப்படுமா என்பது சந்தேகமே. காணாமல் போனவர்கள் பலர் உயிருடன் இல்லை எனப் பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துவிட்ட நிலையில், காணாமல் போனவர்களுக்காக இழப்பீடு வழங்குதன் மூலம் இந்தப் பிரச்சினையை முடித்து வைக்கலாம் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவே தெரிகின்றது.

# கனடாவில் முதியோருக்கான....

13ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடம் $50,000க்குட்பட்டதாக அவர்களுக்கு இருக்க வேண்டும்.

- வீட்டில் தண்ணீரின் பாவனை என்பது 400M³ என்ற அளவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.


மேற்குறிப்பிட்ட விடயங்களுக்குள் உட்படுகின்றவர்களுக்கு வருமான வரியில் சிறு சலுகை கிடைக்கும். செலுத்திய தண்ணீர் கட்டணமும் மீளப் பெறலாம். முதல் முறை விண்ணப்பிப்பவர் அடையாள அட்டையினூடாக தனது வயதினை நிரூபிக்க வேண்டும். வருமான வரி நிறுவனத்தின் 'மதிப்பீட்டு அறிக்கை' (Notice of Assessment) விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.


**MATH & PHYSICS TUTION**

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



# ஜல்லிக்கட்டு (சல்லிக்கட்டு) தமிழர்களின் மரபுவழி விளையாட்டு



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

இன்று உலகில் உள்ள தமிழர்களின் உணர்ச்சியையும், வீரத்தையும் தூண்டி விட்டிருக்கும் ஜல்லிக்கட்டு விவகாரம் ஒட்டுமொத்த இந்தியாவையும் அசைத்து கொண்டிருக்கிறது. ஜல்லிக்கட்டு விளையாட்டு தமிழர்களுக்கு புதியதொன்றல்ல. இந் நிகழ்வு காளைகளுக்கு பெயர்போன தமிழகத்தில், தைப்பொங்கல் நாட்களில், பல இடங்களிலும் நடைபெறும் ஒரு முக்கிய நிகழ்வாகும். குறிப்பாக மாட்டுப்பொங்கல் தினத்தில், இப்படியான நிகழ்வுகள், இளையோர்களை அப்படியே ஈர்த்துவிடும். உயிரைக்கூட மதியாமல் காளையின் திமில் (ஏரிப்பகுதி) பகுதியை அப்படியே அள்ளி அணைத்துக்கொண்டு போராடும் இளைஞர்களை காணும்போது வீரம் பொங்கும். இப்படியும் துணிச்சல் ஏற்படுமா என்ற கேள்வியே எழும். பல்வேறு இடங்களில் இருந்தும் கொண்டுவரப்பட்ட காளைமாடுகள் குறிப்பிட்ட இடத்தில் வைத்து அங்குள்ள சிறிய வாசல் திறக்கப்பட்டவுடன் கொம்புகளை அங்கும் இங்கும் ஆட்டியபடி துள்ளிக் குதித்து மைதானத்தில் நுழைந்து விடும். காத்துக்கொண்டிருக்கும் இளைஞர்கள் அதனை அடக்கும் ஆவலில் அதன் திமில் பகுதியை பிடிப்பார்கள். இந்த மாடுகளுக்கு திமில் என்ற வலிமையான பகுதி ஒரு கொடை. இது இல்லையென்றால் எதனையும் பிடித்து அடக்க முடியாது.



ஜல்லிக்கட்டு நிகழ்வு சங்ககாலம் முதல் தமிழர்களுக்குரிய பாரம்பரிய விளையாட்டாக இருந்துள்ளது. இலக்கியங்களில் ‘ஏறுதழுதல்’, ‘மஞ்சுவிரட்டு’ என்ற பெயர்களில் அழைக்கப்பட்டன. இளம் வாலிபர்களுக்கும் காளை என்ற இலக்கியப் பெயர் உண்டு. இக்காளைகள் காளைமாடுகளை அடக்கி வெற்றிபெற்ற நிகழ்வுகள் இலக்கியங்களில் உள. தற்போது ஜல்லிக்கட்டு என்பது சல்லிக்கட்டின் மறுவடிவமாகும். சல்லி என்பது நாணயங்களாகும். கட்டு என்பது முடிச்சாகும். இச்சல்லிக்கட்டுகளை காளையின் கொம்புகளில் கட்டி விளையாட்டிற்கு விடுவதால் இந்நிகழ்வு சிறப்புறும்.

ஜல்லிக்கட்டு சங்ககால வரலாறுகளில் கி.பி 400-100 காலப்பகுதிகளில் நிகழ்ந்துள்ள தினை இலக்கியங்களில் காணமுடியும். முல்லைநில பகுதியில் வாழ்ந்த மக்களே இந்த நிகழ்வின் ஆரம்பகர்த்தாக்களாவர். பின்னர் இந்நிகழ்வு பொதுவான மைதானத்தில் பரிசு பெறும் விளையாட்டாக மாறியது. சிந்துவெளிநாகரிகாலத்தில் இந் நிகழ்வுக்குரிய கல்வெட்டுகள் இருந்துள்ளன. இவை நியூடெல்கியில் உள்ள தேசிய அரும்பொருட்காட்சியகத்திலும், தமிழ் நாட்டில் உள்ள தேசிய காட்சியகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. மதுரைக்கு அருகில் உள்ள குகையில் கெயோலின் என்னும் வெள்ளை நிற கனிப்பொருளால் வரையப்பட்ட பதிவில் ஒரு தனிமனிதன் ஒரு காளையை அடக்குவதுபோல் உள்ளது. இது 2500 வருடங்கள் பழமை வாய்ந்தது என்கின்றனர். இதில் குறிப்பிட்ட தூரத்திற்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)

JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- Mixers
- Window Assemblers.
- Forklift Opetators.
- CNC Machine set-up/ Operators.
- Packagers & Assembly line Workers.
- Welders MIG & TIG.
- Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@gmail.com

STAFF MASTER INC.

# அதிமுகவில் நிகழும் மாற்றங்கள் குறித்து திமுக.,வுக்கு அக்கறை இல்லை! கனிமொழி கருணாநிதி

## நேர்காணல்

**சந்திப்பு : சிவதாணு**

பரபரப்பாக இருக்கிறது தமிழக அரசியல் களம். அதிமுகவைத் தொடர்ந்து திமுகவிலும் தலைமை மாற்றம் நிகழ்ந்துள்ளது. திமுகவின் செயல் தலைவராக மு.க. ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதிமுக போலவே திமுகவிலும் தலைமை மாற்றம் பெரிய சிக்கல்கள் இல்லாமல் முடிந்துவிட்டாலும், இது திமுக தலைவர் மு. கருணாநிதி உடல் நலம் குறித்த வதந்திகளை கிளப்பிவிட்டுள்ளது. இந்நிலையில் திமுக மகளிர் அணி செயலாளரும் திமுக மாநிலங்களவை குழுத் தலைவருமான கனிமொழியைச் சந்தித்தோம்.

அப்பாவின் உடல்நிலை எப்படி இருக்கிறது?

முன்பைவிடப் பரவாயில்லை. தற்போது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

மு. க. ஸ்டாலின் திமுகவின் செயல் தலைவரானது குறித்து...?

தலைவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ள நிலையில், அவரது வயதையும் உடல் நலத்தையும் கருத்தில் கொண்டு அவருக்கு ஓய்வுதேவை என்று மருத்துவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதனையடுத்துத்தான் கட்சி மூத்த தலைவர்கள், நிர்வாகிகள் முடிவு செய்து தளபதி செயல் தலைவராகி இருக்கிறார். தளபதி உழைப்பை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. பல ஆண்டுகளாக திமுக.,வை நடத்துவதில் தளபதியின் பங்கு இன்றியமையாதது. அவருக்கு செயல் தலைவர் பதவி கொடுக்கப்பட்டதில் பெரிய வியப்பொன்றுமில்லை. அதற்கான அத்தனை தகுதிகளும் பெற்றவர் அவர்.

விவசாயிகளின் தொடர் மரணங்களுக்காகப் பிறந்தநாள் கொண்டாட்டத்தையே வேண்டாம் என்று புறக்கணித்துள்ளீர்கள். இந்தளவு பிரச்னை முற்றியதற்கு என்ன காரணம்?

தமிழகத்தில் அரசாங்கம் என்று ஒன்று இருக்கிறதா என்பதே தெரியவில்லை. அதுதான் முக்கியக் காரணம். எல்லாப் பிரச்னைகளிலும் நடந்துகொள்வது போல இப்பிரச்சனையிலும் தமிழக அரசு செயல்பாடற்ற அரசாகத்தான் இருந்து வருகிறது. விவசாயிகளின் தற்கொலை பற்றியும் அவர்கள் படும் துயரங்களையும் நான் பலமுறை நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறேன். திமுக.,வும் பல போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறது. இதுபற்றித் தொடர்ந்து மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். ஆனால், விவசாயிகளின் தற்



கொலைகளை தனிப்பட்ட காரணங்களுக்காக நடக்கும் தற்கொலை என்பதாகத்தான் மறுபடியும் மறுபடியும் தமிழக அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது. மேலும், அதைத் தடுப்பதற்கோ உதவிக்கரம் நீட்டுவதற்கோ எந்த வழிவகைகளையும் தேடவில்லை. விவசாயிகள் பிரச்சினை குறித்தும், அவர்கள் தற்கொலை பற்றியும் மத்திய அரசிடம் பேசுவதற்குத் தமிழக அரசு தயாராகவும் இல்லை. நூற்றுக்கணக்கான விவசாயிகள் மரணமடைந்திருக்கும் நிலையில் 7 விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் அறிவித்திருப்பதும், வழங்கப்பட்ட நிவாரணங்கள் சரியாக வழங்கப்படாததும் வருத்தத்தை அதிகப்படுத்துவது.

ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து அதிமுகவில் ஏகப்பட்ட மாற்றங்கள். இன்னொரு பக்கம் அதிமுகவையும் தமிழக அரசையும் மத்தியில் ஆட்சிபுரியும் பாஜக ஆட்டுவிக்கிறது என்று விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. இந்தச் சூழலை பிரதான எதிர்கட்சியான திமுக சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வில்லை என்ற விமர்சனங்களை சமூக வலைதளங்களில் திமுகவினரே வைக்கிறார்களே?

அதிமுக.,வில் சில குழப்பங்கள் இருக்கிறதுதான். அதனை பயன்படுத்திக்கொள்ளவோ, அந்தக் குழப்பங்களை அதிகப்படுத்தவோ திமுக எந்த முயற்சியும் எடுக்காது. அதில் தலைவரும் தளபதியும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறார்கள். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நாங்கள் தயாராக இல்லை. பாஜகவுக்கு தமிழகத்தில் ஒரு எம்.எல்.ஏ.,கூட இல்லை. ஆட்சிப் பொறுப்பு

தொடர்ச்சி 24ஆம் பக்கம்...)




334 Wilson Rd S, Oshawa
SOLD
OVER ASKING
BY $42,000 IN 1 DAY!
Lourdson
Antonipillai
Sales Representative
Jena
Gulasingham
Sales Representative
CALL TODAY: (416) 419 - 0929
HOMELIFE/FUTUREREALTY INC., BROKERAGE*
7 Eastvale Drive #205, Makham, ON, L3S 4N8
Phone: 905-201-9977| Fax: 905-201-9229


BRAND NEW HOMES FOR SALE
Brantford $579,600
Bedrooms:4 | Washrooms:4
Brant $609,900
Bedrooms:4 | Washrooms:4
Beaverton $499,900
Bedrooms:4 | Washrooms:4
Wasaga Beach $317,990
Bedrooms:3 | Washrooms:3
Wasaga Beach $425,000
Bedrooms:3 | Washrooms:2
Georgina $459,900
Bedrooms:3 | Washrooms:3
Midland $414,990
Bedrooms:2 | Washrooms:1
Peterborough $469,900
Bedrooms:2 | Washrooms:2
மேலும் பல வீடுகள், அடுக்குமாடி வீடுகள் விற்பனைக்கு உண்டு.
A. ANTON JEEVA FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently Owned And Operated
8 Shadlock Street, Markham, ON L3S 3K9
Bus: 905-471-0002 Fax: 905-471-7441


Tridel Via Bloor Condos
(575-585 Bloor Street East)
TRIDEL
Another new project by Tridel in Toronto
-Price starts from Mid S300k's
-Closing in Year2021
-Upon signing 5% (total 20%)
COMING SOON...
For more info Please Call: 416-321-6969
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. #203 Toronto ON M1S 0C2
*Independently Owned & Operated


DONWAY FORD
58 YEARS IN BUSINESS. FAMILY OWNED AND OPERATED
DONWAY DEALS
WWW.DONWAYFORD.COM
DONWAY FORD
$26,238
2017 FORD FUSION SE
$26,939
2017 FORD ESCAPE SE
$44,902
2017 FORD F-150 4x4 CREW 157
$28,839
2017 FORD ESCAPE SE 4WD
$25,888
2017 FORD ESCAPE SE
$21,448
2017 FORD FOCUS
$40,689
2017 FORD EDGE SEL
$63,650
2017 FORD EXPEDITION LIMITED
$28,594
2017 FORD TRANSITCONNECT
$26,888
2015 HONDA CRV EX-L AWD
29 000KM'S -1 OWNER
$38,900
2016 LINCOLN MKZ
4000KM'S, 1 OWNER
$18,500
2016 FORD ESCAPRE
76 000KM'S, 1 OWNER
(416) 751-2200
WE FINANCE EVERYONE
GET THE MOST FOR YOUR TRADE
1975 EGLINTON AVENUE EAST
SCARBOROUGH, ON. M1L 2N1

# அதிமுகவில்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்கள் கையில் போவதற்கான சாத்தியங்களே இல்லை. ஆனால், பாஜக தலைவர் ஒருவர், 'எங்கள் கையில் தமிழகத்தின் பொறுப்பைக் கொடுத்துப் பாருங்கள்' என்கிறார். எதன் அடிப்படையில் இப்படிப் பேசுகிறார் என்று தெரியவில்லை. தமிழக மக்கள் அந்தக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை அவர்கள் வாக்களித்தது வேறு ஒரு கட்சிக்கு. அப்படியிருக்கும்போது இவர்கள் எப்படி தமிழக ஆட்சி அதிகாரத்தை கையில் எடுத்துக்கொள்ள முடியும்?

ஆனால், ஒரு முதல்வர் மரணத்தில் மர்மம் இருப்பதாகத் தொடர்ந்து தகவல்கள் வந்துகொண்டிருக்கும் நிலையிலும், எதிர் கட்சி அமைதியாக இருப்பது சரியா?

யாரும் எதிர்பார்க்காத, எல்லோருக்கும் அதிர்ச்சி தரக்கூடிய ஒன்றாகத்தான் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் இருந்தது. அதுவும் பல ஆண்டுகளாக தமிழக அரசியலில் மிக முக்கிய பங்காற்றிய தலைவர் அவர். இன்று அவர் இல்லை என்பது ஒரு பெரிய வெற்றிடத்தை உருவாக்கியிருக்கிறது. ஜெயலலிதா இந்தியஅரசியலில் மிக முக்கியமான ஒரு பெண் தலைவர். அவரது எந்த சவால்களையும் எதிர்கொள்ளும் தைரியம் எல்லோரையும்போலவே எனக்கும் பிடிக்கும். அவரது மரணம் குறித்து பலரும் சந்தேக கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு தமிழக அரசும் சம்பந்தப்பட்ட மருத்துவமனையும்தான் பதில் சொல்லமுடியும்.

இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, தமிழக தலைமைச் செயலகத்திலேயே வருமான வரி சோதனை நடத்தப்பட்டதே?
நிச்சயமாக அது மிகவும் அவமானப்பட வேண்டிய ஒன்று. இதைப்பற்றி எந்த விளக்கமும் இதுவரை அரசாங்கத்திடம் இருந்து இல்லை. அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதுகூடத் தெரியவில்லை. இது



இன்னும் மோசம். தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்தப்பட்டது பற்றி தமிழக அரசும் மத்திய அரசும் ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும், கொடுக்கவில்லை. இதில் மட்டுமல்ல இது போல், கண்டெய்னர் லாரிகளில் கட்டுக் கட்டாக பணம் பிடிபட்டது உட்பட பல பிரச்சனைகளில் அரசிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

சசிகலா, அதிமுக பொதுச்செயலாளர் ஆனது குறித்து?
அது அதிமுகவின் உட்கட்சிப் பிரச்னை. அக்கட்சியின் நிர்வாகிகள் யாரை பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். அதுபற்றி நான் கருத்துக் கூறுவது எந்த விதத்திலும் சரியாக இருக்காது. அதேநேரம் முதல்வராக இருக்கும் ஓபிஎஸ் அவர்களையோ அமைச்சர்களையோ ஒரு எதிர்கட்சியாக விமர்சனம் செய்வோம். அந்தப் பொறுப்பிற்கு யார் வந்தாலும் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். யார் முதல்வரானாலும் ஒரு காலக்கட்டத்தில் மக்கள் ஓட்டுக்களைப் பெற்று எம்.எல்.ஏ. ஆகித்தான் ஆகவேண்டும். இல்லையென்றால் முதலமைச்சராக நீடிக்க முடியாது. தமிழகத்தின் எதிர்காலம் இனிமேல் நிச்சயமாக திமுகவின் வழிநடத்துதலில் மிகச்சிறப்பாக இருக்கும்.

சரி, ஒரு பெண்ணாக, சசிகலா என்னும் ஒரு பெண் அதிமுகவின் பொதுச்செயலாளராக ஆனது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
பெண்ணோ ஆணோ ஒருவர் தலைவராக வந்தபிறகு, அவரை ஆண் - பெண் என்று பிரித்துப் பார்க்க முடியாது. செயல்பாடுகளை வைத்துத்தான் மதிப்பிட முடியும். சசிகலாவின் செயல்பாடுகள் என்ன என்பது இனிமேல்தான் தெரியும். ஆனால், திமுக கட்சி தகுதி உடையவர்களைத்தான் தலைமைப் பொறுப்பில் வைத்து அழகு பார்க்கும். 'நமக்கு என்ன தகுதி இருக்கிறதோ அதை தேர்ந்தெடுக்கக்கூடிய கருவி என்பதே ஜனநாயகம்' என்று பெர்னாட்ஷா கூறியுள்ளார். அதனடிப்படையில் நாங்கள் செயல்படுகிறோம். ஆனால், மற்றக் கட்சிகளும் அப்படித்தான் இயங்க வேண்டும் என்று நான் வற்புறுத்த முடியாது.

அதிமுக பொதுச் செயலாளராக சசிகலா பொறுப்பேற்றுவிட்டாலும், கட்சித் தொண்டர்களில் ஒரு பகுதியினரிடையே அவருக்கு எதிர்ப்பும் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபாவுக்கு ஆதரவும் பெருகி வருகிறதே. இது திமுகவுக்கு சாதகமானதுதானே?
அதிமுக கட்சிக்குள் நிகழும் மாற்றங்கள் குறித்து திமுக.,வுக்கு எந்த அக்கறையும் இல்லை. திமுக முழுக்க தன்னுடைய தொண்டர்களின் பலத்தில் இயங்கக்கூடிய கட்சி. யாருடைய வளர்ச்சியும் வீழ்ச்சியும் எங்களைப் பாதிக்காது.

அரசியலை விடுங்கள், ஜெயலலிதாவின் பெயரிலுள்ள சொத்துக்கள் யாருக்குப்போய் சேரவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

ஒரு தனி நபருடைய சொத்துக்கள் யாருக்கு சேரவேண்டும் என்பதை நீதிமன்றமும் அந்தக் குடும்பமும்தான் முடிவு செய்யமுடியும். இதில் கருத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் வழக்கறிஞர் கிடையாது.

ஜல்லிக்கட்டு தடைக்கு எதிராகத் தமிழகத்தில் மாணவர்கள் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தி முடித்திருக்கிறார்கள். காட்சிப் படுத்தத் தடை விதிக்கப்பட்ட வன விலங்குகளின் பட்டியலில் காளை சேர்க்கப்பட்டதுதான் ஜல்லிக்கட்டு தடைக்கு காரணம் என்றும், இது திமுக மத்திய அரசில் இருந்தபோதுதான் நிகழ்ந்தது என்றும், இவ்வாறு இருக்க, ஜல்லிக்கட்டு விவகாரத்தில் திமுகவும் மு. க. ஸ்டாலினும் உண்மைக்குப்புறம்பாகப் பேசுகிறார்கள் என்று

தொடர்ச்சி 40ஆம் பக்கம்...)



# தமிழக...

### 15ஆம் பக்கத்தொடர்ச்சி

காலையில் தமிழகம் முழுக்க மீண்டும் போராட்டம் பெரும் நெருப்பாக மாறியது. அன்று ஃபேஸ் புக்கிலும் ட்விட்டரிலும் அலங்காநல்லூர் தான் இந்திய அளவில் ட்ரெண்டிங்கில் இடம்பெற்றது. 'alanganal-lur' என்ற ஹேஷ்டேக் மூலம் மீண்டும் ஒன்றிணைந்தனர் ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள். தமிழகம்முழுக்க அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளும் கல்லூரியை புறக் கணித்து போராட்டக்களத்தில் குதித்து உள்ளனர்.



கோயம்புத்தூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போராட்டத்தில் கலந்துகொண்ட கல்லூரி மாணவி அகிலா, "ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதி கேட்டு அலங்காநல்லூரில் போராடியவர்களை காவல்துறையினர் கைது செய்ததுதான் தாமதம், தமிழ்நாடு முழுவதுமுள்ள இளைஞர்களும் மாணவர்களும் கொதித்துப் போய் போராட ஆரம்பித்துவிட்டோம். அதற்கு முக்கியமான காரணம், எங்களுக்கு அப்போது ஜல்லிக் கட்டு பற்றி அவ்வளவாக தெரிந்திருக்கா விட்டாலும் தமிழர்கள் தொடர்ந்து சந்திக் கும் எல்லா பிரச்னைகளும் ஏற்கெனவே எங்கள் மனதில் ஆழப் பதிந்திருந்தது. அதுதான் எங்களை இனியும் பொறுத்திருக் காதே என உள்ளிருந்து கிளப்பிவிட்டது. ஜல்லிக்கட்டு என்பது விளையாட்டல்ல. நமது கலாசாரம். அதற்காக, என் இனத் திற்காகப் போராடியவர்களை மீட்க வேண்டும் என்கிற இன உணர்ச்சியைத் தூண்டியது. ஆரம்பத்தில் ஜல்லிக்கட்டு என்ற ஒற்றைக் கோரிக்கையோடுதான் களமிறங்கினோம். ஆனால், போகப்போக காவிரி, மீத்தேன், விவசாயிகள் தற் கொலை, பன்னாட்டு வணிக அரசியல் என ஆழ் மனதில் தேக்கி வைத்திருந்த உணர்வுகள் எல்லாம் ஒவ்வொன்றாகக் கிளம்பி தமிழர் பிரச்சினைகள் அனைத்தை யும் வெளிப்படுத்தும் களமாக மாறிவிட்டது" என்றார்.

மக்கள் பங்கேற்பு சாத்தியமானது எப்படி? சென்னை மெரினாவில் போராடிய முனைவர் பட்ட ஆய்வாளர் செல்லகுமார் "தன்னெழுச் சியாகக் கூடிய இளைஞர்களின் இந்தப் போராட்டம் இளைஞர்கள் மத்தியில் மட்டு மல்ல பெற்றோர்கள், அரசி யல்வாதிகள், பொதுமக்கள் என எல்லோரிடமும் மன எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. நான் உட்பட போராட்டத்தில் கலந்து கொண்ட யாருக்குமே, இந்தப் போராட்டத்திற்கான தூண்டுதல் எங்கே இருந்து வந்தது என்பது உண்மையில் தெரியவில்லை. "என் கூட இருக்குறவனுக்கு ஒரு பிரச்னை. நான் எப்படி பாத்துக்கிட்டு சும்மா இருப்பேன்" என்று ஒவ்வொருவரும் நினைத்து களத்தில் இறங்கியிருக்கலாம். நட்சத்திரமாக இருந் தாலும் சரி, பொது மக்களாக இருந்தாலும் சரி, நம் பிள்ளைகள் இவ்வளவு கஷ்டப் பட்டுப் போராடுகிறார்கள். நாம் இங்கு டி.வி. முன்பு உட்கார்ந்து கொண்டிருக்க லாமா? என்ற குற்ற உணர்ச்சியில் ஒரு முறையாவது போராட்டம் நடைபெறும் இடத்திற்குப் போய்விட வேண்டும் என்று துடித்து ஓடி வந்தார்கள்" என்கிறார்.

திருநெல்வேலியில் ஹோட்டல் நடத்திவரும் ராம்குமார், "எங்கள் ஊரில் நடந்த போராட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். நான் நாட்டு மாடுகளை வளர்ப்பவன். இளைஞர்கள் நமக்காக போராடுகிறார்கள் கலந்துகொள்ளாமல் இருக்க முடியுமா? முதலில், போராட்டம்தானே காலையில் ஆரம்பித்து சாயந்திரம் முடிந்துவிடும் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால், அங்கு போனபிறகு எனக்கு மிகப்பெரிய ஆச்சரியம். முதல்நாள் முடிந்து, இரவு கடந்து, அடுத்தநாளும் தொடர்ந்து கொண் டிருந்தது போராட்டம். அப்புறம் எல்லா நாளும் போராட்டத்துக்கு போனேன்" என்று நம்மிடம் தெரிவித்தார்.

பலரையும் ஆச்சரியத்தில் இன்னொரு விஷயம் சாஃப்ட்வேர் இளைஞர்களின் போராட்டம். நம்முடன் பேசிய நெல்லை மாவட்டம் சுரண்டையைச் சேர்ந்த ஐடி நிறுவன ஊழியர் வேல்குமார், "நான் இது வரை எந்தவொரு போராட்டத்திலும் கலந்து கொண்டதில்லை. முதல்முறையாக ஜல்லி கட்டுக்கு ஆதரவாக இப்போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளேன். நம் உரிமையை, பண்பாட்டு அடையாளத்தை யாரோ சிலர் பறித்துக்கொள்வதாக மனம் நினைக்கிறது. அதற்கு வடிகாலாக, எதிர்ப்புத் தெரிவிக்க இப்போராட்டம் ஒரு வாய்ப்பாக அமைந் தது. யாரும் எனக்கு போன் பண்ணி கூப்பிடவில்லை. வாட்ஸ்- அப், பேஸ்புக்கில் போராட்டம் நடைபெறும் இடம், நேரம் வந்தது. யார் நடத்துகிறார் என்றெல்லாம் தெரியவில்லை. சொன்ன இடத்திற்கு சொன்ன நேரத்தில் வந்து தென்காசியில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு என்னை போன்றே

தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)

# இனி இல்லை...

### 17ஆம் பக்கத்தொடர்ச்சி

3. பஸ்ஸிமொத்தாசனம் 4. தனுராசனம்
5. பத்மாசனம் அல்லது வஜ்ராசனம்
6. கோமுக ஆசனம்
7. நாடிசுத்தி (மூச்சுப்பயிற்சி)
8. கபாலபதி கிரிகை

இவற்றில் ஒரு சிலவற்றையாவது முறை யாகப்பழகி தினமும் 15 நிமிடங்களாவது செய்துவந்தால் மன அழுத்தமானது வருவதற்கு வாய்ப்பே இல்லை. இதனு டன் தினமும் சற்று நேரம் நடைப்பயிற்சி செய்வதன் மூலம் உடல் எடையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.


TBC Toronto Business College

கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

படிக்க கொஞ்சம் நேரம் ஒதுக்குங்க கைநிறைய சம்பாதிங்க



JOB READY PROGRAMS

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty Earn good salary Co-op Available

BUSINESS ADMINISTRATION
26 Weeks

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks

PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
Immediate Job Opportunities

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக்கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more

PART TIME COURSES
Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Accpac 2012
Workshops
Food Safety Training
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

416-291-5155 / 416 500 5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# வாழ்க்கைப் பயணங்கள் - 34

தொடர்கதை...

அன்று ஞாயிற்றுக்கிழமை என்றாலும் அமலா நேரத்துக்கு நித்திரையில் இருந்து எழும்பி விட்டாள். முதல் வேலை யாகத் தனது அப்பா, அம்மாவுக்குத் தொலைபேசி எடுத்துக் கதைத்தாள்.

"அப்பா எப்போது வரப் போகின்றீர்கள்" என்று கேட்டாள் அமலா.

"ஒரு மாதத்துக்குள் வரப் பார்க்கிறம் பிள்ளை" என்றார் அமலாவின் அப்பா நடா.

"நான் காசு அனுப்பி விடுறன். இப்பவே ரிக்கற் இனைப் போடுங்கள். உங்குள்ள வீட்டை வாடகைக்கு விடுதல் முதல் எல்லா வேலைகளையும் வடிவாய்ப் பார்த்து ஒழுங்கு செய்துவிட்டு வாருங்கள். இங்கு வந்த பின்பு யோசித்துக் கொண்டு இருப்பீங்கள். டாக்டரிடம் இருவரும் காட்டித் தேவையான ரெஸ்ற் எல்லாம் செய்து மருந்துகளையும் மூன்று மாதத்துக்கு வாங்கிக்கொண்டு வாங்கள். மிச்சத்தை இங்கு பார்க்கலாம். நான் இன்சூரன்ஸ் எல்லாம் போட்டிருப்பதால் பிரச்சினை இல்லை." என்றாள் அமலா.

"சரி பிள்ளை. நீ யோசிக்காதே. நாங்கள் பார்த்துச் செய்யிறம். நீ அம்மா உடன் கதைத்துவிட்டு வை" என்று நடா சொல்லிக்கொண்டு அமலாவின் அம்மா ராணியிடம் தொலைபேசியைக் கொடுத்தார்.

அமலாவும் தாயாருடன் கதைத்து விட்டுத் தொலைபேசியைத் துண்டித்தாள்.

அப்பா, அம்மாவுக்கு விசா கிடைத்தது பற்றி சுகந்திக்கும் தொலைபேசியில் சொல்லிவிட்டு வீட்டு வேலைகளை விரவாகச் செய்து முடித்தாள். அரவிந்த் 11:30க்கு வெளியில் போவதற்கு ரெடியாக இருக்கும்படி சொன்னதை நினைத்துக் கொண்டு தயாரானாள்.

அரவிந்த் இற்குப் பிடித்த உடைகளைத் தேடியெடுத்து அணிந்து கொண்டாள். அரவிந்த் பரிசளித்த காதணிகளை போட்டுக் கொண்டாள். வெளிக்கிட்டதும் கண்ணாடி முன் நின்று தன்னழகைத் தானே பார்த்து "ஹாய் அரவிந்த் உனக்காகவே நல்ல வடிவாய் வெளிக்கிட்டிருக்கிறேன்." என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"அப்பா, அம்மாவுக்கு விசா கிடைத்த மகிழ்ச்சியும் சேர்த்து அரவிந்த் உடன் கொண்டாட வேண்டும். இன்று நான்தான் செலவு செய்ய வேண்டும்" என்று நினைத்துக் கொண்டாள்.

அரவிந்த் இனது தொலைபேசியை எதிர் பார்த்தவாறு அமலா தயாராக இருந்தாள்.

ஒரு சில நிமிடங்களில் தொலைபேசி அழைப்பு வரவே தொலைபேசியை எடுத்து அமலா பேசினாள்.

"அமலா உங்கள் வீட்டுக்கு முன்னால் கீழே காருக்குள் இருக்கிறேன். வாருங்கள்" என்றான் அரவிந்த்.

"நான் ரெடியாகத்தான் இருக்கிறேன். உடனே வாறேன்" என்று சொல்லி விட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு கீழே போனாள் அமலா.

அமலா வருவதைக் கண்டதும் அரவிந்த் காரைவிட்டு இறங்கி வந்து அமலாவின் கையைப் பற்றிக் கொண்டு அழைத்துச் சென்று காரின் கதவைத் திறந்து விட்டான்.

அதன்பின்பு தான் வந்து காரில் ஏறியதும் "அமலா யு லுக் வெரி பியூட்டிபுள்" என்றான் அரவிந்த்.

"அப்படியா தாங்யூ அரவிந்த். எல்லாம் உங்களுக்காகவே" என்றாள் அமலா.

"அது சரி எப்படி நாங்கள் இருவரும் ஒரே நிறத்தில் உடுப்பு போட்டிருக்கிறோம். உங்களுக்கு நீலம் நல்லாய்ப் பிடிக்கும் என்று இந்த உடையைப் போட்டேன். ஆனால் நீங்களும் அதே நிறத்தில் வந்திருக்கிறீர்கள்" என்றாள் அமலா.

"உண்மைதான் எங்கள் லவ் பவராய்த் தான் இருக்கு" என்றான் அரவிந்த்.

"ஐ லவ் யு வெரிமச் அரவிந்த்" என்றாள் அமலா.

"மீ ரூ அமலா" என்றான் அரவிந்த்.

அரவிந்த் காரை ஓட்டியபடி அமலாவைப் பார்க்க அமலா சிரித்து விட்டு "அரவிந்த் றோட்டைப் பார்த்துக் காரை ஓட்டுங்கள். காரை விட்டு இறங்கியதும் என்னை வடிவாய்ப் பாருங்கள்" என்றாள் அமலா.

அரவிந்த் "ஓகே அமலா" என்றான் சிரித்தபடியே.

"அரவிந்த் இன்று நான்தான் செலவு எல்லாம். முதலில் போய்ச் சாப்பிடுவோம்" என்றாள் அமலா.

"அப்படியா என்ன ஸ்பெசல்" என்றான் அரவிந்த்.

"அப்பா அம்மாவுக்கு விசா கிடைத்து விட்டது. அதுக்குத்தான்" என்றாள் அமலா.

"நல்ல விடயம்தான். ஓகே உங்கள் விருப்பம்." என்றான் அரவிந்த்.

"முதல் கொஞ்சம் சொப்பிங் செய்துவிட்டு சாப்பிடப் போவோம். அரவிந்த் முதல் நாங்கள் வழமையாய்ப் போற மோலுக்குப் போவோம்" என்றாள் அமலா.

"ஓகே ஆனால் சாப்பாட்டுக்குப் பிறகு நான் தான் செலவு செய்வேன். இன்றும் சினிமாவுக்குப் போவோம்." என்றான் அரவிந்த்.

"உங்கள் விருப்பம் அரவிந்த்" என்றாள் அமலா.

காரை மோலின் கீழ்த்தளத்தில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தினான் அரவிந்த். காரில் இருந்தபடி கொஞ்சம் பேசி விட்டுப் போவோம் என்றாள் அமலா.

அரவிந்த் இனது கைகளை இறுகப் பற்றினாள் அமலா. அரவிந்த் அமலாவை அணைத்து கன்னத்தில் முத்தம் கொடுத்தான். அமலாவும் அரவிந்த் இனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தாள். இருவரும் ஒருவரையொருவர் அணைத்தபடி மாறி மாறி முத்தங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

"மை ஹனி ஐ லவ் யு" என்றாள் அமலா. "ஐ லவ் யு ரூ" என்றான் அரவிந்த்.

"ஓகே நாங்கள் போய்ச் சொப்பிங் செய்வோம்." என்றாள் அமலா

கடைசியாக ஜல்லிக்கட்டு நடந்தபோது தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடைபெறும் 10 மாவட்டங்களில் ஒன்றரை லட்சம் காளை கள் பங்கேற்றன. தடை விதித்ததால் சுமார் 70 ஆயிரம் ஜல்லிக்கட்டு காளைகள் விற்கப்பட்டுள்ளன. இதனால், இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டாலும் 50 ஆயிரம் காளைகள் மட்டுமே பங்கேற்கும் நிலை. தொடர்ந்து தடை நீடிக்கப்பட்டால் இந்த காளைகளும் விற்கப்பட்டுவிடும். விற்கப் படும் காளைகள் இறைச்சியாக மாறி அழிந்துபோகும். ஜல்லிக்கட்டு காளைகள் போட்டிக்கு மட்டுமல்லாமல் அந்தந்த கிராமங்களில் உள்ள மாடுகளின் இனப் பெருக்கத்துக்கும் முக்கிய காரணமாக இருக்கின்றன. இதனால்தான் நமது பால் வியாபாரத்தில் இறங்க நினைக்கும் பன் னாட்டு நிறுவனங்கள் ஜல்லிக்கட்டு காளை-களை குறிவைக்கின்றன. அவை அழிக்கப் பட்டால் இனப்பெருக்கம் நடைபெறாமல் தமிழகத்தில் நாட்டு மாடுகள் இனமே அழியும்.

பீட்டாவுடன் சேர்ந்து ஜல்லிக்கட்டை எதிர் த்து உச்ச நீதிமன்றத்துக்கு சென்ற விலங்கு நல அமைப்புகள் எண்ணிக்கை மொத்தம் 7. இவர்கள் எல்லோருக்கும் பண உதவி செய்வது சில வெளிநாட்டு கம்பெனி கள். அதுவும் ஃபெர்சியன் இண்டெர் நேஷ்னல் (ஃபெர்சியன் மாடு), ஜெர்ஸி கார்ப்பரேஷன் (ஜெர்ஸி மாடு) என்ற இரண்டு தனியார் மாடு நிறுவனங்கள்தான்.

இந்தியாவின் மொத்த பால் சந்தையை அவன் அபகரித்து, அவன் ஜெர்சி பசுவை நம் தலையில் கட்டி, அவன் பால் பொருட் களுக்கு, அவனது ஜெர்சி பசுவிற்கு, அதற்கான விந்து ஊசிகளுக்கு, அதற்கான மருந்துகளுக்கு, அதற்கான ராசயன தீவன த்திற்கு... என்று எல்லாவற்றுக்கும் நாம் அவனை கையேந்தி நிற்க வைப்பது தான் ஒட்டுமொத்த திட்டம். அதுபோன்ற விபரீதங் கள் நிகழாமல் இருக்க வேண்டும் என்றால் ஜல்லிக்கட்டு, ரேக்ளா போன்ற விளையாட் டுக்கள் நடத்தப்பட வேண்டும். அப்போது தான் காளை மாடுகள் வளர்க்கும் ஆர்வம் மக்கள் மத்தியில் இருக்கும்'' என்கிறார். இந்த அந்நிய நாட்டு சதிக்கு எதிரான எழுச்சிதான் பெப்ஸி, கோக் வரை நீண்டது. தற்போது போராட்டம் முடிந்து விட்டாலும், வாட்ஸ் அப், ஃபேஸ்புக் என சமூக வலைதளங்களில் பெப்ஸி, கோக்குக்கு எதிரான பிரச்சாரம் தொடரவே செய்கி றது. இதுபற்றி, “நடந்து முடிந்த போராட்டம், ஜல்லிக்கட்டை மீட்டு தந்திருப்பதுடன், எங்களுக்கு நல்லதொரு அரசியல் பயிற்சிப் பட்டறையாகவும் இருந்தது. போராட்டத் துக்கு முன்னால் இருந்த இளைஞர்கள் இல்லை இப்போதிருக்கும் நாங்கள். வெற்றி கிடைத்துவிட்டது என்று எல்லோரும் கொண்டாடுகிறார்கள். ஆனால், நாங்கள் இன்னும் வெற்றி பெறவில்லை என்றே கரு-துகிறோம். தமிழன் மேல் செலுத்தப்படுகிற எல்லா அடக்கு முறைகளையும் எதிர்த்து முழுமையான தீர்வுக்காக மீண்டும் குரல் கொடுப்போம்'' என்றார் ஆக்ரோஷமாக.

கடைசியில் வன்முறை வெடித்தது எப்படி? நம்முடன் பேசிய ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி ஒருவர், “மாணவர்கள் போராட்டத் தின் மையம் ஜல்லிக்கட்டுக்கான அனுமதி என்றாலும், அதன் பின்னணியில் தமிழ் நாட்டு மாடுகள் இனத்தை மெல்ல மெல்ல நசுக்க முயற்சிக்கும் பீட்டாவுக்கு எதிர்ப்பு, தமிழர் உரிமை, தமிழ் பாரம்பரியம், வி-வசாயிகள் நலன் என்று பல்வேறு தமிழக பிரச்னைகளும் அடங்கியிருந்தது உண்மை தான். இது தமிழக அரசுக்கும் தெரியாமல் இல்லை. ஆனாலும், காவல்துறை எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. போராட்டக்காரர் களுடன் நட்பு பாராட்டியது. ‘தமிழக அரசு கண்டுகொள்ளவில்லை. எங்கள் கோரிக்கை களுக்கு செவி சாய்க்கவில்லை. எந்த நடவடிக்கைகளும் இல்லை' என்று தமிழக அரசு மீது போராட்டக்காரர்கள் விமர்சனங் கள் வைத்தாலும், மாணவர்கள் போராட்டத் திற்கு எவ்வித இடையூறும் செய்யாமல் காவல்துறை வேடிக்கைப் பார்த்ததே, போராட்டத்திற்கு தமிழக அரசு மறைமுக ஆதரவு காட்டுகிறது என்பதால்தான் என்ற புரிதல் போராட்டக்காரர்கள் மத்தியிலும் இருந்தது. இந்த இரு தரப்பு புரிதலும், அவசரச் சட்டம் இயற்றப்படும்வரை சிக்கல் இல்லாமல் சென்று கொண்டிருந்தது. “அவசரச் சட்டம் தேவையில்லை. நிரந்தர சட்டம் வரும்வரை கலைய மாட்டோம்'' என்று மாணவர்கள் நின்ற புள்ளிதான் போராட்டத்தின் திசையை மாற்றியது.

அடுத்த மூன்று நாட்களில் குடியரசு தினம் வரவிருந்தது. குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சி எப்போதும் கடற்கரை சாலையில் தான் நடக்கும். அதற்கான ஒத்திகையும் கடற்கரை சாலையில்தான் நடக்கும். ஆனாலும், போராட்டத்தால் இந்த முறை அரசு குடியரசு தின அணிவகுப்பு ஒத்திகை-கயை வேறு இடத்தில் நடத்தியது. ஆனால், போராட்டம் குடியரசு தினம்வரை தொடர்ந்தால், குடியரசு தின நிகழ்வை வேறு இடத்திற்கு மாற்ற முடியாது. அதனால், போராட்டக்காரர்களை கலைக்க வேண்டிய அவசியம் இருந்தது. இதனி டையே, போராட்டத்துக்குள் சமூக விரோதி கள் ஊடுருவி இருக்கிறார்கள். இன்னும் சிலர் இந்திய ஒற்றுமைக்கு எதிராக கோஷம் போடுகிறார்கள். தேசிய கொடியை எரிப்பதற்கு சிலர் திட்டமிடுகிறார்கள் என்று உளவுத்துறை மூலம் தெரியவந்தது. இவை எல்லாம் நிகழ்ந்தால் தமிழக சட்டம் ஒழுங்கு குறித்து கேள்வி எழுப்பப்படும். எனவே, இதையெல்லாம் தவிர்க்க ஒரே வழி கூட்டத்தை கலைப்பதே என்ற முடிவு க்கு வந்தது காவல்துறை.

போராட்டக்காரர்களிடம் கலைந்து போகும் படி வற்புறுத்தியும், அவர்கள் வெளியேற மறுத்ததால், வலுக்கட்டாயமாக வெளி-யேற்ற முயற்சித்தது. அடுத்து தடியடி நடத்தத் தொடங்கியது. அதன்பின்னரான வன்முறைகளை நிகழ்த்தியது மாணவர்கள் அல்ல. அவர்கள் போர்வையில் நுழைந்த சில சமூக விரோதிகள்தான்'' என்றார், ஆனால், “போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும், போராட்டக் காரர்களுக்கு ஒரு பய உணர்வை ஏற்படு த்தவும் போலீசாரே வன்முறையை தூண்டி னர்'' என்பது மாணவர்கள் தரப்பு வாதம். இதை நிரூபிப்பது போல் காவல் துறை-யினரே பொதுச்சொத்துக்கு சேதம் விளை வித்த காட்சிகளும் வீடியோ ஆதாரங்களாக வெளிவந்து அதிர்ச்சி ஏற்படுத்தின. “அவசரச் சட்டம் வந்தபிறகும் போராட்டத்தை தொடர்ந்ததுதான் பிரச்சினைக்கு காரணம்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)

# திசை மாற்றிய திரைகள்

## தூறல்

**வானரன்**

இன்று பரவலாக அறியப்படாத படங்கள் பல திரையுலகின் போக்கை மாற்றக் கூடிய வல்லமையுடன் வெளியாகியுள்ளன. அவ்வா றான படங்களை அடையாளங் காணும் முயற்சியே இது.

## எம் கிறீம்

பயணங்கள் வாழ்க்கையின் போக்கையே சில சமயங்கள் மாற்றிவிடும். ஒவ்வொரு பயணமும் வித்தியாசமான அனுபவங்களை ஏற்படுத்தும். பல சமயங்களில் எங்களது பார்வைகளை புதிய திசையில் செலுத்தத் தொடங்கிவிடும். ஒவ்வொரு முறையும் பயணங்கள் எனது சிந்தனைப் போக்கை யும் மாற்றியுள்ளது. நான் அதிகம் விரும்பும் விடயங்கள் புத்தகங்கள், பயணங்கள்.

பயணங்கள் பற்றிய படங்களையும் விரும் பிப்பார்ப்பேன். அண்மையில் சுயாதீன திரைப்பட முயற்சியாக வெளிவந்த எம் கிறீம் என்ற ஹிந்திப் படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான்கு இளைஞர்கள். சம பங்காக இரு இளைஞிகள், இரு இளைஞன்கள். இவர்க ளில் இருவர் மேல் தட்டு வர்க்கப் பிரதிநி திகள். பிக், மஹி, ஜேய், நிஷ் ஆகியோரில் பிக்கின் பெற்றோர், பிக்கை ஹவார்ட்டுக்கு அனுப்ப முயற்சிக்கின்றார்கள். பெற்றோரை ஏமாற்றிவிட்டு பிக் மற்றவர்களுடன் ஹிமா-லாயப் பகுதியில் உள்ள தர்மசாலாவிற்குச் அனைவரும் செல்கின்றார்கள். எம் கிறீம் என்னும் மருந்தைத் தேடிச் செல்கின்றார் கள். இவர்களில் நிஷ் ஒரு புகைப்படக் கலைஞன், ஜேய் ஒரு கல்லூரி மாணவி. இவர்களது பயண அனுபவமே இப்படம். நாங்களும் அவர்களுடன் பயணிக்கின் றோம். போதை மருந்து, அரசியல், காதல், செக்ஸ், மது, இலக்கியம், சுதந்திரம் என அனைத்தும் இவர்கள் பயணத்தின் பேசு பொருளாகவும், அனுபவமாகவும் அமைகி ன்றது.



நால்வருக்கும் சமூகத்தின் மீது பயங்கரக் கோபம் உள்ளது. ஒவ்வொருவரது பார்வை யும் வித்தியாசமாகவுள்ளது. ஜேய் கல்லூரி மாணவி. அவர்களுக்கேயுரிய பரந்த பார்-வையும், புத்திஜீவினத்தனமான சிந்தனைப் போக்கும் காணப்படுகின்றது. பிக் தனது மத்திய மேல்தரவர்க்க கவசத்தை எறிந்து விட்டு சமூகத்தைப் பார்க்கத் தொடங்கு கின்றார். இப்பயணத்தில் இவர்களிடையே ஆரம்பத்தில் ஏற்படும் நெருக்கம் இவர்க ளது சிந்தனைப் போக்கினாலும், அனுபவத் தினாலும் மாறுபட்டு, முரணாகின்றது.

உலகமயமாதலின் விளைவால் உருவாகி யுள்ள புதிய உல்லாசச் சூழலும் மதம் பற்றிய புதிய புரிந்துணர்வுகளும் பலரை இந்தியாவிற்குள் அழைத்துச் செல்கின்றது. இமாலாயாப் பகுதியில் ஆன்மீகம் என்ற பெயரில் போதைப் பொருட்கள் நடமாட்ட மும் பாலியல் பரிமாற்றங்களும் அதிகரித் துள்ளன. இதனை பெருமளவு கொண்டாடு பவர்களும் வழிநடத்துபவர்களும் மேற்கத்தி யர்கள். இதனையும் இப்படத்தில் இயக்குனர் இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார். மாற்றம் வேண்டும் இளைஞர்கள் இந்த வலைக்குள் எளிதாக வீழ்ந்து விடுகின்றனர்.

அறிமுக இயக்குனர் அக்னியா சிங், வழமையான இந்தியப் படத்திலிருந்து மாறுபட்டு வித்தியாசமான ஒரு படைப்பாக இதனைப் பதிவு செய்துள்ளார். இந்திய சமூகத்தை அதன் பல்வேறு கலாச்சார, பண்பாட்டு பரிமாணங்களை இப்படம் கட்டுடைத்துள்ளது. இவ்வாறான படங்களின் வருகை ஒரு புதிய பாதைக்கு அடிபோடும்.

தொடர்ச்சி 40ஆம் பக்கம்...)




# ஜல்லிக்கட்டு...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

குக் காளைகளை விரட்டி திமில் பகுதியைப் பிடித்து காளையை அடக்குவது வாடி விரட்டு எனவும், திறந்த வெளியில் காளை களை ஓடவிட்டு அடக்குவது மஞ்சு விரட்டு எனவும், 50 அடி நீளமான கயிற்றை காளை யின் கழுத்தில் கட்டி குறிப்பிட்ட நேரத்தில் அடக்குவது வடம் விரட்டு எனவும் அழைத் தனர். அதாவது காளைகளை எப்படியெல் லாம் அடக்க வெற்றிகொள்ள முனைவதே இத்தகைய நிகழ்வுகளின் முனைப்பாகும்.

சாதாரணமாக எல்லா காளை மாடுகளையும் இந்த நிகழ்வில் பயன்படுத்த முடியாது. இந்த நிகழ்ச்சிக்காகவே இவை கவனித்து வளர்க்கப்படும். ஆரம்பத்தில் இவை கோவில் மாடுகள் என அழைக்கப்பட்டன. இவை கிராமத்தில் முதன்மையான காளை யாகும். முக்கிய தினங்களில் இதனை அடக்குவதற்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பலம் குறைந்த காளைகள் விவசாயம், வீட்டுத்தேவை என்பவற்றில் பயன்பட்டன. ஜல்லிக்கட்டு நிகழ்வுகளில் வெற்றிகரமாக செயல்படாதவை பொதுவான தேவைக்குப் பயன்பட்டன. மிகவும் தைரியம் வாய்ந்தவை இனப்பெருக்கத்திற்கு உதவின. தமிழ் நாட்டில் இவ்வாறான ஜல்லிக்கட்டு மாடு களை வளர்ப்பதனை ஒரு கலையாகவே கருதியுள்ளனர்.

ஜல்லிக்கட்டு விளையாட்டு தமிழர்களின் மரவுவழி என்பதால் மிகவும் உணர்வுபூர்வ மான தொன்றாகும். மதுரை மாவட்டம், அலங்கா நல்லூர் பகுதி, பாலமேடு அவனி யாபுரம், போரையூர் பகுதிகளிலும் புதுக் கோட்டை மாவட்டத்து நார்த்தாமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஆதமங்கலம் புதூர், மற்றும் தேனி, திருச்சி மாவட்டங் களிலும் அதிகமாக இடம்பெறும்.

50 வருடங்களுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த 'சல்லிக்காசு' என்னும் நாணயத்தை காளையின் கொம்புகளில் முடிச்சாகக் கட்டி விடும்போது அதனை அடக்கி வெல்பவர் அதனை எடுக்க முடியும். சல்லிக் கட்டு பேச்சுவழக்கில் ஜல்லிக்கட்டாகிப்போயுள் ளது. முன்பு குறிப்பிட்ட ஏறு தழுவுதலுக்கும் ஜல்லிக்கட்டுக்கும் சில வேறுபாடுகள் உள. முல்லை நிலத்து மக்களாகிய ஆயரிடம் ஏறுதழுவுதல் இருந்துள்ளது. தற்போது அப்படியல்ல. எல்லோருமே திறந்த வெளி யில் இதனை செய்கின்றனர். 'ஏறுதழுவுதல்' ஒரு தெய்வ நம்பிக்கையுடன் தொடர்புடைய தாக இருக்கவில்லை. ஆனால் ஜல்லிக்கட்டு வழிபாட்டு நம்பிக்கையுடன் காளைக்கு பொட்டிட்டு, சரிகை சால்வை பூட்டியே நடைபெறும். அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய் வராமலும், மழை வரட்சிக் காலத்தி லும், பிள்ளை வரம் வேண்டும் நாட்களிலும் இக் குறை நீக்கப்பட்டால் சல்லி கட்டுகிறோம் என்று வேண்டுகோள் விடுபவர்களும் உளர். அதாவது நேர்த்திக் கடன் வைப்பவர்களும் உளர்.

ஏறு என்ற சொல் மாறி, காளை என அழைக்கப்பட்டும் ஏறுதழுவுதல் ஜல்லிக் கட்டு என மாறுபட்டும் உள்ள நிலையில் நீண்டகாலமாக எழாத ஒரு புதுப்பிரச்சினை தமிழகத்தில் எழுந்துள்ளது. ஜல்லிக்கட்டி னால் காளைகள் துன்புறுத்தப்படுவதாகக் கருதுவோரும், தேவையற்ற உயிரிழப்பும் காயங்களும் ஏற்படுவதாகவும் கூறி குறிப்பிட்டு ஒரு சாரார் இதனை தடை செய்யக் கோரி இந்திய நீதி மன்றங்களில் வழக்குகளை தொடுத்து வருகின்றனர்.



இவர்கள் விலங்குகள் நல ஆர்வலர்களாக உள்ளனர். இது உலகளாவிய நிறுவனமான பீட்டா (PETA) People for the Ethical Treatment of Animals இன் கிளைகள் உள்ள இந்தியாவிலும் இது முக்கியம் பெற்றுள்ளது. 1980 மார்ச் மாதம் ஐக்கிய அமெரிக்காவில் வேர்ஜீனியாவில் 'Norfolk' என்ற இடத்தில் முதலாவதாக நிறுவப்பட்டதே இந்த பீட்டா அமைப்பு. 'எமக்கு உண்ணுவதற்காகவோ, அணிவதற்காகவோ, சோதனை செய்வதற் காகவோ, வேடிக்கை விநோதங்களுக்காக வோ, மற்றும் எந்தவிதமான துஷ்பிரயோகங் களுக்காகவோ மிருகங்கள் படைக்கப்பட வில்லை' என்பதே அவர்களது இலட்சிய மாகும். Ingrid Newkirk, Alex Pacheco ஆகி யோரே இதன் நிறுவனர்களாவர். இதற் குரிய ஆண்டு வருமானம் 31 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது 5 மில்லி யன் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொண்ட மிகப்பெரிய மிருக பாதுகாப்பு நிறுவனமாகும். பெருமளவு பிராணிகள் துன்புறுத்தல்கள், கொலை செய்யப்படல், சோதனைக்கு உட்படல் என்பவற்றை நிறுத்துவதே இவர்களின் இலக்காகும். உ லகின் பல பாகங்களுக்கும் சென்று இந் நிறுவனத்தின் பரிசோதகர்கள் ஆய்வு நடத் துகின்றனர்.

இந்தியாவின் 'விலங்கு நல வாரியம்' பல்வேறு வழக்குகளைத் தொடுத்து வருகின்றது. இந்த அடிப்படையில் 2008 ஜனவரி, பொங்கல் விழாவுக்கு சில நாட்களுக்கு முன்பு மேனகா காந்தி ஜல்லிக் கட்டுக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். அப்போது இந்திய உச்சநீதிமன்றம் ஜல்லிக் கட்டு நடத்துவதற்கு இடைக்கால தடை யுத்தரவிட்டது. இதற்காக தமிழ்நாடு 2009 இல் 'தமிழ்நாடு ஜல்லிக்கட்டு ஒழுங்கு சட்டமுறையை' இயற்றியது. இதில் பல விதிகள் உள்ளடக்கப்பட்டன. தமிழ்நாடு பல்வேறு தடைகளையும் எதிர்த்து இதனை மீண்டும் நடத்த அனுமதி பெற்றது. இதனைத் தொடர்ந்து மீண்டும் விலங்குநல ஆர்வலர்கள் வழக்குத் தொடுத்தனர். பல்வேறு கடுமையான விதிகளுடன் 2011 ஆம் ஆண்டு பொங்கலை ஒட்டி ஜல்லிக் கட்டை நடத்த உச்ச நீதிமன்றம் அனுமதித் தது. 2011 இல் நடத்தப்பட்ட நிகழ்வில் காயமடைந்தோர், இறந்தோர் தொகை குறைவாகவே இருந்தது. பொங்கல் நடந்த பின்னரும் தொடர்ந்து விசாரணை நடந்தது. அந்த வேளையில் மிகக் கூடுதலான விதிகளை பின்பற்ற நீதிமன்றம் தமிழக அரசுக்கு வேண்டியது. பீற்றா அமைப்பும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெயராம் ரமேஷ் 2011 யூலையில் சிங்கம், புலி, கரடி, குரங்கு போன்ற விலங்குகளை கூண்டு களில் அடைத்தோ, பொது இடங்களில் வைத்தோ வித்தைகளை காட்டமுடியாது என உத்தரவிட்டார். எனவே ஏற்கனவே உள்ள சட்டத்தில் 'காளை'யும் புதிதாகச் சேர்க்கப்பட்டது. இது மறைமுகமாகத் தடை விதித்தது போலாயிற்று. 2012 இல் 77 நிபந்தனைகளுக்கு உட்பட்டு சல்லிக்கட்டுக் கான ஒழுங்குகள் தமிழகத்தில் செய்யப் பட்டன. காளையின் மருத்துவ பரிசோதனை, காளைகளின் கொம்பு பரிசோதனை நடை பெற்றது. எனினும் 2014, மே 7ஆம் திகதி சல்லிக்கட்டு நடத்தக் கூடாது என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. விலங்குகள் துன்புறுத்தப்படுகின்றன, பலர் காயமுற்ற னர், கொலையுண்டனர் எனக் காரணங்கள் காட்டப்பட்டு வழக்கு தொடர்ந்தன. உச்ச நீதிமன்றத்திற்கு மதுரை மற்றும் பகுதிகளில் கறுப்புக் கொடி ஏந்தி மக்கள் போராடினர். இதனை தமிழக அரசும் மறு ஆய்வு செய்ய மனுத்தாக்கல் செய்தது. இந்த வேளையில் இந்திய நடுவண் அரசு பழைய 2011 ஆம் ஆண்டு அறிக்கையை மாற்றி அனுமதி வழங்கியது. ஆனால் பீற்றா அமைப்பு இத்தடை நீக்கப்படவில்லை என்று கூறி மீண்டும் உச்ச நீதிமன்றம் சென்றது. இதன் மூலம் மீண்டும் சல்லிக்கட்டு தடையை இந்திய உச்ச நீதிமன்றம் விதித்தது. இதுவே இன்று நீறுபூத்த நெருப்பாகத் தமிழகம் பொங்கியெழக் காரணமானது.

இவ்வகையான சல்லிக்கட்டினை ஆதரிப்ப வர்களும் எதிர்ப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். இதனை ஆதரிப்பவர்கள் இது தமிழர்களின் வீர விளையாட்டு எனவும், அதனை அழிய விடக்கூடாது எனவும் கூறுகின்றனர். சல்லிக்கட்டு காளையை உழவுக்கு பயன்படுத்துவதில்லை எனவும் சிறப்பாக வளர்க்கப்பட்டு கோவில் மாடாக வழிபட்டு சல்லிக்கட்டுக்காக மட்டும் பயன் படுத்த வளர்க்கப்படுகின்றன எனவும் கூறப் பட்டது. ஆனால் இதனை ஆதரிப்பவர்கள் ஜல்லிக்கட்டுக்கு வளர்க்கப்படும் காளை மாடு ஏனைய காலங்களில் பசுமாட்டை சினைப்படுத்து வதற்கு உபயோகிப்பதால் பால்வளம் மிக்க தரமான பசுக்கள் உருவாக வழிவகுக்கின் றன என்கின்றனர். கேரளத்தில் யானையை வைத்துப் பல போட்டிகள் நடத்தப்படு கின்றன. உலகெங் கிலும் நாய்கள், குதிரைகள் கூட கேளிக்கை செய்கின்றன. பல போட்டிகள் நடத்தப்படு கின்றன என்கின்றனர்.

எதிர்ப்பவர்கள் வைக்கின்ற கருத்து இது ஒரு விலங்குவதை என்பதாகும். உழவுக்குப் பயன்படுத்தாமல் சீராட்டி வளர்ப்பது ஒரு நாளில் நடத்தப்படும் விழாவுக்காகவா எனக் கேட்கின்றனர். இதனால் என்ன சந்தோஷம் ஏற்படப்போகின்றது. இதனால் எத்தனை யோபேர் காயமுற்றுள்ளனர், இறந்துள்ளனர் எனவும் கூறுகின்றனர். அத்துடன் தமிழகத் தின் ஒருசில பகுதிகளில் மட்டுமே இதனை நிகழ்த்துகிறார்களோ ஒழிய முழு தமிழர் களின் விளையாட்டு இதுவல்ல என்கின்ற னர். பல காளைகளும் இதனால் இறந்துள் ளன எனவும் கூறுகின்றனர். ஜல்லிக்கட்டில் இடம்பெறுவோரின் தலை, கழுத்து, தண்டு வடம், நெஞ்சு, பிறப்புறுப்பு பகுதி, கால்கள் என்பன பாதிக்கப்பட்டு வீணாக நோய் களுக்கு உட்படுகின்றனர் எனவும் கூறுகின் றனர். ஒவ்வொரு வருடமும் மதுரை, பால மேடு, அவனியாபுரம் பகுதிகளில் 100 பேருக்கு மேல் இவ்வாறு சிகிச்சைகளுக்கு உட்படுகின்றனர் எனவும் கூறுகின்றனர். இவ்வாறு இரண்டு பக்கக் கருத்துக்கள் இருந்தாலும் இதில் மும்முனைப் போராட்டம் உள்ளது. தமிழகம், மத்திய நடுவண் அரசு, உச்ச நீதிமன்றம் ஆகியன உட்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக சர்வதேச அங்கீ காரம் பெற்ற பீற்றா (PETA) எனும் விலங்கு பாதுகாப்பு அமைப்பும் உள்ளது. இந்த நிலை யிலேயே தமிழகத்தில் இப்போராட்டம் வெடித்துள்ளது. இலங்கை, சிங்கப்பூர், இங்கிலாந்து என உலகநாடுகளில் உள்ள தமிழர்களும் இதில் இணைந்துள்ளனர்.

தமிழகத்தின் நிலை மோசமாக உள்ளது. மாணவர்கள் தன்னெழுச்சியாகப் போராட்டம் நடத்துகின்றார்கள். கடையடைப்பு நிகழ்கின் றது. போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளது. இரவு பகலாகப் போராட்டம் நிகழ்கிறது. அடுத்துள்ள கேரளம், ஆந்திர வும் தமது ஆதரவினை வழங்குகின் றன. தமிழக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் பிரதமர் நரேந்திரமோடியை சந்திக்கச் சென்றார். ஆனால் நரேந்திரமோடியோ இதில் உள்ள சில சிக்கல்களைக் கூறியுள் ளனர். இந்தியா முழுவதிலும் இல்லாத தமிழகத்தில் மட்டுமே உள்ள பிரச்சினை பற்றி அவரால் உணரமுடியவில்லை. தமிழர்கள் தமது பண்பாட்டு வரலாற்றிற்கு குந்தகம் ஏற்பட்டால் எப்படியெல்லாம் கொதித்து எழுவார்கள் என்பது அவருக்குத் தெரியவில்லை. தமிழகத்தின் குழப்பநிலை காரணமாக தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீ ர்செல்வம் நேரடியாகப் பிரதமரை சந்தித் தார். முதலில் பிரதமர் உடனடியாக தம்மால் இதில் ஈடுபட முடியாது என மறுத்தாலும் தமிழகம் அவசர சட்டம் கொண்டு வந்தால் ஆதரிப்பதாகக் கூறினார். இதற்கமைய தமிழக அரசு அவசர சட்டம் கொண்டுவந்து ஜனவரி 23 இல் தமிழக சட்டசபையில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டுத் தடைபோடப் போராடும் 'பீற்றா' இன் இரத்தக்கறை படிந்த உண்மை கள் பல உள. இந்நிறுவனம் ஜல்லிக்கட்டை ஒரு மூடத்தனம், காட்டு மிராண்டித்தனம் என நீதிமன்றத்தில் வாதாடி வருகின்றது. அத்துடன் செல்லப் பிராணிகளை

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)



# மு.க. ஸ்டாலின் Vs வி.கே. சசிகலா: பலம் – பலவீனம்

# தமிழக அரசியல் இன்று

-சிவதாணு -

கடந்த இதழ் தொடர்ச்சி.................

படித்துப் பெரிய பதவிகளில் இருக்கும் பெண்கள், கல்லூரி மாணவிகள், தினக் கூலித் தொழிலாளிகள் என எல்லாத் தரப்புப் பெண்களும் ஜெயலலிதாவை தங்கள் மன நெருக்கடிகளுக்கு ஒரு வடிகாலாகவே பார்த்தார்கள். அது ஓட்டுகளாகவும் மாறியது கடந்தகால யதார்த்தம். ஆனால், அதே பெண்கள்தான் இன்று,

33 ஆண்டுகள் ஜெயலலிதாவுடனேயே இருந்த, அவரது 'உடன்பிறவா சகோதரி' சசிகலா மீது மிகப்பெரும் வெறுப்பை வெளிப்படுத்துகிறார்கள். சமூக வலைதளங்களில் மட்டுமல்ல வீடு, பேருந்து, அலுவலகம், பொது இடம் எனத் தமிழகம் முழுக்க எங்கும் பெண்கள் மத்தியில் இதனைக் காண முடிகிறது. ஜெயலலிதா சந்தித்த சோதனைகளுக்கு எல்லாம் காரணமே சசிகலாவும் அவரது உறவுகளும்தான் என்று இந்தப் பெண்கள் (ஆண்களும்) நம்புகிறார்கள்.

எல்லாவற்றையும்விட மேலாக தற்போது ஜெயலலிதா மரணத்தில் நீடிக்கும் மர்மம் கொலைப் பழியாகவே மாறிச் சுற்றுகிறது. இந்த வெறுப்பை எல்லாம் எப்படித் தனக்கு ஆதரவாக மாற்றுவது என்பது சசிகலாவுக்கு முன்னால் உள்ள பெரும் சவால்.

எந்த எதிர்ப்பும் காட்டாமல் இப்போது சசிகலா தலைமையை ஏற்றுள்ள அதிமுக நிர்வாகிகளும்கூட மிச்சமிருக்கும் ஆட்சிக் காலத்தின் சுவையறிந்தே இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை. இனிமேல் இங்கே வாய்ப்பில்லை எனத் தெரிந்தால் தயங்காமல் வெளியேறி, வாய்ப்புள்ள கட்சியில் சேரக்கூடியவர்கள்தான் அனைவரும்.

தொண்டர்களின் ஆதரவையும் மக்கள் செல்வாக்கையும் பெற்றால் மட்டுமே எதிர்காலத்தில் இவர்களை சசிகலாவால் தக்க வைக்க முடியும்.

அதிமுகவின் உண்மையான பலம் அதன் அடிமட்டத் தொண்டர்கள்தான். அவர்கள் ஆதரவை எப்படிப் பெறப்போகிறார் சசிகலா?

## மு.க. ஸ்டாலின்: தனிக்காட்டு ராஜா!

'என் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே தெரியவில்லை' என்று 2011-2016 ஆட்சிக் காலத்தில் பேசினார் ஜெயலலிதா. இன்று பேசியவர் மறைந்துள்ள நிலையில், இந்த வாசகங்கள் அவரது எதிர்கட்சித் தலைவரான ஸ்டாலினுக்கே மிகவும் பொருந்தியுள்ளது காலச் சக்கரத்தின் விசித்திரம். ஜெயலலிதா என்ற பலமான போட்டியாளர் மறைந்து, அடுத்த பலமான எதிரிகள் எனச் சொல்லும்படி எவரும் இல்லாமல், ஸ்டாலின் முன்னால் தமிழக அரசியல் களம், அவருக்கு சாதகமாக அடங்கிக் கிடக்கிறது. இன்று ஸ்டாலின் முதல்வராக இல்லாமல் இருக்கலாம்.

ஆனால், இன்றைய தேதியில் தேர்தலை சந்தித்து முதல்வராகும் சக்தியுடையவர் தமிழகத்தில் ஸ்டாலின் மட்டுமே என்பதை மதிமுகவினரே ஒப்புக்கொள்வார்கள்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மு.க. ஸ்டாலினின் மிகப்பெரிய பலவீனம், கருணாநிதியால் வாரிசாகத் திணிக்கப்பட்டவர் என்று அவர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத்தான். ஆனால், 'தலைவரின் மகன் என்பதால் சிறப்பு சலுகைகள் கிடைத்தது என்றாலும், அதனாலேயே இன்றைய நிலையை ஸ்டாலின் அடைந்துவிடவில்லை' என்று காட்டுவதற்கு ஏற்ப, படிப்படியாகவே ஸ்டாலினின் வளர்ச்சி செயல்படுத்தப்பட்டது.

இன்று அதுவே ஸ்டாலின் செயல் தலைவரானதை விமர்சிப்பவர்களுக்குப் பதிலாகவும் தரப்படுகிறது. அந்தப் பதில் சுருக்கமாக இதுதான்... 'பள்ளிக்கூட மாணவராக இருந்தபோது, 14 வயதிலேயே திமுக உறுப்பினராகி அரசியலில் அடியெடுத்து வைத்த ஸ்டாலினின் அரசியல் அனுபவம், 50 வருடங்களைக் கடந்தது. முதலில் தான் வசித்துவந்த கோபாலபுரம் பகுதியிலேயே அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்ட ஸ்டாலின், 1967-1968இல் தன் பள்ளிக்கூட நண்பர்களை இணைத்து கோபாலபுரம் இளைஞர் திமுக என்ற அமைப்பினை முடி திருத்தும் கடையில் ஏற்படுத்தி தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, அதன்பின்னர் வட்டப் பிரதிநிதி, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர், இளைஞரணி மாநிலச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர் என்று இந்த 50 வருடங்களில் ஒவ்வொரு படியாக முன்னேறி, திமுகவில் பொருளாளர் என்ற இன்றைய நிலைக்கு வந்துள்ளார்.

1984 முதல் தேர்தலில் தோல்வியடைந்தாலும் அடுத்து களம்கண்ட 1989, 1996, 2001, 2006, 2011, 2016 என ஆறு சட்டசபைத் தேர்தல்களிலும் தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளார். சென்னை மாநகராட்சி மேயர், உள்ளாட்சித் துறை அமைச்சர்,



துணை முதல்வர் எனத்தான் வகித்த பதவிகளில் தன் நிர்வாகத் திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

மேயர் பதவியில் இருந்தபோது, மாநகரின் துப்புரவுப் பணிக்கு முன்னுரிமை அளித்தது, சிறுசிறு மேம்பாலங்களைக் கட்டி போக்குவரத்து நெரிசலைக் குறைத்தது போன்ற பணிகளால் சென்னை மக்களிடையே ஸ்டாலினுக்கு பெருத்த வரவேற்பு கிடைத்தது.

'எல்லாம் சரிதான். ஆனால், தலைவரது கருணையும் தலைவர் மகன் என்ற பயமும் இல்லாமல் இருந்திருந்தால், இவை எல்லாம் நடந்திருக்குமா? ஸ்டாலினுக்குப் போட்டியாக இருப்பார்கள் என்பதாலேயே வைகோ போல் தன்னெழுச்சியாக உருவாகி வந்த எத்தனை தலைவர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.


ஆனாலும், தனக்குப் பின்னர் வைகோ மீண்டும் எழுச்சி பெற்று விடுவாரோ என்ற பயம் கலைஞருக்கு இருந்தது. இன்று அந்தப் பயத்துக்குத் தேவையே இல்லை என்னும் அளவுக்கு வைகோ வீழ்ந்து விட்டார். அவரின் இன்றைய வீழ்ச்சி, ஸ்டாலின் அரசியல் களத்தில் முன்னேறிச் செல்வதை மிகச் சுலபமாக்கியிருக்கிறது.

இன்றைய தேதியில் ஸ்டாலினுக்குப் போட்டியாக ஒருவர் உதயமாக வேண்டும் என்றால், அது கலைஞர் குடும்பத்துக்குள் இருந்துதான் வரவேண்டும். ஆனால், அண்ணன் மு.க. அழகிரியும் தங்கை கனிமொழியும் தங்கள் அதரடி மற்றும் ஊழல் வழக்குகளால் ஸ்டாலின் பாதையை மேலும் சுலபமாக்கிவிட்டார்கள். ஆக, கட்சிக்குள் ஸ்டாலின் பாதை தெளிவாகி விட்டது.

ஆனால், தந்தை கருணாநிதியின் சாமர்த்தியம் ஸ்டாலினிடம் இல்லை என்பதே நிதர்சனம். வெற்றிக்காக சமரசம் செய்து கொள்ளும் குணம் ஸ்டாலினிடம் இல்லை என்பது 2016 சட்டசபைத் தேர்தலில் அவரது பெரும் பலவீனமாகப் பார்க்கப்பட்டது. ஸ்டாலின் கொஞ்சம் இறங்கி வந்திருந்தால் தேமுதிக _ திமுக கூட்டணி அமைந்து இன்று ஸ்டாலினே முதல்வராக இருந்திருக்கக்கூடும்.

இப்போதும்கூட, ஜெயலலிதா மறைவும் அதனைத் தொடர்ந்து தமிழக அரசியல் களத்தில் நிகழ்ந்து வருவனவும், அரசியல் காய் நகர்த்தல்களில் திமுகவுக்கு சாதகமான அம்சங்கள்தான். இப்படியொரு சூழ்நிலையைக் கையாள்வதில் கலைஞர் சமர்த்தர். ஆனால், ஸ்டாலினோ மிக நிதானமாகவே இந்தச் சூழ்நிலையைக் கையாள்கிறார். அந்த வகையில் தனது தந்தையிடம் இருந்து ஸ்டாலின் கற்றுக் கொள்ள இன்னும் அரசியல் பாடங்கள் ஏராளம் இருக்கின்றன.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ஜல்லிக்கட்டு...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

வளர்ப்போரின் அனுசரணையுடன்43 மில்லியன்களை வருடமொன்றிற்கு வருவாயாக ஈட்டி வருகிறது. கருணைக் கொலை என்ற பெயரில் விலங்குகளை அழித்தும் வருகிறது. 30 இலட்சம் உறுப்பினர்களையும் வைத்துள்ளது. நேதன் கினொக்ராட் என்ற சமூக ஆர்வலர் இதுபற்றிப் பல அதிர்ச்சியான தகவல்களை வெளியிட்டார். கடந்த 11 ஆண்டுகளில் 30 ஆயிரம் விலங்குகளை இந்நிறுவனம் கொன்றிருக்கிறது. கருணைக்கொலை என்ற பெயரில் சத்தமின்றி விலங்குகள் அப்புறப்படுத்தப் படுகின்றது. ஜல்லிக்கட்டுக் காளைகள் இல்லாமல் செய்துவிட்டால் கலப்பினக் காளைகளை தமிழகத்திற்குக் கொண்டுவர முடியும். கால்நடை மருந்து நிறுவனங்கள், மாட்டுத்தீவன நிலையங்கள் இந்தத் தடைக் குப்மட்டும்பின்னால் உள்ளன.

ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் காளைச் சண்டை (Bull fighting) என்பது மிகப் புகழ்பெற்றதொரு மாட்டு சண்டையாகும். '**running bulls**' என்ற கருத்துப்பட ஸ்பானிய மொழியில் 'Corrida detoros' என அழைக்கப்பட்ட இக்காளைச்சண்டை பிரான்ஸ், போர்த்துக்கல் நாடுகளிலும் நடைமுறையில் உள. மெக்சிக்கோ, கொலம்பியா, ஈகுவடோ, பெரு நாடுகளிலும் உள. வரலாற்று ரீதியில் ஆரம்பித்த இவ்விளையாட்டும் முதலில் காளை வழிபாடாகவும், பலியிடுதலுமாகவே இருந்தன. செல்வந்தர்களின் விளையாட்டாக ஸ்பெயினில் தொடங்கி காளையை கொல்வது வரையில் சென்றுள்ளது. இந்தக் காளைகளுக்கு தமிழகக் காளைக்கு உள்ள 'திமில்' பகுதி கிடையாது. கோபத்தையூட்டச் சிவப்பு நிறத் துணியை முன்னே பிடிப்பர். பிராணிகளுக்கு நிறக்குருடு (**Colour Blind**) உள்ளது. காளைகளின் இரத்தமும் சிவப்பானதே. காளை அடக்குபவர் உருக்கால் ஆன கத்தியை வைத்திருப்பார். உண்மையில் இங்கு காளைகள் துன்புறுகின்றன. காட்சிக்கு வைக்கப்படுகின்றன. வருடா வருடம் 24,000 காளைகள் 30 மில்லியன் மக்கள் முன்பு கொலையாகின்றன. மார்ச் முதல் ஒக்ரோபர் வரை இது நடை பெறுகின்றது. கி.பி 771 முதல் இந்தச் சண்டை இடம் பெறுகிறது. கொலம்பியாவில் இதனை தடைசெய்யும் இயக்கம் தோன்றிய தால் ஸ்பெயினில் **Catalonia** பகுதியில் 2010இல் தடைசெய்யப்பட்டது. பனாமாவில் 2012,



மெக்சிக்கோ 2013இல் தடைசெய்யப் பட்டது. ஸ்பெயினிலும் எத்தனையோ காளைகள் இறந்தன. மக்கள் காயமடைந்தனர். பார்சிலோனா என்ற இடத்தில் 600 வருடங்களாக நடந்த காளைச் சண்டை தடைசெய்யப் பட்டது. ஸ்பெயினின் பல பாகங்களிலும் இதனை தடைசெய்யப் போராட்டங்கள் இன்னமும் நடைபெறுகிறது. நாட்டையும் மக்களையும் பிரித்துப்போட்டுள்ளது.எனினும் 7 அல்லது 8 நாடுகளில் தொடர்கிறது. ஸ்பெயினில் தொடர்ந்தும் இவ்விளையாட்டு அமோக ஆதரவுடன் நடைபெறுகிறது. பீற்றாவால் இதைத் தடைசெய்ய முடியவில்லை.

உலகிற்கு மனிதாபிமானம், மிருகபக்தி பற்றிக் கூறும் கனடாவில் '**Seal**' என்னும் கடற்பிராணி கொடூரமான முறையில் வேட்டையாடுவது அமோகமாக உள்ளது. வருடாவருடம் கடற்பிராணியின் வேட்டை இலட்சக்கணக்கில் உள. நோர்வே, ரஷ்யா, கிரீன்லாந்திலும் இவ்வேட்டை உள. கனடாவில் பிறந்த குட்டி சீல்களை பிடிப்பது தடைசெய்யப்பட்டாலும் இதனை தடை செய்ய முடியவில்லை. இது ஒரு முக்கிய யதார்த்தமாகும். இங்கும் இதனை தடைசெய்யக் கோரி பல பிராணிவதை சங்கங்கள் களத்தில் உள. இது நாட்டுக்கு ஒரு வெட்கம் (**Shame**) என்று பதாதை களுடன் பேராடி வருகின்றனர். இதனைக் கூட பீற்றாவால் நிறுத்த முடியவில்லை.

இந்நிலையில் மிருகவதை தடுப்பு சட்டத்தில் தமிழகத்துக்கு விதி விலக்கு அளித்து தமிழக அரசு சட்ட திருத்த மசோதா கொண்டு வந்தது. இம்மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்த நிலையில் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசின் சட்டத்துறை, கலாசாரத் துறை, சுற்றுச்சூழல் துறை மற்றும் உள்துறை அமைச்சகங்கள் ஜனவரி 27, 2017 இல் ஒப்புதல் அளித்திருந்தன. இதையடுத்து ஜனாதிபதியின் ஒப்புதலுக்கும் இம் மசோதா அனுப்பி வைக்கப்பட்டது. ஜனவரி 30, 2017 ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் தமிழக சட்டசபையின் மசோதாவுக்கு ஒப்புதல் தெரிவித்தார். இதனால் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதற்காக இருந்த அனைத்து முட்டுக்கட்டுகளும் அகற்றப்பட்டன. ஜனாதிபதி தற்போது ஒப்புதல் அளித்துள்ள இந்தச் சட்டம் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் தமிழக அரசு இதை கசற்டில் வெளியிடும். இதனிடையே தமிழக அரசின் இந்த மசோதாவுக்கு எதிரான அமைப்புகள் தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்பு விசாரணைக்கு வர உள்ளது. இந்நிலையில், ஜல்லிக்கட்டுக்கு உலக பிரசித்தி பெற்ற அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் ஆகிய இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்த விழாக்குழுவினர் முடிவெத்திருந்தனர். அதன்படி, அவனியாபுரத்தில் பெப்ரவரி 5ம் திகதி ஜல்லிக்கட்டு நடைபெற உள்ளது. பாலமேட்டில் பெப்ரவரி 9ம், அலங்காநல்லூரில் பெப்ரவரி 10ம் திகதியும் ஜல்லிக்கட்டு நடைபெறும் என விழாக்குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் காளைச்சண்டையை நிறுத்தவும் கனடாவின் வடபகுதியில் Seal ஐ கொடூரமாகக் கொல்வதை நிறுத்தவும் முடியாத பீற்றா தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டை நிறுத்த முனைவது ஏன்?

# தமிழக...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று இப்போது சொல்கிறார்கள். ஆனால், அதுவும் அரசி யல்வாதிகளின் வழக்கமான கண் துடைப்பாக இருக்கலாம் என்று சந்தேகப் பட்டுத்தான் நிரந்தரச் சட்டம் வரும் வரைக்கும் போராட்டத்தை தொடர்வோம் என்றோம். அந்தளவு நமது அரசியல் வாதிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முதல்நாள் தொடங்கி ஒவ்வொரு நாளும் போராட்டத்தை மிகக் கவனமாகக் கையாண்டு வந்தோம். கடைசி நேரத்தில், போராட்டம் 90 சதவீதம் வெற்றியடைந்துவிட்டது என்று தெரிந்ததுமே, ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடக்கூடாதே என்று கூடுதல் கவனத்தோடு களத்தில் இருந்தோம். ஆனாலும், கடைசி நாளில் கலவரங்கள் வெடித்துவிட்டன. ஏழு நாட்களும் ஒழுக்கமான முறையில் போராட்டம் நடத்தி வந்தவர்கள், எப்படி கடைசி நாளில், அதுவும் நாங்கள் கேட்டது கொடுக்கப்பட்ட பிறகு, வன்முறையைக் கையில் எடுப்போம். நிச்சயமாக அந்த வன்முறைகள் என்னால் மாணவர்களும் இளைஞர்களும் செய்ததில்லை" என்றார், சென்னை மெரினாவில் போராட்டத்தில் ஈடுபட்ட செல்லக்குமார். ஆனால், மாணவர்கள் போர்வையில் பலர் போராட்டத்துக்குள் ஊடுருவி இருந்தது உண்மைதான் என்கிறார் திருநெல்வேலி ராம்குமார். "எனக்கு 42 வயதாகிறது. இது வரையிலும் இப்படியொரு போராட்டத்தை நான் பார்த்ததே இல்லை. இந்த இளைஞர்



களிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. இவர்கள் உலக நாடுகள் எல்லாவற்றிற்குமே முன்மாதிரியாக மாறி விட்டார்கள். அதோடு, இனி எந்தத் தவறு நடந்தாலும் குரல்கொடுப்போம் என்ற பயத்தையும் அரசுக்கு காண்பித்திருக்கிறார்கள். சுயநலங்களை மறந்து ஒற்றுமையாக போராடிக் கொண்டிருந்தவர்கள், கட்சிக் காரர்கள் உள்ளே வந்தபோது, "அண்ணே, இங்க அரசியல் வேணாம்ணே. கட்சிக் கொடிய வெளிய விட்டுட்டு வாங்க சேர்ந்து போராடலாம்" என்று பொறுமையாக சொல்லிப் புரியவெச்சாங்க. ஆனாலும், பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்பு களைச் சேர்ந்த கும்பல்கள் போராட்டத்துக்குள் புகுந்து கலந்துவிட்டார்கள். அவங்களோட நோக்கமெல்லாம் தேசியக் கொடிய எரிக்கிறதுலயும் குடியரசு தினத்தை புறக்கணிப்போம் என்பதுமாகத்தான் இருந்தது. எதுவும் அசம்பாவிதங்கள் நடந்துவிடுமோ என்று பயந்து கொண்டுதானிருந்தோம். இப்படி உள்ளே புகுந்தவர்கள்தான் போராட்டத்தை வன்முறைக் களமாக மாற்றிவிட்டார்கள்" என்றார்.

## புதிய அரசியல் சக்தி

சரி, போராட்டம் முடிந்துவிட்டது. இனி இந்த மாணவர்கள் கூட்டம் என்ன ஆகும்? "2015 டிசம்பர் மாதம் சென்னையை மழையும் வெள்ளமும் பாதித்தபோது மக்களுக்கு உதவுவதற்காக தன்னிச்சையாக ஒருங்கிணைந்தவர்களில் பெரும் பான்மையானோர் ஜல்லிக்கட்டு போராட்டத்திலும் ஈடுபட்டார்கள். அவர்கள் கடந்த ஒரு வருடத்தில் சமூக ஊடக உரையாடல்களின் மூலம் அரசியல் பிரக்ஞை கொண்டவர்களாக மாறியிருக்கிறார்கள். ஈழப்போர், மீனவர் பிரச்சினை, முல்லைப் பெரியார் அணை, காவிரி நீர், சசிபெருமாள் மரணம், இடிந்தகரை போராட்டம், மணல் மற்றும் கனிம கொள்ளைகள், அரசியல் கட்சிகளின் ஊழல்கள், சாதி வன்கொடுமைகள், பணமதிப்பு நீக்கம், விவசாயிகள் தற்கொலை ஆகியன பற்றிய விரிவான விவாதங்களே ஜல்லிக்கட்டு தடை நீக்க போராட்டத்திற்கு வித்திட்டிருக்கின்றன. இவர்களுக்கு தலைமை இல்லை எனினும் ஒவ்வொருவரையும் ஃபேஸ்புக்கில் மூன்று லட்சம் பேர் வரை பின்தொடர்கிறார்கள். வாட்சப்பிலும் பெரிய குழுக்கள் இயங்குகின்றன. இந்த இளைஞர்கள் புதிய அரசியல் சக்தியாக திரள்வதற்கான வாய்ப்புகள் அதிகம். புதிய அரசியல் விழிப்புணர்வினை நோக்கி தமிழகம் நகர்ந்துகொண்டிருக்கிற். இதுவே ஒரு கலாச்சார மறுமலர்ச்சி காலமாகவும் அமையக்கூடும்" என்கிறார் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சியாளர் எம்.டி. முத்துக்குமாரசாமி.

நம்முடன் பேசிய ஓய்வு பெற்ற நீதிபதி ஹரி பரந்தாமனோ, "மாணவர்களின் இந்த எழுச்சியைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு பொருளாதார கோரிக்கைக்காகத்தான் மக்கள் திரள்வார்கள் என்பது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் மொழிக்காக மக்கள் திரண்ட போதே நிரூபிக்கப்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

# தமிழக...

38ஆம் பக்கத்தொடர்ச்சி

பட்டிருக்கிறது. இப்போது இரண்டாவது முறை. தமிழர் பண்பாடு, தமிழர் கலாசாரமான ஏறுதழுவுதலுக்காக மக்கள் திரண்டிருக்கிறார்கள்.

சமீப வருடங்களில் மீத்தேன், முல்லைப் பெரியாறு, காவிரி, விவசாயிகள் மரணம், டிமானிட்டைசேஷன் என என்னென்ன பிரச்சினைகள் இருக்கிறதோ எல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்ந்துவிட்டது. இதன் கூட்டு விளைவுதான் மாணவர்கள், இளைஞர்கள், ஐடி ஊழியர்கள் என பலரையும் திரளாகப் போராட்டத்தில் பங்கெடுக்க வைத்திருக்கிறது. அரசியல் கட்சிகளின் மீதான நம்பிக்கையின்மையின் வெளிப்பாடு இந்த போராட்டத்தின் பலமாக இருந்தது. எல்லா அரசியல் கட்சிகளுமே தங்கள் வாக்குக்காக, அதிகாரத்திற்காக இருக்கிறார்களே தவிர, உண்மையில் உரிமைகளை மீட்டெடுக்க முன்வரவில்லை என்பதை மாணவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதனால்தான் எந்த அரசியல் கட்சிகளையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். அதேசமயத்தில் சினிமாக்காரர்களையும் கூட உள்ளேவிடாமல்தான் இருந்தனர். அதில் ஒருசிலர் அலங்கா நல்லூருக்குப் போனார்கள். வேறு சில இடங்களுக்கும் வந்தார்கள். போராட்டத்தில் ஒரு சிலர் வந்து பேசினார்கள் என்று சில நடிக முகங்கள் இருக்கலாம். ஆனால், போராட்டத்தில் நடிகர்களை நம்பித்தான் திரண்டார்கள் என்று சொல்லமுடியாது. யாரை நம்பியும் போராட்டக்காரர்கள் போராட்டத்தில் இறங்கவில்லை.

இவர்களை எல்லாம் இணைத்தது இணையம். முகநூல், வாட்ஸப், வியாபாரப் போட்டியில் இருக்கக்கூடிய ஜியோ கொடுத்த இலவச இணைப்பு என எல்லாமும் இந்த ஒருங்கிணைப்புக்கு உதவி செய்திருக்கிறது. ஆனால் இது தமிழர் அடையாளத்துக்காக, தமிழர் கலாசாரத்திற்காக தன்னெழுச்சியாக நடந்தது. இதில் எல்லாவற்றுக்கும் மேல் 'தமிழன்டா' என்ற வார்த்தைதான் முன்னால் இருந்தது. நிச்சயம் கடைசியில் நிகழ்ந்த வன்முறைக்கான காரணம் போராட்டக்காரர்கள் அல்ல. தமிழக அரசு ஒரு கட்டத்துக்கு பிறகு வேறுவிதமாக இதைக் கையாண்டதுதான் காரணம். சட்ட நகலை பார்த்த பிறகுதான் போராட்டம் கைவிடப்படும் என்று போராட்டக்காரர்கள் அறிவிக்கிறார்கள். ஆனால், அதற்குள் போராட்டத்தில் கலந்துகொண்ட முக்கியமான ஆட்கள் போராட்டத்தைக் கைவிட கோரினார்கள். எனவேதான் அவர்கள் மேலும் இவர்களுக்கு சந்தேகம் உருவாகிவிட்டது.

மாநில அரசு அவசர சட்டத்தைக் கொண்டு வந்தது பாராட்டுக்குரியது. ஆனால், கடைசியாக அமைதியாக போராடிய மாணவர்களை கையாண்ட முறையால், அரசு இதற்கான பாராட்டைப் பெற முடியாமல் கண்டனத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அரசு வெளிப்படையாக இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. நிச்சயம் மாணவர்கள் போராட்டம் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. இதேமாதிரி எதிர்காலத்திலும் முக்கியப் பிரச்னைகளுக்காக மாணவர்கள் கூட வேண்டுமென்பது மாணவர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பலருடைய எதிர்பார்ப்பு" என்றார்.

### அரசியலுக்கு வருவார்களா?

மாணவர்களின் போராட்டக் களத்தில், அவர்களுக்கு ஆதரவாக கடைசிவரை நின்று குரல் கொடுத்தவர் இயக்குநர் வா. கவுதமன். அவரிடம் பேசினோம். "இந்த மாணவர்களின் எழுச்சி இத்துடன் முடிந்துவிடாது. இந்தப் போராட்டத்தின் விளைவாக மாணவர்களுக்கு ஏற்பட்ட அரசியல் புரிதல் தேர்தல் நேரத்தில் நிச்சயம் பிரதிபலிக்கும். 'சும்மா இந்தப் பசங்க போராடுவாங்க. நாளைக்குத் தனித் தனியாக பிரிந்து அவர்கள் வேலையை பார்க்க போய்விடுவார்கள். நம்ம வழியில் குறுக்கிட மாட்டார்கள்' என்று அரசியல்வாதிகள் இப்போது நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர்கள் நினைப்பது பொய்க்கும். சிலர் அவர்களின் இயலாமையால், "இப்போது ஜல்லிக்கட்டுக்காக போராடிய மாணவர்கள் ஈழப் பிரச்சனையில் ஏன் குரல் கொடுக்கவில்லை. காவிரி, முல்லைப் பெரியாறு பிரச்னையின்போது எங்கே போனார்கள்?" என்று கேள்வி எழுப்புகிறார்கள். எல்லா காலங்களிலும் மாணவர்களுக்குள், இளைஞர்களுக்குள் உணர்வுகள் கொதித்துக்கொண்டுதான் இருந்தது. அதை ஒரு முகப்படுத்தும் சூழல் வரவில்லை. இப்போது, வாடிவாசல் வழியாக காளைகள் சீறுவதை தடுத்ததுவுடன், அவர்கள் சீறி வெளியே வர காரணமாகிவிட்டது.

நான் மாணவர்கள் மத்தியில் இருந்து பார்த்த அனுபவத்தில் சொல்கிறேன், இவர்கள் அரசியல் அறியாதவர்கள் அல்ல. யார், யார் தங்களை ஏமாற்றுகிறார்கள் என்பது அவர்களுக்கு நன்றாக தெரிகிறது. ஆளும் அதிகார வர்க்கம், ஆண்ட அதிகார வர்க்கம், ஓட்டு வாங்கிய பெரிய கட்சி, சின்னக் கட்சி எல்லாவற்றையும் அடையாளம் தெரியும். எனவே, அடுத்து வரப்போகிற தேர்தல்களில் மறுபடியும் இளைஞர்களுக்குள் ஒரு ஒருங்கிணைப்பு வரும். இந்தத் திருடனுக்கு அந்தத் திருடன் பரவாயில்லை என்று மாற்றி மாற்றி வாக்களித்த நிலை நிச்சயம் மாறும். தங்கள் இனத்துக்கு உரிமை வாங்கித் தராத, உரிமை பெற்றுத் தருவதாக நாடகமாடுகிற அரசியல்வாதிகளை அடையாளம் கண்டு, அவர்களை முற்றிலும் அப்புறப்படுத்தும் வேலையை செய்வார்கள். இவ்வளவு அரசியல் தெளிவுள்ள இளைய சமுதாயம் கண்டிப்பாக அரசியலுக்கு வரணும். இந்த மண் மீதும் மக்கள் மீதும் பற்றுக்கொண்ட, இழந்த தமிழர் உரிமையை மீட்டெடுக்க, இந்த இனம் உலக அரங்கில் மீண்டும் கம்பீரமாக எழுந்து நிற்க, இந்த இணைஞர்களிடம் இருந்து ஒரு இளம் தலைவன், சுயநலமற்ற பரிசுத்தமான தலைவன் வரணும்" என்றார் நம்மிடம்.

இதற்கு பதிலாக இருக்கிறது, நம்முடன் பேசும்போது கோயம்புத்தூர் அகிலா சொன்னது: "நடந்து முடிந்த போராட்டம், ஜல்லிக்கட்டை மீட்டு தந்திருப்பதுடன், எங்களுக்கு நல்லதொரு அரசியல் பயிற்சிப் பட்டறையாகவும் இருந்தது. போராட்டத்துக்கு முன்னால் இருந்த இளைஞர்கள் இல்லை இப்போதிருக்கும் நாங்கள். வெற்றி கிடைத்துவிட்டது என்று எல்லோரும் கொண்டாடுகிறார்கள். ஆனால், நாங்கள் இன்னும் வெற்றி பெறவில்லை என்றே கருதுகிறோம். தமிழன் மேல் செலுத்தப்படுகிற எல்லா அடக்கு முறைகளையும் எதிர்த்து முழுமையான தீர்வுக்காக மீண்டும் குரல் கொடுப்போம்" என்றார் ஆக்ரோஷமாக.

நல்லதே நடக்கும் நம்பிக்கையுடன் இருப்போம்.



## Math tutorial 336

Answers to tutorial 335

1)Placing a spruce at either end leaves 5 cedars and 3 pines .They can be arranged in $\frac{8!}{5!3!}$ =56 ways

2)If the vectors are perpendicular $\overline{a.\,b}$=0 therefore -8+3y -98 =0 .y=106/3

3)9(a) Given $5^x$=15, find the value of$5^{2x-1}$ .

$5^{2x-1}=(5^x)^2.5^{-1}=15^2/5=45$

(b)$\log_3\sqrt{3}/2-\log_3\frac{1}{2}$=1/2

$\log_3 3-\log_3 2-\log_3 1+\log_3 2$

=1/2

4)Rewrite the equation as

$3^{2x-y}=3^3$ and $2^{3x+2y}=2^5$ equating exponents give 2x-y =3 and 3x+2y =5

Solving we get x=11/7 and y=1/7

Tutorial336

Questions

1)There are a few birds and some branches on a tree.If the birds sit at one on a branch ,then one bird wont have a branch to sit but if the birds sit at 2 on a branch then there will be an extra branch.How many birds and how many branches were there?( for grade 5&6)

2)Evaluatecos($\pi/8$) exactly

3)$If$ $\bar{u}$=(2,2,-1), $\bar{v}$=(3 ,-1 ,0) and $\bar{w}$=(1 ,7 ,8,) verify that.

$\bar{u}.(\overline{v+w})=\bar{u}.\bar{v}+\bar{u}.\bar{w}$

4)How many words with 3or4 letters can be formed if each word must contain a,e,i,o,uand y?

By Mr S.f.Xavier(Teacher) tel 6473409490-/4167322228

# அதிமுகவில்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி



சசிகலா குற்றம்சாட்டியுள்ளாரே?

காட்சிப்படுத்தத் தடை விதிக்கப்பட்ட வன விலங்குகளின் பட்டியலில் காளை சேர்க்கப்பட்ட பிறகும், ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்ட பின்னரும், திமுக ஆட்சியில் தனிச்சட்டம் கொண்டுவந்து, விதிமுறைகளை சரியாகக் கடைப்பிடித்து, ஜல்லிக் கட்டு நடத்தப்பட்டது. திமுக ஆட்சியில் இருந்தவரை ஜல்லிக்கட்டு தொடர்ந்து நடைபெற்றுத்தான் வந்தது. அதிமுக ஆட்சிக்கு வந்த பின்னர்தான் ஜல்லிக்கட்டு நிறுத்தப்பட்டது. 2014இல் ஜெயலலிதா ஆட்சியில் போட்டி விதிகளை சரியாகக் கடைபிடிக்காத காரணத்தால், பல உயிர்களைப் பலிவாங்கிய சம்பவம் நடந்ததால்தான், ஜல்லிக்கட்டு சுப்ரீம் கோர்ட்டால் தடை செய்யப்பட்டது. இதிலிருந்தே உண்மைக்குப் புறம்பாக யார் பேசுகிறார்கள் என்று மக்களுக்குப் புரியும்.

இன்னும் ஆறு மாதத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று துரைமுருகன் மீண்டும் மீண்டும் சொல்கிறாரே, என்ன காரணம்?

இன்று ஆட்சியில் இருக்கும் கட்சியில் பல குழப்பங்கள். அதன் அடிப்படையில் அவர் அப்படி சொல்லியிருக்கலாம். ஒருவர் முதல்வராக இருக்கும்போதே இன்னொருவரை முதல்வராக வரும்படி அமைச்சர்களே அழைக்கிறார்கள். அப்படியானால், இப்போது முதல்வராக இருப்பவர் தொடர்ந்து நீடிக்க மாட்டாரா என்னும் கேள்வி எழுகிறது.

இந்த நிச்சயமற்ற தன்மை ஆட்சி நிர்வாகத்தைப் பாதிக்கும். ஒருவர் முதல்வராக இருக்கும்போதே, அவரது அமைச்சர்களாக இருக்கக் கூடியவர்கள்கூட, அவருக்கு எதிராக இப்படிப்பட்ட கருத்துகளை தெரிவிப்பது அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை கொச்சைப்படுத்துவதாக இருக்கிறது.

தங்கள் தந்தையார் உடல்நலக் குறைவால் ஓய்வில் இருக்கிறார். தளபதி செயல் தலைவராகிவிட்டார். இந்நிலையில் உங்களின் எதிர்கால அரசியல் திட்டம் என்ன?

எதிர்காலத் திட்டங்கள் என்று எனக்கு எதுவும் கிடையாது. கட்சி தரும் பணிகளைத் தொடர்ந்து ஆற்றுவேன்.

உங்கள் அண்ணன்கள் மு.க. முத்து, மு.க. தமிழரசு, மு.க. அழகிரி, மு.க. ஸ்டாலின் _ இவர்களிடம் உங்களுக்கு பிடித்த விஷயம்?

முத்து அண்ணனின் திறமை இசைப் புலமை, தளபதியிடம் உழைப்பு, அழகிரி அண்ணனிடம் அவரது நகைச்சுவை உணர்வு, தமிழ் அண்ணனிடம் எளிமை.

# தமிழ் மரபுத் திங்கள் பாடல்

## நன்றி கூறிடுவோம் !

தமிழர் கலைபண் பாடுகளை _ என்றும்
தமிழர் காத்துப் பேணுதற்குத்
தமிழர் மரபுத் திங்களிது _ நமக்குத்
தந்த வாய்ப்பின் பயன்பெறுவோம்!

மரபுத் திங்கள் தையென்று _ தமிழர்
மகிழ்வாய்ச் சேர்ந்து கொண்டாட
அரசு வழங்கிய வாய்ப்பிதனை _ நாங்கள்
அனைவரும் ஏற்றிப் போற்றிடுவோம்!

தமிழர் கனவை நனவாக்கி - எமக்குத்
தந்த கனடா அரசிற்குத்
தமிழர் மரபின் வழிநின்று _ நாங்கள்
தயவாய் நன்றி கூறிடுவோம்!

இனவுணர் வோடெம் ஒற்றுமையை - இங்கு
எடுத்துக் காட்ட அணிதிரள்வோம்!
மனமகிழ் வோடு கைகோர்த்து _ எங்கள்
மதிப்பைக் காக்கப் பணிபுரிவோம்!

பல்லினம் வாழும் கனடாவில் - எங்கள்
பண்டைத் தமிழர் பெருமைகளை
சொல்லிட வைக்கும் திங்களிதில் - நம்
தொன்மை அறிந்து பிறர்க்குரைப்போம்!

எங்கள் பெருமை நாமறிவோம்! - பின்னர்
எடுத்ததைப் பிறர்க்கும் உணர்த்திடுவோம்!
எங்கும் என்றும் தமிழ்வளர்க்க _ இங்கு
இளையோர் சேர்ந்து முன்வருவோம்!




சபா. அருள்சுப்பிரமணியம், M.A.

# பைரவா...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆய்வு கூட வசதிகளும் இருப்பதோடு மாணவர்களும் மதிக்கப்படுவர்.

படத்தின் ஆரம்பத்தில் ஒருவர் சரியான நேரத்திற்குத் தனது வேலைகளைத் திட்டமிட்டு செய்தால் அவருக்கு நேரமின்மை போன்ற பிரச்சினைகள் வராது என்பதை பைரவா இருக்கும் அறைக்குத் தேநீர் கொண்டு வந்து வைக்கும் பிள்ளையின் செய்கை மூலம் விளங்கப்படுத்தப்படுகிறது.

சிறுவர், பெரியோர் பார்க்கக்கூடிய ஒரு நல்ல பொழுது போக்குப் படம் இது.

# திசை மாற்றிய...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

## Sugar Kisses



போதைப் பொருட்களும் கள்ளக் கடத்தல்களும் நிரம்பிய ஒரு சிறு மெக்சிக்கோ நகரம். நச்சோ பதின்ம வயதை எட்டிய சிறுவன். தந்தை அமெரிக்காவிற்கு சென்று விடுகின்றார். தாயுடனும் வளர்ப்புத் தந்தையுடனும் பாட்டியுடனும் தனது சகோதரங்களுடனும் ஒரு நகர மேல் மாடிக் குடியிருப்பில் வாழ்கின்றான். சுற்றுச் சூழல் குற்றங்கள் நிறைந்த பிரதேசம். வீட்டில் நச்சோவிற்கு ஆதரவாக எவருமில்லை. மைரா என்ற இவனது வயதை ஒத்த சிறுமியுடன் நட்பு ஏற்படுகின்றது. இருவருக்கும் பாலியத்தை பரிசோதித்துப் பார்க்கும் வயது. மாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட சோதனை ஒன்றில் வீழ்த்தப்பட்ட வீடியோ கமரா ஒன்று நச்சோவின் கைக்கு கிடைக்கின்றது. இதனைக் கொண்ட சில சூழல் தவறுகளை படம் பிடிக்கின்றான்.

நச்சோவின் நண்பி மைராவின் தாயார் மபியாச் சூழலில் செல்வாக்குடன் வாழ்கின் றார். இவரது காதலன் அந்த நகரத்து தாதா. அந்த நகரத்தில் உள்ள அதி உயர் கார் இவனுடையது. மைராவையும் பாலியல் தொல்லைக்குள்ளாக்கின்றான். நச்சோவின் கமாராவில் மைராவின் தாயின் காதலனின் விடயங்களும் படம் பிடிக்கப்படுகின்றன. இதற்கிடையில் இந்தக் கமரா நச்சோவை வீட்டை விட்டு வெளியேற்றுகின்றது. மைராவும் நச்சோவும் வீட்டு விட்டு வெளியேறுகின்றனர். இவர்களைத் துரத்துகின்றது மைராவின் தாயின் காதலன். இவர்கள் முடிவு என்ன;

குற்றங்கள் நிறைந்த மெக்சிக்கோ நகரப் பகுதிகளில் வாழும் சிறுவர்களின் அடையாளமாகவே நச்சோ காட்டப்படுகின்றான். நச்சோவும் மைராவும் அன்பைத் தேடுகின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் தங்க ளது அன்பை பரிமாறிக் கொள்கின்றனர். இருவரும் இச்சமூகத்தால் பாதிக்கப்பட் டோர். குற்றங்கள் வழங்கப்பட்டு பூசிக்கப்படும் சூழலில் வாழும் சிறுவர்களிடம் ஒழுக்கம் அறம் இயல்பு வாழ்வை எதிர் பார்க்கலாமா? இவர்களது வாழ்வின் எதிர் காலம் என்ன? இப்படம் இதனையே கேட்கின்றது. இயக்குனர் Carlos Cuarón பாராட்டப்பட வேண்டியவர். நவதாராள வாதத்தின் விளைவையும் இயக்குனர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## Chorus – Canada

சிறுவர் பாலியல் கொலைக்குள்ளான சிறுவன் கியுகோவின் மிகுதிப் பகுதிகள் நீண்ட காலத்தின் பின்னர் கண்டெடுக்கப்படுகின்றன. தொடர் கொலையாளி ஒருவனின் வாக்கு மூலத்தை அடுத்தே காணாமல் போன சிறுவனாக கருதப்பட்ட கியுகோ இறந்தது தெரிய வருகின்றது. டி. என். ஏ சோதனை மூலம் கியுகோவின் உடலின் இறுதிப் பகுதிகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. இவன் காணாமல் போனதன் பின்னர் கியுகோவின் பெற்றோர் பிரிந்து விடுகின்றனர். தந்தை மெக்சிக்கோவில் சிறு வேலைகள் செய்து வாழ்கின்றான். தாய் தனியாக இசைக் குழு ஒன்றில் கடமை புரிகின்றார். கியுகோ மரணம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து மெக்சிக்கோவிலிருந்து தந்தை மொன்றியல் வருகின்றார். தாயும் தந்தையும் தங்களது பிரிவின் காரணங்களை ஆராய்ந்து மீண்டும் புதிய வாழ்வு ஒன்றை வாழ முற்படுகின்றனர்.

கறுப்பு வெள்ளைப் படமான இப்படம் சிறுவர் பாலியல் கொலைகளை விமர்சிக்கின்றது. இன்று கணவன் மனைவிக்கிடையிலான உறவின் பாலமாக உள்ள குழந்தைகள் இல்லாதபோது வாழ்வில் தேடல்களும் தேவைகளும் குறைகின்றன. வாழ்வின் வெற்றிடங்களை தேடுகின்றது இப்படம். இறுதிப் பகுதியில் ஒரு பதினெட்டு வயது நிரம்பிய இளைஞன் கியுகோவின் பெற்றோரைச் சந்திக்கின்றான். கியுகோ இறந்த வருடம் எழுதிய கடிதம் ஒன்றை இவர்களிடம் கொடுக்கின்றான். கடிதம் கியுகோவால் இந்த இளைஞனுக்கு அப்போது எழுதப்பட்டுள்ளது. கடிதத்தை வாசிக்கும் பொழுது பெற்றோர் முகத்தில் தெரியும் ஒளி அபரிதமானது. அவ்விளை ஞனை தங்களது மகனாகவே பார்க்கின்ற னர். கியுகோ இருந்திருந்தால் இந்த இளைஞனைப் போல் இருந்திருப்பான். பார்வையாளர்களையும் கேள்வி கேட்க வைக்கும் கேள்வி. Francois Delisle சிறந்த இயக்குனர் என்பதற்குப் பல காட்சிகள் சான்று. துயரங்களும் கொடுமைகளும் நிறைந்தது இவ்வாழ்வு. இதனை இப்படத்தின் ஒவ்வொரு காட்சியும் சொல்லிச் செல்கின்றது.

இப்பொழுது எழுந்துள்ள கேள்வி இச்சூழல் சிறுவர்கள் இயல்பாக அறத்துடன் வாழக் கூடிய சூழலா?


நிரு
பிராண்ட்
Niru
BRAND ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

OPEN 7 DAYS A WEEK
9am-11pm



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

TIRE SPECIALS
NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95

FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV

BRAKE JOB
STARTING FROM $199

WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

TRANSMISSION FLUSH
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963



IP
IP GOLDHOUSE LTD.
Valentines day Special
Best Price and collection of 22-karat Singapore Jewelry.
Stone Jewelry no labor charges.
Diamond Jewelley
70% off
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD
DIAMOND BANDS SPECIALITY BANDS
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com
















**Free Real Estate Class - Call: 416.321.6969**










**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

